# தமிழ்க் காவிரி




சுந்தர சண்முகனார்

# தமிழ்க் காவிரி

ஆசிரியர் :
ஆராய்ச்சி அறிஞர்
**முனைவர் சுந்தர சண்முகனார்**
தமிழ்-அகராதித் துறைப் பேராசிரியர்-ஓய்வு
புதுச்சேரி-11.

**கிடைக்கும் இடம்**

**சுந்தர சண்முகனார்**
**புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்**
**38, வேங்கட நகர்,**
**புதுச்சேரி-11.**

தமிழ்க் காவிரி
முதல் பதிப்பு: அக்டோபர் 1988
உரிமை ஆசிரியர்க்கே.

"காவிரி ஊற்றின் கண் தூர்ந்தாலும்
வைகை ஊற்றின் வாய் திறந்தாலும்
தமிழன் உரிமையொடு காக்க வேண்டும்."

—பாரதி தாசனார்.

விலை ரூ. 12 - 00

அச்சிட்டோர் :
வெற்றி அச்சகம்,
91, டாக்டர் பெசன்ட் சாலை.
இராயப்பேட்டை, சென்னை-600 014.

# ஆசிரியர் முன்னுரை

காவிரி ஆறு பற்றிச் சில நூல்கள் வெளிவந்துள்ளன. அந்நூல்களினும் யான் காவிரி பற்றி எழுதியுள்ள இந்நூலின் அணுகு முறை வேறானது.

காவிரி பற்றிப் பல்வேறு நூல்களில் காணப்படும் பாடல்களின் தொகுப்பே இந்நூல் என்று கூறலாம்.

ஏறக்குறைய இற்றைக்கு (1988) இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சங்க நூல்கள் முதற்கொண்டு கி. பி. இருபதாம் நூற்றாண்டான இக்காலம் வரையுள்ள பல நூல்களின் பாடல்கள் யான் இந்நூல் எழுதத் துணை புரிந்துள்ளன.

காவிரி பற்றிய எல்லாப் பாடல்களையும் எடுத்துக் கொள்ளாமல், இன்றியமையாப் பாடல்களை மட்டும் பயன்படுத்திக் கொண்டுள்ளேன்.

பின் தந்துள்ள தலைப்புகட்கு ஏற்பப் பாடல்களை வகை தொகை செய்து பயன்படுத்தியுள்ளேன்.

இந்தக் காலச் சூழ்நிலைக்கு ஏற்ற இந்நூலுக்குப் பெரிய அளவில் ஆதரவு தர வேண்டுகிறேன்.

இந்நூலை நன்முறையில் விரைந்து அச்சிட்டு உதவிய வெற்றி அச்சகத்தாருக்கு எனது நன்றி உரியது.

**சுந்தர சண்முகன்**
5-10-1988

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | தோற்றுவாய் | 5 |
| 2. | உலக ஆறுகளுள் காவிரி | 11 |
| 3. | காவிரியின் புராண வரலாறு | 14 |
| 4. | காவிரியின் நிலநூல் வரலாறு | 20 |
| 5. | பெயர்க் காரணம் | 26 |
| 6. | பொய்யாத—வற்றாத காவிரி | 32 |
| 7. | காவிரியின் ஆழமும் பரப்பும் | 41 |
| 8. | காவிரி உரிமை | 45 |
| 9. | தமிழ்க் காவிரி | 53 |
| 10. | தெய்வக் காவிரி—நீராடல் | 59 |
| 11. | காவிரித் தாயும் சேய்களும் | 66 |
| 12. | காவிரியின் வரவு செலவு | 73 |
| 13. | காவிரியில் நீர் குறைதல் | 79 |
| 14. | காவிரிக்குக் கரை கட்டினமை | 82 |
| 15. | கங்கையும் காவிரியும் | 86 |
| 16. | மலைத் தலைய கடல் காவிரி | 91 |
| 17. | காவிரிக் கரைச் சூழல் | 95 |
| 18. | குடகு நாடு | 110 |
| 19. | கருநாடக நாடு | 113 |
| 20; | நீர் வேட்டல் | 124 |
| 21. | பிற்சேர்க்கை | 125 |
| 22. | கருத்து வழங்கிய கருவூல நூல்கள் | 130 |

# 1. தோற்றுவாய்

கெடிலம் ஆற்றைப் பற்றிக் 'கெடிலக் கரை நாகரிகம்' என்னும் பெயரில் ஐம்பத்தொரு விளக்கப் படங்களுடன் 650 பக்கங்கள் கொண்ட ஒரு நூலை எழுதி 1975-ஆம் ஆண்டு யான் வெளியிட்டேன். அதன் சுருக்கமாகக் 'கெடில வளம்' என்னும் பெயரில் ஒரு வழிநூல் பின்னர் வெளியிடப்பட்டது.

இப்போது காவிரியாற்றுப் பக்கம் சிறிது கவனத்தைத் திருப்பியுள்ளேன். காவிரி ஆற்று நீர்ப்பங்கீடு தொடர்பாகத் தமிழ்நாட்டுக்கும் கருநாடக நாட்டுக்கும் இடையே முரண்பாடு நிலவும் இந்தக் (198 ) காலத்தில் இந்த நூல் தக்க பயனளிக்கும் என எண்ணுகிறேன். இதற்காக மட்டும் இந்நூல் எழுதப்படவில்லை; கெடிலத்தைப் பற்றி எழுதிய யான் காவிரியைப் பற்றியும் நூல் எழுதவேண்டும் என்ற அவாவால் இதை எழுதினேன். இந்த வறிய காலத்தில் பக்கக் கட்டுப்பாடு -- விலைக் கட்டுப்பாடு மக்களின் வாங்கும் வளமை முதலியவற்றைக் கருத்தில் கொண்டு இந்நூலை மிகவும் சுருக்கமாகவே அமைத்துள்ளேன். எனினும், 'சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்' என்றபடி இந்நூலில் போதுமான செய்திகள் சுருக்கமாக இடம் பெற்றிருக்கும். இற்றைக்கு (1988) ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சங்க காலத்திலிருந்து இருபதாம்

நூற்றாண்டு வரை உள்ள பல இலக்கியங்கள் இந்நூலை எழுத எனக்குக் கை கொடுத்துதவியுள்ளன.

காவிரி நீர்ப் பங்கீடு பற்றியும் இங்கே ஓரளவு குறிப்பிடவேண்டியுள்ளது. கி.பி. 1924ஆம் ஆண்டு அப்போதிருந்த மைசூர் மாநில அரசுக்கும் சென்னை மாநில அரசுக்கும் இடையே ஏதோ ஒப்பந்தம் ஏற்பட்டது என்றும், அது ஐம்பதாண்டு காலத்திற்குச் செல்லுபடியாகும் என்று தீர்மானிக்கப்பட்டது என்றும், இப்போது அந்தக் காலக்கெடு முடிந்துவிட்டதால் முன்போல் தமிழ்நாட்டிற்குத் தண்ணீர்விட முடியாது என்று கருநாடக அரசு சொல்லுகிறதென்றும் செய்திகள் பரவலாகப் பேசப்படுகின்றன- எழுதப்படுகின்றன. ஆனால், அந்த 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் பின்வரும் குறிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன என்பதை மறந்துவிட முடியாது. அவை :

1. மைசூர் அரசு காவிரி தொடர்பாகக் கடைப்பிடிக்கும் எந்தத் திட்டத்தாலும், தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் இழப்பு ஏற்படலாகாது.

2. தமிழ்நாட்டில் 3,01,000 ஏகரா நிலப்பரப்புக்கு வேண்டிய 9,350 கோடி கனஅடி கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கம் கட்டிக் கொள்ளலாம் (இதுதான் மேட்டூர் அணை).

3. 1,25,000 ஏகரா அளவுக்கு வேண்டிய 4,500 கோடி கனஅடி கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத்தை (கிருஷ்ண ராச சாகரம்) மைசூர் அரசு கட்டிக் கொள்ளலாம்.

4. மற்றும், 1,10,000 ஏகருக்குத் தேவையான 4.500 கோடி கனஅடி கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கங் களை மைசூர் அரசு அமைத்துக் கொள்ளலாம்.

5. ஆனால், தமிழ் நாட்டிற்குப் போதுமான தண்ணீர் விடப்படும் என்னும் உறுதியின் அடிப்படையில் தான் மைசூர் அரசு நீர்த்தேக்கங்களை அமைக்கலாம்.

6. தமிழ் நாட்டிற்கு உரிய தண்ணீர் அளவைக் குறைக்காத அளவில்தான், மைசூர் அரசு எதிர்காலத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

மேற்கூறியுள்ள கருத்தமைந்த குறிப்புகள் 1924ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் உள்ளன. எனவேதான், 1974ஆம் ஆண்டோடு ஒப்பந்தம் செல்லுபடியாகாமல் முடிந்து விடவில்லை என்னும் ஒரு கருத்து தெரிவிக்கப்படுகிறது. மற்றும், இரண்டு அரசுத் தரப்பினரும் சிலமுறை கூடிப் பேசியும் உடன்பாடு எட்டவில்லை என்றும், இது உச்சிநீதிமன்றம் வரையும் சென்றுள்ளது என்றும், மீண்டும் நடுவர்கள் கூடிப்பேசி நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்கப்படுகிறது என்றும் சொல்லப் படுகிறது.

இதற்கிடையில், தமிழ்நாட்டார் புதிதாக மிகுந்த நீர் கேட்கவில்லை; இத்தனை காலமாக விட்டு வந்த நீரைக் குறைக்க வேண்டா என்றே கேட்கிறோம்- என்பதான ஒரு கருத்து தமிழ் நாட்டினரால் அறிவிக்கப் படுகிறது. தமிழ் நாட்டாரே மிகுந்த நீரைப் பயன் படுத்துகிறார்கள் - எங்கள் உரிமையை விட்டுக் கொடுக்க மாட்டோம் - முன்போல் தமிழகத்திற்குத் தண்ணீர் தரமுடியாது—என்பதாகக் கருநாடகத்தார்

தரப்பில் ஒரு கருத்து சொல்லப்படுவதாகவும் தெரிகிறது.

காவிரி நீரைத் தமிழ்நாடு மிகுதியாகப் பயன்படுத்துகிறது என்பது உண்மையானால், அதற்கு இயற்கையான – தக்ககாரணம் கட்டாயம் இருக்கும். அதாவது:— மலை தொடங்கிக் கடல்வரையில் உள்ள காவிரியின் ஓட்டம் 768 கி.மீ. ஆகும். இதில் கருநாடகத்தில் ஓடும் அளவு சுமார் 200 கி.மீ. தானாம். தமிழ்நாட்டில் ஓடும் அளவோ சுமார் 560 கி.மீ. தொலைவாம். கருநாடகம் ஒரு பங்கு என்றால், தமிழ்நாடு கருநாடகம் போல் 2¾ பங்கு உடையதாகும். எனவே, தமிழ்நாட்டில் மிகுதியான தண்ணீர் தேவைதானே! இப்போது, கருநாடகத்தில் செலவிட்டது போக, மிகுதியான அதாவது மிச்சமான தண்ணீரே தமிழ்நாட்டுக்கு விடப்படுகிறது.

'சத்திரத்துச் சோற்றுக்கு ஐயங்கார் பரிந்துரையா?' (சிபாரிசா) என்பது ஒரு பழமொழி. போதிய உரிமையுடைய தமிழ்நாட்டார் தண்ணீர் பெறுவதற்குப் பரிந்துரை தேவைப்படுகிறது. இங்கே இப்போது ஒரு கவுதமப் புத்தர் தேவைப்படுகிறார். புத்தர் காலத்தில் வடக்கே, உரோகிணி ஆற்று நீர்ப் பகிர்வு காரணமாகச் சாக்கிய நாட்டு அரசுக்கும் கோலிய நாட்டு அரசுக்கும் இடையே போர் மூண்டதாம். போரினால் விளைந்த குருதி (இரத்த) வெள்ளம் உரோகிணி ஆற்று நீரோடு கலந்து வெள்ளக் காடாக்கியதாம். அப்போது கவுதமப் புத்தர் ஆங்குச் சென்று போரை நிறுத்தி, நீர்ப் பகிர்வை ஒழுங்கு படுத்தி அமைதி காத்தாராம். இந்தச் செய்தியை, கவுதமப் புத்தர் காப்பியம் என்னும் நூலில் உள்ள,

"உரோகிணி ஆற்றில் ஓடும் நீரைப்
பயன்படுத் திக்கொளல் பற்றிப் பகைத்த
சாக்கிய அரசும் சாரயல் நாட்டுக்
கோலிய அரசும் கொடும்போர் புரிய,
ஆற்று நீருடன் அளவிலாக் குருதியும்
ஊற்றாய்ச் சேர ஓடியது வெள்ளம்;
அறிந்த புத்தர் அன்னவர் இருவரும்
நிறைந்த பகைகை நீங்கி ஒன்றிட
ஆவன புரிந்தே அமைதி காத்தார்;
மேவிடும் எல்லாம் மேலோர் முயலின்"

காதை 26—அடிகள் : 180—189.

மேலோர் முயன்றால் எல்லாம் ஒழுங்கு பெறும் என்பதாகப் பாடல் பகுதி முடிகிறது. புத்தரைப் போன்ற மேலோர் முயன்றால் காவிரி நீர்ப்பங்கீடும் ஒழுங்கு பெறும். அந்த மேலோர் யாரோ?—அல்லது அந்த மேலோர் குழு யாதோ? - அறிய முடியவில்லை.

வழக்கமான நீரைத் தமிழகத்திற்குத் தந்துவிட வேண்டும்—என்று, 1924—1974—1988—முதலிய ஆண்டுகளில் பேசித்தான் தீர்க்க வேண்டும் என்பது வேண்டா இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே இது தீர்க்கப்பட்ட முடிவு. தமிழ் நாட்டிற்கும் காவிரி ஆற்றுக்கும் உள்ள அழுத்தமான தொடர்புப் பிணிப்பு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழ் நூல்களில் பல கோணங்களில் விளக்கப்பட்டுள்ளது. இடையிலே அதை மாற்ற எவருக்கும் உரிமை இல்லை-என்பதை மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புகை வண்டியில் முதலில் ஏறியவர் பலகையில் படுக்கையை விரித்துப் படுத்துவிடின், பின்னால் வருபவர்

களின் நிலை என்னாவது? இவர் படிக்கட்டில் நின்று பயணம் செய்ய வேண்டியதுதான். இப்போது தமிழகமும் படிக்கட்டில் நின்று பயணம் செய்யவேண்டிய நிலையில்தான் உள்ளது.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு கரிகாலன் காவிரியின் இருமருங்கும் கரை கட்டியது எதற்காக? மேற்கிலிருந்து வந்த வெள்ளம் தமிழ்நாட்டை அழித்ததனால்தானே கரிகாலன் கரை கட்டினான். காவிரி வெள்ளத்தைத் தமிழ்நாட்டுக்கு வாராமல் அன்றே தடுத்து மேற்கே அணை கட்டியிருந்தால் மேற்குப் பகுதி என்னாகியிருக்கும் தெரியுமா? இத்தனை ஆண்டுகளாகச் சுமை தாங்கியாயிருந்து வந்த தமிழகம், அந்தப் பழைய உரிமையில், வழக்கம்போல் நீர்விட வேண்டுகிறது.

காவிரியோடு தமிழர்க்கு உள்ள மிக்க உரிமையை இரண்டாயிரம் ஆண்டு காலமாகத் தமிழ் நூல்கள் விளக்குவதை அறிவிப்பதே இந்த நூலாகும். இந்த நூலைக் கன்னடம், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பெயர்த்து நம் நாட்டினர்க்கு நிலைமையை விளக்கி அறிவிக்க வேண்டும்.

# 2. உலக ஆறுகளுள் காவிரி

'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்பது ஔவையின் நல்வழி மொழி. ஆற்றங்கரைப் பகுதிகளிலேயே, நெல், கரும்பு. போன்ற உயர்பொருள்கள் விளையும்நன்செய் வயல்கள் மிகவும் இருக்கும். இந்த வயல் சார்ந்த பகுதிக்கு மருத நிலம் என்று பெயராம். பிறவிடத்து மக்களைக் காட்டிலும் ஆற்றங்கரை மக்களே வாழ்க்கை வசதியிலும் கல்வி-கலைத்துறையிலும் நாகரிகத்திலும் மேம்பட்டிருந்தனர் என்பது வரலாறு கூறும் உண்மை. பெரிய நகரங்கள் பல உலகில் ஆற்றங்கரைகளில் அமைந்திருப்பது காணலாம்.

ஒன்றிய அமெரிக்கப் (U S.A.) பேரரசின் தலைநகராயிருந்ததும் முதல் பெரிய நகரமாயிருப்பது மாகிய நியூயார்க் 'பாசேயிக்' (Passaic) என்னும் ஆற்றின் கரையில் இருக்கிறது. பிரிட்டிசுப் பேரரசின் முதல் பெரிய நகரமாயும் தலைநகரமாயும் இருக்கும் இலண்டன் 'தேம்சு' (Thames) என்னும் ஆற்றின் கரையில் உள்ளது. பிரிட்டிசு இந்தியாவின் முதல் தலைநகரா யிருந்ததும் இப்போது இந்திய அரசின் முதல் பெரிய நகரமாயிருப்பதுமாகிய கல்கத்தா நகரம் 'ஃஊக்ளி' (Hooghly) என்னும் ஆற்றின் கரையில் அமைந்திருக்கிறது. மற்றும், பலநாடுகளின் பெரிய நகரங்கள்

பல, ஆற்றங்கரைகளில் அமைந்திருப்பது ஈண்டு எண்ணத்தக்கது.

இவ்வாறே, சோழ மன்னர்களின் தலைநகரங்களாய் விளங்கிய உறையூரும், புகார் என்னும் காவிரிப் பூம் பட்டினமும் காவிரிக் கரையில் அமைந்துள்ளமை ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

ஒன்றிய அமெரிக்காவில் ஓடும் மிசிசிப்பி என்னும் ஆறு 6784 கி.மீ. நீளம் உள்ளது. தென்னிந்தியாவில் ஓடும் காவிரி ஆறோ 768 கி.மீ. நீளமே உடையது. இதற்குக் காரணம் என்ன?

மிசிசிப்பி ஆறு அமெரிக்காவின் வடமேற்கில் ராக்கி மலைப் பகுதியிலிருந்து தோன்றி, தென்கிழக்கில் மெக்சிகோ வளைகுடாவில் வந்து கலக்கிறது. அது தோன்றும் இடத்திற்கும் முடியும் இடத்திற்கும் இடையே உள்ள பகுதி மிகவும் நீளமானது. அந்த இடைப் பகுதியில் ஒன்றிய அமெரிக்காவின் பல நாடுகள் உள்ளன. எனவே, அந்த ஆற்றின் நீளம் மிகுதியா யுள்ளது!

காவிரி ஆறோ, தமிழ்நாட்டின் மேற்கே உள்ள குடகு மலைப் பகுதியில் தோன்றி தமிழ்நாட்டுக் காவிரிப் பூம்பட்டினத்திற்கு வந்து வங்கக் கடலில் கலக் கிறது. காவிரி தோன்றும் இடத்திற்கும் முடியும் இடத் திற்கும் இடையே உள்ள தொலைவு குறைவு. இந்தியா வின் நிலப்பகுதி தெற்கே வரவரக்குறுகுகிறது; தென்னிந் தியாவில் மிகவும் குறுகியுள்ளது. எனவே, காவிரி தோன்றும் மேற்குப் பகுதியாகிய குடகுக்கும், காவிரி முடியும் கிழக்கு எல்லையாகிய காவிரிப்பூம்பட்டினத்திற் கும் இடைப்பட்ட தொலைவுகுறைகிறது. எனவேதான்,

மிசிசிப்பி, நைல், (ஆப்பிரிக்கா), அமேசான் (தென் அமெரிக்கா), எலிசி (சைபீரியா), காங்கோ (ஆபிரிக்கா), மெக்கன்சி (கானடா), வால்கா (ஐரோப்பா), பரானா (அர்சன்டைனா), கொலராடோ (வட அமெரிக்கா), பிரம்மபுத்திரா (இந்தியா), கங்கை இந்தியா) முதலிய ஆறுகளைப் போல், காவிரி ஆயிரக்கணக்கான கல் (மைல்) தொலைவு நீண்டிருக்கவில்லை.

இந்திய ஆறுகளுக்குள் நோக்கினாலும், காவிரி எட்டாம் இடத்தையே பெறுகிறது. இதனினும் நீள மான ஏழு ஆறுகளாவன :- பிரம்மபுத்திரா, கங்கை, சிந்து. மகாநதி, நர்மதை, கோதாவிரி, கிருஷ்ணா ஆகியவையாகும்.

தமிழ் நாட்டிற்குள் ஓடும் ஆறுகளுக்குள் வேண்டு மானால் காவிரிக்கு முதன்மை கொடுக்கவியலும். நீளத்தில்: கெடிலம்-112 கி.மீ.: பொருநை-120 கி.மீ.; கொள்ளிடம்-147 கி.மீ. வைகை-264 கி.மீ.; பாலாறு-368 கி.மீ.; தென்பெண்ணை-400 கி.மீ.; காவிரி-768 கி.மீ.-தொலைவாகும்.

உலக ஆறுகளுள் காவிரியின் நிலைமை இது. தான் தோன்றி முடியும் இடத்திற்கேற்பக் காவிரியின் நீளம் பல ஆறுகளினும் குறைவாயிருப்பினும், அதற்குக் கோயில் பெருமை, தெய்வ நீராடல் பெருமை, ஊர்ப் பெருமை, பெருமக்கள் பெருமை, கல்வி-கலைப் பெருமை, அரசாட்சிப் பெருமை, தலைநகர்ப் பெருமை, துறைமுகப் பெருமை, நீண்ட கால வரலாற்றுப் பெருமை, உயரிய பண்பாட்டுப் பெருமை முதலிய பெருமைகள் பலவும் உண்டு. இவை பின்வரும் பல்வேறு தலைப்பின் கீழ்த் தரப்பெறும் விளக்கங்களால் புலனாகும்.

# 3. காவிரியின் புராண வரலாறு

காவிரி ஆறு ஒரு பெண் நான்முகன் திருவருளால் கவேரன் என்னும் மன்னனின் மகளாய்க் காவிரி பிறந்தாள். கவேரன் மகள் ஆதலின் காவேரி என்னும் பெயர் ஏற்பட்டது. இவள் அகத்தியரை மணந்து கொண்டாள். அகத்தியரின் மனைவியாகிய உலோபாமுத்திரை என்பவள் இவளே. அகத்தியன் காவிரியைத் தண்ணீராக்கித் தன் செப்பிற்குள் (கமண்டலத்திற்குள்) அடக்கி வைத்திருந்தான். தமிழ் நாட்டின் மேற்கேயுள்ள குடகு மலையில் அவன் கமண்டலத்தைப் பக்கத்திலே வைத்து விட்டுத் தவம் செய்து கொண்டிருந்தான். இங்கு இங்ஙனம் இருக்க—

இந்திரன் அசுரர்க்கு அஞ்சிச் சீர்காழியில் ஒளிந்து கொண்டிருந்தான். அங்கே இறைவனை வழிபடுவதற்கு மலர் வேண்டி ஒரு பூந்தோட்டம் அமைத்தான். ஆனால் அதை வளர்க்கப் போதிய தண்ணீர் வசதி கிடைக்கவில்லை. எனவே, நீருக்கு ஏற்பாடு செய்யும்படி விநாயகரை வேண்டினான். அதனால் விநாயகர், காக்கை உருவங்கொண்டு அகத்தியன் இருந்த பக்கம் போய், அவனது கமண்டலத்தைக் கவிழ்த்து விட்டார். கமண்டலத்து நீர் ஆறாகப் பெருகித் தமிழ்நாடுவரையும் வந்து பல கால்களாய்ப் பிரிந்து பல இடங்கட்கும் நீர் வசதி செய்கிறது

பல ஆறுகளும் காவிரியில் கலந்தன. அதனால் அது அகண்ட காவிரியாயிற்று. தன்பால் குளித்தவர்களின் தீவினைகளைப் போக்கிற்று. அரிச்சந்திரன், அர்ச்சுனன், சுசீலை முதலியோரும், ஒரு பன்றி, மண்டூகம் (தவளை) முதலை முதலியனவும் காவிரியில் நீராட நன்னிலை (நற்கதி) கிடைத்தது — என்பது, காவிரித் தலப் புராணத்தின் சுருக்கமான வரலாற்றுப் பகுதியாகும். இவ்வாறு கந்த புராணம், கந்தபுராண வெண்பா முதலிய சில நூல்களிலும் கூறம்பட்டுள்ளது.

## பிற நூல்களிலிருந்து காவிரி வரலாறு

காவிரி தோன்றிய வரலாறு, நல்லாற்றூர்ச் சிவப்பிரகாச அடிகளார் இயற்றியுள்ள 'பிரபு லிங்க லீலை' என்னும் நூலின் விநாயகர் காப்புச் செய்யுளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பாடலாவது :—

"சுர குலாதிபன் தூய்மலர் நந்தனம்
பெருக வார்கடல் பெய்த வயிற்றினோன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரணம் நாளும் தலைக்கு அணி ஆக்குவாம்"

என்பது பாடல். சுரகுலாதிபன் = தேவர் குலத்தின் தலைவனாகிய இந்திரன். வார்கடல் பெய்த வயிற்றினோன் = பெரிய கடலை அருந்தி வயிற்றுக்குள் அடக்கி வைத்திருக்கும் அகத்தியன். மதகரி = யானை, விநாயகர். விநாயகரின் திருவடியைத் தலைக்கு அணியாக்குவோம்.

அகத்தியனின் கமண்டலம் தந்த காவிரி, மண் மடந்தையின் மார்பில் ஒரு முத்து மாலை அமைந்திருப்பது போல் தோன்றுவதாகச் சேக்கிழார் அருளிய பெரிய புராணத்தில் கூறப்பட்டுள்ளது. பாடல் :—

"ஆதி மாதவ முனி அகத்தியன் தரு
பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி
மாதர் மடந்தை பொன் மார்பில் தாழ்ந்ததோர்
ஓதநீர் நித்திலத் தாமம் ஒக்குமால்"-

(திருநாட்டுச் சிறப்பு—2)

காந்தமன் என்னும் அரசன் வேண்ட, அகத்தியரின் கமண்டலம் கவிழ்க்கப்பட்டதாக மணிமேகலைக் காப்பியம் கூறுகிறது: (மணிமேகலை-பதிகம் 10,11,12.)

"கஞ்ச வேட்கையின் காந்தமன் வேண்ட
அமர முனிவன் அகத்தியன் தனாஅது
கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை"

என்பது பாடல் பகுதி. கஞ்ச வேட்கை=நீர் வேட்கை. காந்தன் என்பதே அரசன் பெயர். மன் என்பது மன்னன். இதனை, மணிமேகலை நூலின் சிறைசெய் காதையிலுள்ள,

"கன்னி ஏவலின் காந்த மன்னவன்
இந்நகர் காப்போர் யாரென நினைஇ"—27, 28

என்னும் பகுதியாலும் அறியலாம்.

அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடலிலும் இவ் வரலாறு குறிப்பிடப்பட்டுள்ளது :—

"கன குடகில் நின்ற குன்றம்
தரு சங்கரன் குறுமுனி
கமண்டலம் கொண்டு முன் கண்டிடும்
கதி செய் நதி" (926)

என்பது பாடல் பகுதி. கவேரன் மகள் காவிரி என்னும் குறிப்பு மணிமேகலையிலும் உள்ளது :—

"தவாநீர்க் காவிரிப் பாவைதன் தந்தை
ஆங்கிருந்த கவேரன் கவேர வனமும்" (3-55, 56)

என்னும் பாடல் பகுதியால், காவிரிப் பூம்பட்டினத்தில் கவேரன் இருந்தான் என்பதும், அவன் பெயரால் கவேரவனம் என ஒன்று இருந்தது என்பது புலனாகும்.

அதே மணிமேகலையில் ஊரின் பெயர்க்காரணம் குறிப்பிடப்பட்டுள்ளது.

"கவேர கன்னிப் பெயரோடு விளங்கிய
தவாக் களி மூதூர்" (9-52, 53)

கவேர கன்னி என்பது காவிரி. அவள் பெயரால் அந்த ஊருக்குக் காவிரிப்பூம்பட்டினம் என்னும் பெயர் வழங்கப் பெற்றது. காவிரி கடலில் புகும் இடம் ஆதலின், காவிரி புகும் பட்டினம் என முதலில் இருந்த பெயரே, பின் காவிரிப்பூம்பட்டினம் எனப்பட்டது என்றும் கூறுவர்.

கவேரன் என்னும் முனிவர் நான்முகனை நோக்கித் தவம் செய்து விஷ்ணு மாயை என்னும் கன்னியை மணந்து கொண்டதாகவும், பின் அப்பெண் நான்முகன் கட்டளைப்படி ஆறு உருவு கொண்டு கவேர கன்னி என்றும் காவேரி என்றும் பெயர் பெற்றதாகவும் ஆக்கினேய புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

மற்றும் ஒரு செய்தி ஆக்கினேய புராணத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. குடகுநாட்டில் உள்ள சைய மலையில் நான்முகன் திருமாலை நோக்கித் தவம் புரிந்து

கொண்டிருந்தான். திருமால் அவன் எதிரில் ஆமலக (நெல்லி) மரமாக நின்றார். நான்முகன் தன் கமண்டலத்தில் இருந்த விரஞ்சா ஆற்று நீரைச் சங்கால் முகந்து முகந்து அம்மரத்தின் அடியில் ஊற்றி வழிபாடு செய்தான். அப்போது, நான்முகன் ஏவலால் பெருங்காற்று அடித்து, அங்கே ஒரு பக்கம் இருந்த அகத்தியரின் கமண்டலத்தைக் கவிழ்த்தது. அந்தக் கமண்டல நீர் நான்முகன் சங்கால் முகந்து ஊற்றிய நீருடன் கலக்கப் பெரிய ஆறு உருவாயிற்று. இதனால் அந்த ஆறு, சைய ஆமலக தீர்த்தம் என்றும் சங்க தீர்த்தம் என்றும் பெயர் பெற்றது. ஆனால் இப்பெயர்கள் வழக்கத்தில் மிகுதியாகப் பயன்படுத்தப் படவில்லை. காவேரி-காவிரி என்னும் பெயரே வழங்கப்படுகின்றது.

கம்பர் தன் மகளுக்குக் காவேரி என்னும் பெயர் சூட்டினார் என்பது ஈண்டு நினைவுகூரத் தக்கது.

காவிரியை ஒரு சோழன் கொண்டு வந்தான் எனவும் அவன் பெயர் சித்திர தன்வன் எனவும், சிங்காரவேலு முதலியார் தொகுத்துள்ள 'அபிதான சிந்தாமணி' என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. மற்றும், அதே நூலில், சசிசேகரச் சோழன் என்னும் சோழ மன்னன் காவிரியில் அணை கட்டியதாகவும் கூறப்பட்டுள்ளது. அவ்வரலாறாவது :—

இந்தச் சோழன் தேவ சோழன் என்பவனின் மகனாம். செண்பகவல்லி என்பாளை மணந்து கொண்டானாம். குணவல்லி என்னும் தன் மகளைப் பாண்டிய மன்னனுக்கு மணமுடித்துக் கொடுத்தானாம். எழுபது ஆண்டுகள் அரசாண்டானாம். அடிக்கடி காவிரியில் வெள்ளம் வந்து தொல்லை கொடுத்ததாம். அதற்கு மாற்று வேண்டி நாற்பதுநாள் இறைவனை நோக்கி

நோன்பு செய்தானாம். இறைவன் கனவில் தோன்றி அணை கட்டினால் பின்னர் அளவாகத் தண்ணீர் வரச் செய்கிறேன் என்று தெரிவித்தாராம். காவேரிப் பெண்ணும் கனவில் அவ்வாறு கூறினாளாம். இதன்படி இவன் அணை கட்டினானாம். இது ஒரு கதை.

இங்கே செயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணியில் உள்ள ஒரு குறிப்பு கவனிக்கத்தக்கது. சோழன் ஒருவன் காவிரியைக் கொண்டு வந்ததாக ஒரு செய்தி இந்நூலில் சுட்டப்பட்டுள்ளது.

"காலனுக்கு இது வழக்கென உரைத்த அவனும்
காவிரிப் புனல் கொணர்ந்த அவனும்..." 192

என்பது பாடல் பகுதி. இந்திரனுக்காகக் கமண்டலம் கவிழ்க்கப்பட்டுக் காவிரி வந்ததாகவும், காந்தன் என்னும் மன்னனுக்காக அவ்வாறு வந்ததெனவும் முன்னர்க் கண்டோம். இன்னொரு கதையும் இது தொடர்பாகச் சொல்லப்படுகிறது. காவிரி 'ஹொகெனகல்' நீர்வீழ்ச்சியாய்க் கீழே விழுந்ததும் ஒரு பெரிய பள்ளத்தாக்கில் மறைந்து விட்டதாம், பிறகு வெளிப்படவில்லையாம். நீதிவழுவா மன்னன் ஒருவன் தன் உயிரைக் கொடுத்தால் மீண்டும் காவிரி வெளிப்படும் என்று அறிவிக்கப்பட்டதாம். அதனை அறிந்த சோழ மன்னன் ஒருவன் தன் உயிரைத் தந்து காவிரியை வெளிக் கொணர்ந்து தொடர்ந்து ஓடச் செய்தானாம். இதுதான் சோழன் காவிரி கொண்டு வந்த ஒரு புது வரலாறு.

இதுகாறும் கூறியவற்றால், காவிரிக்கும் தமிழ்நாட்டிற்கும், காவிரிக்கும் சோழ மன்னர்கட்கும் இடையே இருந்த தொடர்பு அறிய வரலாம்.

# 4. காவிரியின் நிலநூல் வரலாறு

முன்னர்க் காவிரியின் புராண வரலாறு பார்க்கப் பட்டது. புராண வரலாறு அனைவராலும் நம்ப முடியாதது. ஆனால், நிலநூல் (பூகோளம்) முறைப்படி எழுதப்பட்டுள்ள வரலாற்றை யாரும் நேரில் கண்டு சரி பார்த்துக் கொள்ளலாம். நம்பவும் முடியும். இங்கே அது தரப்படும் :

தமிழ்நாட்டிற்கு மேற்கே உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் குடகு நாட்டுப் பகுதியில் சையம் என ஒரு மலை உள்ளது. இந்த மலையிலிருந்துதான் காவிரி ஆறு சுரந்து தோன்றுகிறது. இதன் தொடக்கப் பகுதியில் முப்பது சதுரஅடி அகலமும் இரண்டரை அடி ஆழமும் கொண்ட குளம் ஒன்று உள்ளது. இதிலிருந்து நீர் பலவாறு பிரிந்து வெளியேறுகிறது. இந்த இடம் தலைக்காவிரி எனப் பெயர் வழங்கப்படுகிறது. இங்கே காவிரித் தாய்க்குச் கோயிலும் கட்டப்பட்டுள்ளது. நீர் காடு மலைகளைக் கடந்து சென்று பாக மண்டலம் என்னும் இடத்தில்தான் ஆறு என்னும் வடிவம் பெறு கிறது. திப்பூர் என்னும் இடத்தில் ஃஏமாவதி என்னும் சிற்றாறும், பைரபூர் என்னும் இடத்தில் இலட்சுமண தீர்த்தம் என்னும் சிற்றாறும் காவிரியுடன் கலக்கின்றன.

கண்ணம்பாடி என்னும் இடத்தில் காவிரியின் குறுக்கே ஒரு பெரிய அணை கட்டப்பட்டுள்ளது. மைசூரை யாண்ட கிருஷ்ணராசர் என்னும் மன்னரின் முயற்சியால் இது உருவானதால், இந்த அணையின் நீர்ப்பகுதி 'கிருஷ்ணராச சாகரம்' என வழங்கப்படுகிறது. சாகரம் என்றால் கடல். கடல் போன்ற பரப்புடைய இந்த நீர்த் தேக்கத்தின் நீளம் 8,600 அடியாகும். உயரம் 134 அடியாகும்; பரப்பவவு 80 சதுர கி.மீ. ஆகும். மைசூர் நாடாகிய கர்நாடகத்தில் பன்னிரண்டு அணைகள் உள்ளன. அவற்றுள் கண்ணம்பாடி அணையே மிகவும் பெரியது. இத்தேக்கத்தில் 48,355 மில்லியன் கனஅடிநீர் தேங்க வாய்ப்புள்ளது. இது, 1932-ஆம் ஆண்டில் 2.6 கோடி உருபா செலவில் அமைக்கப்பட்டது. மூன்று இலட்சம் ஏக்கருக்கு நீர்ப்பாசன வசதி செய்ய வல்லது. இந்தத் தேக்கத்திலிருந்து மின்சாரம் உண்டாக்கப்படுகிறது.

காவிரி கௌதம ஆசிரமம் என்னும் இடத்தை அடைந்ததும் இரண்டாகப் பிரிந்து 13 கி.மீ. தொலைவு சென்றதும் மீண்டும் ஒன்றாகக் கூடுகிறது. இந்த இடைப்பட்ட இடத்தில்தான் சீரங்கப்பட்டணம் என்னும் புகழ்பெற்ற ஊர் உள்ளது. அரங்கம் என்றால் ஆற்றிடைக் குறை. காவிரியின் முதல் அரங்கம் இந்தப் பகுதிதான்.

காவிரி தலைக்காடு என்னும் இடத்தைத் தாண்டியதும் சிவசமுத்திரம் என்னும் இடத்தில் மீண்டும் இரண்டாகப் பிரிகிறது. பிரிந்த இரண்டு அருவிகளும் (சுமார்) 300 அடி உயரத்திலிருந்து நீர்வீழ்ச்சியாகக் கொட்டுகின்றன. மேற்குப் பக்க அருவிக்குக்'ககனசுக்கி' என்பதும் கிழக்குப் பக்க அருவிக்குப் 'பருசுக்கி' என்பதும் பெயர்

களாகும். இந்த இடைப்பட்ட இடம் காவிரியின் இரண்டாவது அரங்கமாகும். இங்கே காவிரி வடக்குத் தெற்காகப் பாய்ந்தோடுகிறது.

இந்த இடத்தைத் தாண்டியதும் இரண்டு மலைச் சரிவுகளுக்கிடையே பன்னிரண்டு அடி குறுக்களவு உடையதாய்க் காவிரி சிறிய உருவத்தில் காணப்படுகிறது. இந்த இடத்தில் காவிரியை ஓர் ஆடு கூடத் தாண்டிவிடும் என்னும் பெயரில்' 'மேகதாட்டு' என்னும் பெயர் பெறுகிறது காவிரி. கன்னடத்தில் 'மேக' என்றால் ஆடு; தாட்டு என்பது தாண்டுதல் ஆகும்.

மேகதாட்டுக் காவிரி பின்னர்க் கொங்குநாடு அடைகிறது; சேலம், கோவை, ஈரோடு மாவட்டங்களின் எல்லையாகப் பாய்கிறது. இப்பகுதியில் பல ஆறுகள் வந்து காவிரியுடன் கலக்கின்றன. இங்கே ஒரு நீர் வீழ்ச்சி உள்ளது. இது 'ஹொகெனகல்' நீர் வீழ்ச்சி எனப்படுகிறது. கன்னடத்தில் 'ஹொகெ' என்பதற்குப் புகை என்பது பொருள். கல்பாறையில் விழும் நீரின் துளிகள் புகைபோல் மேலெழுந்து காணப்படுவதால் இப்பெயர் வழங்கப்பட்டது.

பின்னர் ஓமலூர். திருச்செங்கோடு ஆகிய வட்டங்களில், வடக்குத் தெற்காக, சீதாமலை - பாலமலை என்னும் இரண்டு மலைகட்கிடையில் காவிரி ஓடுகிறது. மேட்டூருக்கு அண்மையில் அவ்விரண்டு மலைகளும் குறுகி வருகின்றன. அந்த இடத்தில்தான் 'மேட்டூர் அணை' கட்டப்பட்டுள்ளது. இது பற்றிய விவரம் வருமாறு:—

இது 176 அடி உயரமுள்ளது. 6.8 கோடி உருபா செலவில் 1934-ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. இது

மூன்று இலட்சம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசனம் செய்கிறது. நீர் அளிப்பதன்றி, மின்சாரம் உண்டாக்கவும் வாய்ப்பாக இருந்து வருகிறது. இதன்நீளம் 5,300 அடி. நீர் கொள்ளளவு 9350 கோடி கன அடியாகும்.

இதன் பினன்ர்ப் பவானி நகர்ப்பக்கம் வந்ததும் காவிரியுடன் பவானி ஆறு கலக்கிறது. பின்னர் ஈரோட்டையடுத்து நொய்யல் ஆறும் திருமணி முத்தாறும் கலக்கின்றன. தொடர்ந்து திருச்சி மாவட்டத்தில் புக்கதும் கரூர் மருங்கில் அமராவதி ஆறு சேர்கிறது. அடுத்துத் திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 14 கி.மீ. தொலைவில் உள்ள இலமனூர் என்னும் இடத்தில் காவிரியிலிருந்து கொள்ளிடம் என்னும் ஆறு பெரிய அளவில் பிரிகிறது. கொள்ளிடம் பிரிவதற்கு முன் உள்ள காவிரிப் பகுதி 'அகண்ட காவிரி' என வழங்கப்படுகிறது. கண்டம் என்றால் பிரிவு; அகண்டம் என்றால் பிரியாதது— என்பது பொருளாம். இங்கே காவிரியின் அகலம் ஏறக்குறைய ஒன்றரை கி. மீ. (ஒருமைல்) தொலைவு ஆகும். சோழ நாட்டில் காவிரி மேற்கு கிழக்காக ஓடுகிறது.

பிரிந்த நிலையில், காவிரி தென்கிளையாயும் கொள்ளிடம் வட கிளையாயும் உள்ளன. பிரிந்த இடத்திலிருந்து 27 கி.மீ. தொலைவு சென்றதும் காவிரியையும் கொள்ளிடத்தையும் உள்ளாறு என்னும் ஒரு சிற்றாறு இணைக்கிறது. இந்த உள்ளாற்றின் குறுக்கே ஓர் அணை கட்டப்பட்டுள்ளது. காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடையிலுள்ள பகுதி காவிரியின் மூன்றாவது அரங்க மாகும். இங்கேதான் திருவரங்கம் (ஸ்ரீரங்கம்) உள்ளது.

கிழக்கே வர வரக் காவிரியிலிருந்து பல ஆறுகள் பிரிகின்றன. அவை: வெண்ணாறு, வெட்டாறு, குட

முருட்டி, வடவாறு, அரிசிலாறு, வீரசோழனாறு, பாமணியாறு, திருமலை ராசனாறு—இன்ன பிறவாம்.

திருவையாறு (திருஐயாறு) என்னும் நகரத்தை அடுத்தேற் போல், வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி, கொள்ளிடம் என்னும் ஐந்து ஆறுகள் பாய்வதால், அந்நகரம் திருவையாறு என்னும் பெயர் பெற்றது.

உடம்பு முழுவதும் குருதிக் குழல்கள் (இரத்தக் குழாய்கள்) ஓடுவதைப் போல், சோழநாடு முழுவதும் காவிரியிலிருந்தும் அதன் கிளையாறுகளிலிருந்தும் நூற்றுக்கணக்கான கால்வாய்கள் பிரிந்துஓடி, மிக்க விளைவைத் தந்து, சோழநாட்டை 'வளநாடு' என்னும் பெயருக்கும் 'சோழ வளநாடு சோறுடைத்து' என்னும் சிறப்பிற்கும் உரியதாக்கிக் கொண்டுள்ளன.

காவிரி கால்களால் (கால்வாய்களால் வளப்படுத்து வதைக் கலிங்கத்துப் பரணி பின்வருமாறு கூறுகிறது.

"காலால் தண்டலை உழக்கும்
காவிரியின் கரை மருங்கு" 278

பல கிளைக் கால்வாய்கள் பிரியப் பிரியக் காவிரி குறுக்களவில் மிகவும் சிறுத்து விட்டது. மயிலாடுதுறைக் குக் கிழக்கே செல்லச் செல்ல ஆடுதாண்டும் காவிரியாகி விட்டது. இங்கெல்லாம் காவிரியின் குறுக்கே மூங்கில் பாலம் அமைத்து மக்கள் கடந்து செல்கிறார்கள். இவ் வாறு உயிர்ப்பு ஆறாக (சீவநதி) ஓடிவரும் காவிரி, தரங்கம் பாடிக்கு வடக்கே 16 கி.மீ. தொலைவில் கடலில் கலக்கிறது. இந்த இடத்திலேதான் மிகவும் புகழ் பெற்ற காவிரிப்பூம் பட்டினம் என்னும் சோழர் தலை நகரம் இருந்தது.

குடகு நாட்டிலிருந்து மைசூர் நாடு, கொங்குநாடு சோழநாடு ஆகியவற்றின் வழியாக ஓடிவந்து சோழ நாட்டில் வங்கக் கடலில் கலக்கும் காவிரியாற்று ஓட்டத்தின் தொலைவு அதாவது, குடகுச் சையமலையிலிருந்து காவிரிப் பூம்பட்டினம் அடையும் வரை உள்ள தொலைவு-768 கி.மீ. ஆகும்.

தமிழ்நாட்டில் ஓமலூர், திருச் செங்கோடு மாவட்டங்களில் வடக்குத் தெற்காக ஓடும் ஆறு, பின்னர்ச் சோழ நாட்டில் தென் கிழக்காக ஓடுகிறது என்பதை அக் நானூற்றில் உள்ள

"சிறைபறைந் துரைஇச் செங்குணக்கு ஒழுகும்
அந்தண் காவிரி போல" 76-11,12

என்னும் பாடல் பகுதி அறிவிக்கிறது. நாம் இப்போது இதை நேரிலும் காண்கிறோம். முன்னோரிடத்தில் காவிரி வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஓடுவதால்தான் இங்கே செங்குணக்காக ஓடுகிறது என்று சொல்ல வேண்டியது நேரிட்டது. செங்குணக்கு=நேர் கிழக்கு. பதிற்றுப் பத்து என்னும் நூலிலும்,

"செங்குணக்கு ஒழுகும் கலுழி மலிர்நிரைக்
காவிரி யன்றியும்..." 50-5.

என இது குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலநூல் சார்ந்த வரலாறு நம்பத்தக்க உண்மை வரலாறாகும். இன்னும், இரண்டாயிரம் ஆண்டிற்குமேல் முற்பட்ட காவிரியின் வரலாற்றைப் பழைய இலக்கியங்களின் துணைகொண்டு ஆராய்ந்து காணலாம். காவிரி பற்றி இடைக்கால நூல்களும் பிற்கால நூல்களும் தரும் குறிப்புகளையும் துணைக்குச் சேர்த்துக் கொள்ளலாம். இனி அந்தப் பயணத்தைத் தொடங்குவோமாக!

# 5. பெயர்க் காரணம்

**காவேரி — காவிரி**

கவேரன் மகள் காவேரி என்பதாகக் காவிரிக்கு ஒரு பெயர்க் காரணம் கூறப்படுகிறது. காவேரி என்பதைப் பெயராகக் கொண்டு இவ்வாறு கூறப்படுகின்றது. தமிழ்-தெலுங்கு-கன்னடம்-மலையாளம் ஆகிய பகுதிகளில் உள்ள பல ஊர்ப் பெயர்களும் மக்கள் பெயர்களும் மற்ற மற்ற பெயர்களும் திராவிடச் சொற்களாக இல்லாமல் ஆரியச் சொற்களாக இருப்பது அனைவரும் அறிந்த செய்தியே. மாயூரத்தை மயிலாடுதுறையாக மாற்றப் பட்ட பாடு போதுமே.

காவேரி என்ற பெயர் கொள்ளாமல், காவிரி என்பதைப் பெயராகக் கொண்டு, காவிரி ஆறு என்றால், (கா = சோலை) சோலைகளை விரித்து வளம் பெறச் செய்யும் ஆறு என்று சிலர் பொருள் கொள்வர்.

மற்றும் ஒன்று: அகத்தியரின் கமண்டலத்தைக் காகம் கவிழ்த்ததால் உண்டான ஆறு ஆதலின் இதற்குக் 'காகவிரி' என்னும் பெயர் சூட்டப்பட்டது. பின்னர் அது, காகவிரி-காகவிரி-காவிரி என்றாகிவிட்டது-என்பதாகக் கூறுவர் சிலர். கந்த புராணத்திலும் இந்தக்குறிப்பு உள்ளது.

பாரதிதாசனார் காவிரிதல் என்னும் அடிப்படையில் ஒரு பாடல் அளித்துள்ளார்: —

"பூவிரிந்து வானெங்கும் தேன் விரிந்து
பொன்விளைந் தாற்போலும் நறும்பொடி விரிந்த
காவிரிதல் போலெங்கும் விரிதலாலே
காவிரியாறு என்றார்கள் "

என்பது பாடல். விரிதல் என்பதை அடிப்படையாக வைத்து இப்பாடலில் பெயர்க் காரணம் கூறப்பட்டுள்ளமை காணலாம்.

**பொன்னி**

காவிரி யாற்றின் பெயரைக் கவேரன் மகள் காவேரி என வடமொழிப் படுத்துகிறார்களே என்று சிலர் சோர்ந்து போகின்றனர். அந்தச் சோர்வுக்கு ஒருமாற்று மருந்து உண்டு. அதுதான் பொன்னி. காவிரிக்குப் 'பொன்னி' என்னும் பெயர் ஒன்றுள்ளது. காவிரி தன் நீர் வளத்தால் நாட்டில் பொன் கொழிக்கச்செய்கிறது—அதாவது-செல்வம் பெருக்குகிறது—என்ற மாதிரியில் பட்டினப் பாலையில் ஒரு பெயர்க்காரணம் குறிப்பாகக் கூறப்பட்டுள்ளது.

" புனல் பரந்து பொன் கொழிக்கும்
விளைவறா வியன் கழனி (7, 8)

என்பது பட்டினப் பாலைப் பாடல் பகுதி. மற்றும், காவிரி மழைக் காலத்தில் வண்டலுடன் குழம்பாகச் செல்லும். அந்நீரில் பொன் துகள் போன்ற பொடி மின்னும். இதை யான் நேரில் நான்காண்டுகள் கண்டுள்ளேன். திருவையாற்றில் காவிரிக்கரையில் உள்ள அரசர்

கல்லூரியில் நான்காண்டுகள் படித்தவன் நான். பொன் துகள் போல் மின்னுவதைக் கண்டு யான் வியப்படைவதுண்டு. இந்தக் காட்சியைப் பாரதிதாசனார்,

" பொன் விளைந் தாற்போலும் நறுப் பொடி
விரிந்த... காவிரி

என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டிற்குப் பொன் கொழித்து வளமளிக்கும் காவிரிக்குப் 'பொன்னி' என்னும் பெயரைப் புலவர்கள் பலர் தத்தம் நூல்களில் நிரம்ப வழங்கியுள்ளனர். அவற்றுள் ஒரு சில வருமாறு:—

சேந்தன் திவாகரம் – இடப்பெயர்த் தொகுதியில் "பொன்னி காவிரி" (50) எனக் காவிரிக்குப் பொன்னி என்னும் பெயர் உண்மை அறிவிக்கப்பட்டுள்ளது.

"திருவரங்கத்துப் பெருநகரில் தெண்ணீர்ப்பொன்னி திரைக்கையால் அடிவருடிப் பள்ளி கொள்ளும் கருமணி',

குலசேகர ஆழ்வார் – திவ்வியப் பிரபந்தம்—பெருமாள் திருமொழி —1-1.

" பொன்னி சூழ்திருவரங்கா"-தொண்டரடிப்பொடி
யாழ்வார்—திவ்வியப் பிரபந்தம் (901)

"வளவர் பொன்னி வளந்தரு நாடு"-சம்பந்தர்
தேவாரம்

"சென்டாடு புனல் பொன்னிச் செழுமணிகள்
வந்தலைக்கும் திருவையாறே"-சம்பந்தர்தேவாரம்

"வரைவந்த சந்தோ டகிலுந்தி வந்து மிளிர்கின்ற
பொன்னி வடபால் - சம்-தே.

"தீர்த்த நீர் வந்திழிதரு பொன்னியின் பன் மலர்"-
சம்-தே.

"மத்த யானையின் கோடும் வண்பீலியும் வாரித்
தத்துநீர்ப் பொன்னி சாகரமேவு சாய்காடே-
சம்-தே.

(சேக்கிழாரின் பெரிய புராணத்திலிருந்து):—

"போலும் நான்முகனையும் பொன்னிமாநதி"(54)

"எம்பிரானை இறைஞ்சலின் ஈர்ம் பொன்னி
உம்பர் நாயகர்க்கு அன்பரும் ஒக்குமால்" (57)

"பானலந் துறைப் பொன்னி நீர்"

"செம்பியர் பொன்னி நாடு"- (502)

"சோழர் பொன்னித் திரு நாடு (1022)

"பூந்தண் பொன்னி... அளிக்கும் புனல் நாடு (1211)

"பொங்கு புனலார் பொன்னியின் இரண்டு
கரையும் (1571)

"வாய்ந்தநீர் வளத்தால் ஓங்கி மன்னிய பொன்னி
நாடு

ஒட்டக் கூத்தரின் நூல்களிலிருந்து) :—

"கொள்ளும் குடகக்குவடு அறுத்திழியத்
தள்ளும் திரைப் பொன்னி தந்தோன்"
(விக்கிரம சோழன் உலா-23, 24)

"சென்னிப் புலியேறிருத்திக் கிரிதிரித்துப்
பொன்னிக் கரைகண்ட பூபதி" வி. சோ. உ-25,26.

"பொய்யாத பொன்னிப் புதுமஞ்சனம் ஆடி"
வி. சோ. உ-87.

"மன்னர் குலப் பொன்னி ஆடுதிரால்
அன்னங்காள் நீரென் றழிவுற்றும்- வி. சோ. உ. 500

"பிழையாத பொன்னித் துறைவன் பொலந்தார்-
வி. சோ. உ-520

"மண் கொண்ட பொன்னிக் கரை கட்ட வராதார்"-
குலோத்துங்க சோழன் உலா-35

"முடுகிக் கரை எறிந்த பொன்னி"
இராச ராச சோழன் உலா-29

"பொன்னிக்கும் கோதா விரிக்கும் பொருனைக்கும்
கன்னிக்கும் கங்கைக்கும் காவலனை—சென்னியை
இ. ரா சோழன் உலா-493-94

"வற்றாத பொன்னி நதி"- குலோத்துங்க சோழன்
பிள்ளைத் தமிழ்-15

"பொன்னி யாற்றுப் புனல்போலத் தொடர்வ
துண்டாம்"-
பாரதிதாசனார்.

இன்னும், கந்த புராணம், கந்த புராண வெண்பா முதலிய பலப்பல நூல்களில் பொன்னி என்னும் பெயர் எடுத்தாளப்பட்டுள்ளது. ஆழ்வார்களால், பூம்புனல்

பொன்னி, வருபுனல் பொன்னி, வருநீர்ப் பொன்னி, செல்வப் புனல் பொன்னி, செழும் பொன்னி-என்றெல் லாம் 'பொன்னி' எனக் காவிரி செல்லமாக அழைக்கப் பெற்றுள்ளது.

காவேரி என்னும் பெயர் வடமொழிச் சார்புடையது என்னும் உளக் குறை உடையவர்கள், 'பொன்னி' என்னும் பொன்னான பெயரைக் கொண்டு உள்ளம் நிறைவு பெறுவார்களாக. (இந்நூலின் மேலட்டையில் காவிரி பொன் நிறமாக இருப்பதைக் காணலாம்)

# 6. பொய்யாத - வற்றாத காவிரி

இத்தக் காலத்தில் காவிரியாற்றில் தண்ணீர் கிடைக்காமையால் தமிழ்நாட்டு உழவர்கள் — தமிழ் நாட்டு மக்கள் — தமிழ் நாடு அரசு வருந்துவது கண் கூடு. இதற்காகக் கருநாடக அரசிடம் தமிழ்நாடு இரந்து கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருப்பதும் அன்றாட நாளிதழ்ச் செய்தியாகும்.

ஆனால், இதே காவிரி, பண்டைக்—காலம் முதல் அண்மைக் காலம் வரை பொய்க்காமல், வற்றாமல் — தப்பாமல்—பிழையாமல்—ஒழியாமல்நிலை திரியாமல் — தொடர்ந்து நீர்வளம் தந்து வந்துள்ளது — என்பதற்கு நிரம்ப இலக்கியச் சான்றுகள் உள்ளன. அவற்றுள் —சில வருமாறு :—

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை வெள்ளைக்குடி நாகனார் பாடிய புறநானூற்றுப் பாடல் :—

"அலங்கு கதிர் கனலி நால்வயின் தோன்றினும்
இலங்கு கதிர் வெள்ளி தென்புலம் படரினும்
அந்தண் காவிரி வந்து கவர் பூட்டத்
தோடு கொள் வேலின் தோற்றம் போல
ஆடுகண் கரும்பின் வெண்பூ நுடங்கும்
நாடெனப் படுவது நினதே" — (35)

கதிர் பரப்பும் ஞாயிறு கிழக்கே மட்டுமன்றி நான்கு திசைகளிலும் தோன்றினாலும், வடக்கே இருக்க வேண்டிய வெள்ளி தெற்கே செல்லினும் — அதாவது கோள் நிலையில் எந்த மாறுபாடு தோன்றினும்—சோழ நாட்டுக்குத் தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாமல் காவிரி யாறு நாடு முழுதும் நீர் ஊட்டுவதனாலே, வேலின் தோற்றம்போல் கரும்பு தோன்றும் சோழ நாடே நாடு எனப்படும் — என்பது பாடலின் கருத்து.

சோழன் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளி வள வனைக் கோவூர் கிழார் பாடிய புறநானூற்றுப் பாடல் (386) வருக: –

“குணதிசை நின்று குடமுதல் செலினும்
குடதிசை நின்று குணமுதல் செலினும்
வடதிசை நின்று தென்வயிற் செலினும்
தென்திசை நின்று குறுகாது நீடினும்
யாண்டு நிற்க வெள்ளி,யாம்
வேண்டிய துணர்ந்தோன் தாள்வா ழியவே (22-27)

வெள்ளி என்னும் கோள் (சுக்கிரன்) கிழக்கேயிருந்து மேற்கே செல்லினும், மேற்கே யிருந்து கிழக்கே சென்றாலும், வடக்கேயிருந்து தெற்கே சென்றாலும், இருக்கக் கூடாத தென் திசையை விட்டு அப்பால் செல்லாமல் அங்கேயே நீண்ட நாள் இருப்பினும், (கோள் மாறுபட்டதால் மழை வளம் குன்றினும்) எமக்கு வேண்டிய வளத்தை உணர்ந்து வழங்கும் சோழன் தாள் வாழ்க — என்பது பாடல் கருத்து.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை நல்லிறையனார் பாடிய பாடல் பகுதி வருமாறு (393):—

"கோடை யாயினும் கோடா ஒழுக்கத்துக்
காவிரி புரக்கும் நல்நாட்டுப் பொருந" (22, 23)

கோடைக் கால மாயினும் குன்றாமல் நீர் பாயும் காவிரி ஆறு காக்கின்ற நல்ல நாட்டின் மன்னனே— என்பது பாடல் கருத்து.

கடியலூர் உருத்திரங் கண்ணனார் இயற்றிய பட்டினப்பாலை என்னும் நூலின் முற்பகுதி வருமாறு :-

"வசையில் புகழ் வயங்கு வெண்மீன்
திசை திரிந்து தெற்கு ஏகினும்
தற்பாடிய தளி யுணவின்
புள்தேம்பப் புயல் மாறி
வான் பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத் தலைய கடற்காவிரி
புனல் பரந்து பொன் கொழிக்கும்
விளைவு அறா வியன் கழனி (1-8)

வெண்மீன் (வெள்ளி) தனது வட திசையினின்றும் தென் திசைக்குச் செல்லினும், அதனால், மழை நீரை உண்ணும் வானம்பாடி நீர் பெறாமல் வருந்தும்படி மழை பொய்யாமல் வானம் பொய்த்து விடினும், மலை தொடங்கிக் கடல் வரையும் தான் பொய்க்காமல் நீர் சுரந்து பாயும் காவிரியாற்றின் நீர் வளத்தால் பொன் கொழித்து விளைவு அறாத வயல்கள் — என்பது பாடல் பொருள்.

இளங்கோவடிகளின் சிலப்பதிகாரப் பாடல் பகுதி வருமாறு:—

"கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
கால்பொரு நிவப்பிற் கடுங்குரல் ஏற்றொடு
சூல் முதிர் கொண்மூப் பெயல் வளஞ் சுரப்ப...
காவிரிப் புதுநீர்..." (10—102—109)

சனி புகைந்தாலும் தூமகேது தோன்றினாலும் வெள்ளி தெற்கே ஏகினாலும் இடி மின்னலுடன் மழை பெய்து வளம் சுரக்கும்படியுள்ள காவிரிப் புது நீர் — என்பது கருத்து.

சீத்தலைச் சாத்தனார் இயற்றிய மணி மேகலையில் பதிகம் என்னும் பகுதியில் உள்ளது வருமாறு :—

"கோள்நிலை திரிந்து கோடை நீடினும்
தான்நிலை திரியாத் தண்தமிழ்ப் பாவை" — (24,25)

கோள்கள் நிலை மாறிக் கோடைக் காலம் நீடித்தாலும், தனது பழைய நிலையிலிருந்து மாறாமல் தொடர்ந்து நீர்வளம் நல்கும் குளிர்ந்த தமிழ்ப் பெண் காவிரி—என்பது கருத்து. இந்தக் கருத்தே, மேற்காட்டியுள்ள பாடல்களிலும் பொதிந்து கிடக்கிறது.

மேற்காட்டிய பாடல்களில் உள்ள 'கனலி நால்வயின் தோன்றினும்', 'வெள்ளி தென்புலம் படரினும்,' 'செலினும்', 'நீடினும்', 'ஏகினும்' 'புகையினும்'- என்பவற்றிலுள்ள 'உம்மைகள்' எதிர்மறை உம்மைகளாகும்.அதாவது, தோன்றாது — படராது—செல்லாது— நீடிக்காது—ஏகாது—புகையாது—எனப் பொருள் கொள்ளலாம். கோள்களின் நிலையில் தவறு நேரினும் காவிரியில் தண்ணீர் குறையாது என்றால், அப்படியொன்றும் தவறு நேர்ந்து விடாது—என்பது கருத்து.

இங்கே வான அறிவியல் கருத்து ஒன்று நினைவிற்கு வருகிறது:— மாப்பேருலகாகிய பிரபஞ்சத்தை (Uni-verse) ஆராயும் துறைக்கு ஆங்கிலத்தில் (Cosmology) என்னும் பெயர் வழங்கப்படுகிறது. Cosmos என்றால் ஒழுங்கு அமைப்பு என்று பொருளாம். உலகம் ஒழுங்கு அமைவுக்கு உட்பட்டிருத்தலின், Cosmos என்னும் சொல் உலகைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது.

உலகம் ஒழுங்கு அமைவுக்கு உட்பட்டதென்றால் என்ன? நாம் வாழும் பூவுலகம் முதல் எல்லாக் கோள்களும் எப்போதும் ஒரே மாதிரியாய் இயங்கிக் கொண்டிருப்பதுதான் அது. இதில் மாற்றம் நிகழாது. அப்படி மாற்றம் நிகழ்வதென்றால் எத்தனையோ ஆண்டுகட்கு ஒரு முறை மாற்றம் ஏற்படலாம். அப்படி ஏற்படினும், அம்மாற்றம் பல்லாயிரம் ஆண்டுகட்கு அப்படியே இருக்கும். எனவே கோள்கள் மாறா என்ற கொள்கையுடனேயே, புலவர்கள். கோள்கள் மாறினும் காவிரி நீர் தருவதில் மாறாது என்று கூறினர்.

மேற்கூறிய பாடல்களின்றி, இன்னும் பல நூல் பாடல்களில் தப்பாது காவிரி தண்ணீர் தரும் என்னும் கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. அவற்றுள் சிலவற்றையும் காண்போம்.

"பொய்யா மரபின் பூமலி பெருந்துறை......
மாஅ காவிரி மணம் கூட்டும்" (பட்டினபாலை: 105-116)

பொய்க்காமல் நீர்நிறைந்த துறைகளையுடைய காவிரி-கருத்து.

"வாழி யவன்றன் வளநாடு மகவாய் வளர்க்கும்
தாயாகி
ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாய் வாழி காவேரி.
ஊழி உய்க்கும் பேருதவி ஒழியா தொழுகல்
உயிரோம்பும்
ஆழியாள்வான் பகல் வெய்யோன் அருளே வாழி
காவேரி'
(சிலம்பு-7-கானல் வரி-27)

உலகம் அழியும் ஊழிக் காலம் வரை ஒழியாமல்— தவறாமல் காவிரி நீர் தந்து காக்கும்— கருத்து.

"தெய்வக் காவிரி தீதுதீர் சிறப்பும்
பொய்யா வானம் புதுப்புனல் பொழிதலும்"
(சிலம்பு-10-கட்டுரை-8,9)

வானம் பொய்க்காமல் புது நீர் பொழியப் பெற்றுச் சிறப்பு அடையும் காவிரி - கருத்து.

"செல்லல் காலையும்
காவிரி புரக்கும் நாடு கிழவோன்" -

(சிலம்பு - 27 - 170, 171) எத்தகைய துன்பக்காலத்திலும் காவிரி நீர் தந்து காக்கும் - கருத்து.

"தவா நீர்க் காவிரிப் பாவை"-மணிமேகலை - 3 - 55

நீங்காமல் நிற்காமல் நீர்தரும் காவிரிப் பெண் - கருத்து.

"ஏங்கா முகில் பொழியா நாளும் புனல் தேங்கும்
பூங்கா விரி நாடான்" - (முத்தொள்ளாயிரம் - 80)

மழை பொழியா நாளிலும் நீர் தேங்கி வழங்கும் காவிரி நாடன் சோழன் - கருத்து.

"ஆறே, காலம் அறிந்து உதவும் காவிரி தானே" -
(திவாகரம்)

தண்ணீர் வேண்டும் காலம் எல்லாம் அறிந்து காவிரி உதவும் - கருத்து.

"பூந்தண் பொன்னி எந்நாளும்
பொய்யா தளிக்கும் புனல் நாடு"
(பெரிய புராணம் - சண்டேசுவர நாயனர் - 1251)

பொன்னி என்னும் காவிரி பொய்க்காது எக் காலத்திலும் நீர் வழங்கும் நாடு சோழ நாடு - கருத்து.

"வாழிய மண்டல மால்வரை
வாழி குடக் கோழி மாநகர்
வாழிய வற்றாத காவிரி
வாழி வரராச ராசனே" -

(ஒட்டக் கூத்தரின் தக்கயாகப் பரணி - 812 - வாழ்த்துப்பகுதி) என்றும் வற்றாத காவிரி வாழ்க - கருத்து.

"வற்றாத பொன்னி நதி" - ஒட்டக் கூத்தரின்
குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் - 15
"பொய்யாத பொன்னிப் புது மஞ்சனம் ஆடி" -
"பிழையாத பொன்னித் துறைவன் பொலன்தார்" -

(ஒட்டக் கூத்தரின் விக்கிரம சோழன் உலா - 81 - 520)

அடுத்து, வில்லி பாரதம் - ஆரணிய பருவம் - அருச்சனன் தவநிலைச் சருக்கத்தில் உள்ள 24 ஆம் பாடல்:-

"நீவிரே யல்லீர் முன்னாள் நிலமுழு தாண்ட நேமி
நாவிரி கீர்த்தி யாளன் நளனெனும் நாம வேந்தன்
காவிரி என்னத் தப்பாக் கருணையான் சூதில்
தோற்றுத்
தீவிரி கானம் சென்ற காதை நும் செவிப்படாதோ?

இந்தப் பாடலில், சூதில் தோற்றுவிட்ட மன்னன் நளன், காவிரி ஆறுபோல் தப்பாமல் பலர்க்கும் வழங்கும் அருள் உடையவன் - எனப் பாராட்டப் பட்டுள்ளான்.

அடுத்துப் பாவேந்தர் பாரதிதாசரது பாடல் பகுதி ஒன்று வருக:-

"புகுந்து மொழிப் பேச் செல்லாம் பொன்னியாற்றுப்
புனல் போலத் தொடர்வதுண்டாம் அன்னார்
பாட்டில்" -

பொன்னியாம் காவிரி யாற்று நீர் தொடர்ந்து பாயும் என்னும் குறிப்பு இப்பாடல் பகுதியில் அமைந்துள்ளது. அடுத்துக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் இரண்டு பாடல் பகுதிகளைப் பார்க்கலாம்:

"கங்கை யமுனை காவிரி முதலிய
வற்றிலா நதிகளில் மடைகள் ஆக்கவும்" -
"வற்றலில் கங்கை காவேரி
வளஞ் செய் பரத நாட்டினிலே" -
(மலரும் மாலையும்)

கங்கையைப் போலவே காவிரியும் வற்றாதது என்னும் கருத்து இப்பாடல் பகுதிகளால் அறிய வருகிறது.

இங்கே 'கீட்ஸ்' (Keats) என்னும் ஆங்கிலக் கவிஞர்- ஆறு கூறுவது போல் கூறியுள்ள ஒரு பகுதி ஒப்பு நோக்கி மகிழ்தற்கு உரியது:-

"Men may come and men may go But go on for ever" -

மக்கள் வரலாம் - போகலாம்; ஆனால் யான் (ஆறு) எப்போதும் தொடர்ந்து ஓடுகிறேன் - என்பது கருத்து.

# 7. காவிரியின் ஆழமும் பரப்பும்

இப்பொழுது காவிரியில் தண்ணீர் சிறிதளவே விடப்பட்டு ஓடுகிறது. பண்டு ஆழம் காணமுடியாத அளவில் மிகவும் பெருகிப் பரந்து ஓடியது. இதுபற்றிய இலக்கியச் சான்றுகள் சில வருமாறு:-

அகநானூறு என்னும் நூலிலிருந்து:-

"பிண்ட நெல்லின் உறந்தை யாங்கண்
கழைநிலை பெறாஅக் காவிரி நீத்தம்"—6-6,7.

மிக்க நெல் விளையும் உறையூர்ப் பகுதியில், மூங்கில் கோல் நிலைபெற முடியாத அளவு காவிரி ஆழமுடைய வெள்ளமாக இருந்தது-கருத்து. இப்போது காவிரியின் குறுக்கே பலஇடங்களில் பாலம் கட்டியுள்ளனர். அந்தக் காலத்தில் இந்த வசதியில்லை. ஓடத்தின் துணைகொண்டு ஆற்றைக் கடக்க வேண்டும். இப்போதும் பாலம் இல்லாத சில பகுதிகளில் ஓடங்கொண்டு கடக்கின்றனர். ஓடம் 'பரிசல்' என்றும் சொல்லப்படும். ஓடக்காரன் நீண்ட மூங்கில் கோலை ஆற்றின் அடிமண்ணில் ஊன்றி ஊன்றி ஓடத்தை அப்பால் நகர்த்திக் கொண்டு போவான். மூங்கில் கோல் ஆற்றின் அடிமண்ணை எட்டித் தொட முடியாத அளவுக்கு ஆற்றில் மிகுந்த ஆழம் இருப்பதுண்டாம். அதுதான் 'கழைநிலை

பெறாஅக் காவிரி நீத்தம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கழை=மூங்கில் கோல். நீத்தம்-மிக்க வெள்ளம். ஆழமான வெள்ள நீரில் மூங்கில் கோல் நிலைபெற முடியவில்லையாம்.

"மழைமருள் பாஃறேறால் மாவண் சோழர்
கழை மாய் காவிரி"-அகநானூறு-10,11.

கழை மாய்தல் என்றால் ஓடக்கோல் ஆழத்தில் மாய்ந்து போதலாம் - மறைந்து போதலாம் - கோலுக்கு மேல் ஆழம் உள்ளதாம்.

'கழை யளந் தறியாக் காவிரி :- அகம்-32-10
மூங்கில் கோலால் அளந்தறிய முடியாத ஆழம்.

"நாடார் காவிரிக் கோடுதோய் மலிர்நிறைக்
கழையழி நீத்தம் சாஅய வழிநாள்"- அகம்-341-4,5

கோடு தோய்=கரையைத் தோய்ந்து மோதுகின்ற. மலிர் நிறை=மிகவும் பரந்து நிறைந்த வெள்ளம். கழை மாய்தல்=மூங்கில் கோல் மறைந்து போதல்-கருத்து.

"மலிந்து செல்ல நீத்தம், கடற்கரை மெலிக்கும் காவிரி"-அகம்-126-35- மிகவும் பெருகிச் செல்லும் வெள்ளம் கடற்கரையைக் குத்தி மோதுகிறதாம்.

"காவிரி மலிர் நிறை யன்னநின் மார்பு"-
ஐங்குறு நூறு-7-42.

"மிக்கு வரும் இன்னீர்க் காவிரி"-புறநானூறு- 43-22.

"கரை பொருது இரங்கு புனல் நெரிதரு
மிகு பெருங் காவிரி"-புறம்-174-7,8.

"விசைவண்டி ஏறினர் இரண்டு பேரும்
விரைகின்ற காவிரியின் வெள்ளம் போலே"-
பாரதி தாசனார்-குடும்ப விளக்கு-திருமணம்-11

புதுமண மக்கள், விரைந்து செல்லும் காவிரியின் வெள்ளம்போல் விரைந்து செல்லும் விசை வண்டியில் விரைந்து ஏறினராம்.

காவிரியின் பரப்பை, கடலும், காவிரியுமாய் அந்த இடம் உள்ளது' என்னும் மக்கள் வழக்காற்றினால் அறிந்து கொள்ளலாம். ஞானசம்பந்தர் காவிரிக் கரையில் உள்ள திருப்பழனம் என்னும் திருப்பதியைப் பற்றிய தமது தேவாரப் பாடலில் இந்தக் குறிப்பைத் தந்துள்ளார்.

"குலைவெஞ் சிலையான் மதில்மூன் றெரித்த
கொல்லே றுடைய அண்ணல்
கலவ மயிலும் குயிலும் பயிலும்
கடல்போல் காவேரி
நலம் அஞ்சுடைய நறுமாங் கனிகள்
குதிர்கொண் டெதிர் உந்திப்
பலவின் கனிகள் திரைமுன் சேர்க்கும்
பழன நகராரே"

என்பது பாடல், இதில், காவிரி கடல் போன்ற பரப்பு உடையது என்னும் குறிப்பு இருப்பதைக் காணலாம்.

இவ்வாறு இன்னும் பன்னூல்களில் காவிரியின் ஆழமும் பரப்பும் சொல்லப்பட்டுள்ளன. திருவையாற்றில் —

காவிரிக் கரையில் உள்ள அரசர் கல்லூரியில் யான் படித்தபோது, காவிரியின் அடியில் சென்று மண் எடுத்து வருவேன். காவிரியின் தொடக்கக் கரைப் பகுதியிலேயே மூன்று ஆள் ஆழம் இருக்கும். அந்த ஆழத்தின் அடியில் சென்று மண் எடுத்து வருவது எனக்கு வீர விளையாட்டாகும்.

இத்தகைய காவிரி இப்போது எப்படியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்குங்கால் வருத்தம் மிகுகிறது.

# 8. காவிரி உரிமை

**காவிரி நாடு- நீர் நாடு- உரிமை**

காவிரி பாயும் சோழ நாடு காவிரி நாடு, நீர் நாடு புனல் நாடு என்றெல்லாம் பெயர் வழங்கப் பெற்று காவிரியோடு உரிமை கொண்டாடப் பெற்றுள்ளது. சில நூல்களிலிருந்து சில பெயர் ஆட்சிகள் வருமாறு:-

"காவிரி மல்லல் நன்னாடு"-புறநானூறு-174-8

"நீள் நிலம் கண்டன்ன கொண்டல் வரும் காவிரி நாடு' — முத்தொள்ளாயிரம்-86

"பழுதில் காவிரி நாட்டின் பரப்பெலாம்-
சேக்கிழார்-பெரிய புராணம்-62

"காய்ந்தசெந் நெல்லின் காடுசூழ் காவிரி நாடு"-
பெ. புரா.

"பொன்னி அளிக்கும் புனல் நாடு"-பெ.புரா-1211
சூட்டிய வளர் புலிச் சோழர் காவிரி நாடு"-பெ.புரா

மேலுள்ள பாடல்களில் காவிரி நாடு, புனல் நாடு என்று நாடு குறிக்கப்பட்டுள்ளது. சுந்தரர் 'காவிரிக் கோட்டம்' என்று குறிப்பிடுகிறார்:-

"விதிர்த்த மேகம் மழை பொழிய
வெள்ளம் பரந்து நுரை சிதறி
அதிர்க்கும் திரைக் காவிரிக் கோட்டத்து
ஐயாறுடைய அடிகளே"-

"தேச மெங்கும் தெளிந்தாடத்
தெண்ணீர் அருவி கொணர்ந்தெங்கும்
வீசும் திரைக் காவிரிக்கோட்டத்து
ஐயா றுடைய அடிகளே"

என்பன, சுந்தரரின் திருவையாற்றுத் தேவாரப் பதிகப் பாடல் பகுதிகளாகும்.

பூவிரி பொலன் கழல் பொருவில் தானையான்
காவிரி நாடு அன்ன கழனிநாடு ஒரீஇத்
தாவர சங்கமம் என்னும் தன்மைய
யாவையும் இரங்கிடக் கங்கை எய்தினான்"-

பரதன் சென்றதைப் பற்றிய இப்பாடல், கம்ப ராமாயணம்-அயோத்தியா காண்டம்-கங்கை காண் படலத்தில் உள்ளது.

இன்ன பல இலக்கியப் பாடல்களால், காவிரியோடு சோழ நாட்டிற்கு உள்ள உரிமை புலப்படும்.

# காவிரியின் உரிமையாளர்கள்

சோழ மன்னர்கள் காவிரிக்கு உரிமை உடையவர் களாக இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர். மற்றும், சோழரின் மேலாட்சியின் கீழ்ச் சிற்றரசர்களா யும் குறுநில மன்னர்களாயும் இருந்த பண்ணன், பழையன், மத்தி, அம்பர்கிழான் அருவந்தை தாமான், நோன்றிக் கோன் முதலியவர்களும் காவிரியின் உரிமை யாளர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். அதாவது: அவரவர் ஆண்ட பகுதிகளிலும் காவிரியாறு ஓடியுள்ளது என்பது அறியப்படுகிறது. இனிப் பாடல் பகுதிகளைக் காண்போம்:—

**அகநானூற்றுப் பகுதிகள்:**

"மாவண் சோழன் கழைமாய் காவிரி அகம்-128-10

"கழல்கால் பண்ணன் காவிரி வடவயின்"—அகம் 177-16

"மாரி அம்பின் மழைத்தோல் பழையன்
காவிரி வைப்பின் போர் அன்ன"—(போர்-ஓர் ஊர்)
அகம்-186-15,16

"வலம்படு வென்றி வாய்வாள் சோழர்
இலங்கு நீர்க் காவிரி"-அகம்-213-21,23.

"பல்வேல் மத்தி கழாஅர் முன்றுறை"—

கழாஅர்=ஓர் ஊர். அகம்-226-8

"இழையணி யானைச் சோழன் மறவன் புனல்மலி புதவின் போஓர்க் கிழவோன் பழையன்"-அகம்-326-9,12

**புறநானூற்றுப் பாடல்கள்**

"நீயே, தண் புனல் காவிரிக் கிழவன்"-புறம்-58-1 சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைக் காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது இது.

"காவிரி அணையும் தாழ் நீர்ப் படப்பை நெல் விளை கழனி அம்பர் கிழவோன்"-புறம்-385-8,9 அம்பர் கிழான் அருவந்தையைக் கல்லாடனார் பாடியது இது.

"பழஞ்சோ றாயினும் முழங்கு நீர்ப் படப்பைக் காவிரிக் கிழவன்"-புறம்-399-1112 தாமான் தோன்றிக் கோமானை ஐயூர் முடவனார் பாடியது இது.

**களவழி நாற்பதுப் பகுதிகள்:**

"செங்கண் வரிவரால் மீன் பிறழும் காவிரி நாடன்"-

"காவிரி நாடன்"12

"காவிரி நீர்நாடன்"-24
மல்கிக் கரை கொன்றிழிதரு காவிரி நாடன்"-35

"காவிரி நாடன்" "புனல் நாடன்"-36

**பொருநராற்றுப் படை:**

"காவிரி நெல்லின் சிறைகொள் வேலி ஆயிரம் விளையுட்டாகக் காவிரி புரக்கும் நாடு கிழவோனே- 246—48

கரிகால் பெருவளத்தானை முடத்தாமக் கண்ணி யார் பாடியது இது.

**சிலப்பதிகாரம்**

புனல் நீர் நாடன் கரிகாலன்"-பொ. ஆ. படை வெண்பா-3

"கரிகாலன் காவிரி சூழ்நாடு"-பொ. ஆ. படை வெண்பா-1

எல்லா நாம்
காவிரி நாடனைப் பாடுதும் பாடுதும்
பூவிரி கூந்தல் புகார்"-சிலம்பு-2915

"காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலம் திரிதலான்"-சிலம்பு-1-5,6

**முத்தொள்ளாயிரம்:**

"போரில் குருகு உறங்கும் பூம்புனல் நீர் நாட"(ன்)-73

"புனல் நாடர் கோமான்"-64

"சாலி அரி சூட்டால் மடையடைக்கும் நீர் நாடன்-68

"பொன்னி வளநாடன்"-78. "நீர் நாடன்-79

"மன்னன் புனல் நாடன்"-89

"கரை உரிஞ்சி மீன் பிறழும் காவிரி நாடன்"-96

"நீள் தெங்கின், பாளையில் தேன்தொடுக்கும் பாய்புனல் நீர்நாட்டுக் காளை-99

"வண்புனல் நீர் நாடன்"-101

**குலோத்துங்க சோழன் உலா:**

"அலை எறியும் காவேரி ஆற்றுப் படைக்கு மலையெறியும் மன்னர்க்கு மன்னன்"-29,30

**கலிங்கத்துப் பரணி**

"கவன நெடும்பரி வீரதரன்
காவிரி நாடுடையான் இருந்தோள்
அவனி சுமைந்தமை பாடீரோ
அரவு தவிர்ந்தமை பாடீரோ"-528

காவிரி நாடுடைய குலோத்துங்க சோழன் நிலத்தைத் தாங்குவதாகக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறாகச் சோழர்களும் அவர்களைச் சார்ந்த சிற்றரசர்கள் சிலரும் காவிரிக்கு உரிமை உடையவர் களாக இன்னும் பல நூல்களில் கூறப்பட்டுள்ளனர்.

மேலே எடுத்துக் காட்டப் பெற்றனவற்றுள், "முழங்கு நீர்ப் படப்பைக் காவிரிக் கிழவன்" (புறம்) "காவிரி புரக்கும் நாடு கிழவோன்" (பொருநராற்றுப் படை) என்னும் தொடர்களில் உள்ள கிழவன் கிழவோன் என்பன எண்ணத்தக்கன.

கிழவன்-கிழவி என்பவற்றிற்கு உரிமையுடையவன்- உரிமை உடையவள் என்பது பொருளாகும். கிழமை என்றால் உரிமை. ஞாயிற்றுக்கிழமை-திங்கள்கிழமை

முதலியன, ஞாயிற்றுக்கு உரிய நாள் திங்களுக்கு உரிய நாள் என்னும் பொருளன. ஈண்டு நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் கூறியுள்ள "பழமுதிர் சோலை மலை கிழவோனே" என்னும் பகுதி ஒப்பு நோக்கத்தக்கது. முருகன் மலைக்கு உரியவன் என்னும் பொருளில் மலை கிழவோன்' என்னும் தொடர் உள்ளது. 'நிலக்கிழார் என்பதும் ஈண்டு எண்ணத் தக்கது.

கிழவன்-கிழவி என்பன முதியவர்களைக் குறிக்கத் தொடங்கிய வரலாறு வேறு. வீட்டிற்கு-குடும்பத்திற்கு உரிமையுடைய தலைவராயிருந்தவர்கள் கிழவன் கிழவி எனப்பட்டனர். பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் தம் மனைவியை நோக்கி, 'எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே" என்று கூறியதாக உள்ள புறநானூற்றுப் பாடல் (163) பகுதியும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. இந்த உரிமையாளர்கள் அகவை முதிர முதிரவும் கிழவன் கிழவி எனப்பட்டனர். நாளடைவில் அகவை முதிர்ந்தவர்கள் எல்லாரையும் கிழவன்-கிழவி என்று அழைக்கும் மரபு உண்டாகி விட்டது. பழைய இலக்கிய வழக்கு, முதியவர்-மூத்தோர் இத்திறத்ததுவே. மற்றும், அதே புறப்பாட்டின் (163) இறுதியில் உள்ள

"பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்து வேல்குமணன்"

என்னும் பகுதியில், குமண மன்னன் முதிரமலையின் கிழவன்-உரிமையாளன் என்று கூறியிருப்பதும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

இந்த அடிப்படையில் நோக்குங்கால், காவிரிக் கிழவன் என்பது, காவிரிக்கு உரிமை உடையவன்

எண்ணும் பொருளது, என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாம். இப்போது, காவிரி பாயும் சோழ நாடு, காவிரிக்கு முழு உரிமை உடையதாயில்லாவிடினும், ஓரளவு உரிமைக்காவது உடையதாயிருக்கிறதா? இல்லையே! இன்னொருவரிடம் காவிரி நீரைக் கெஞ்சிக் கேட்டுப் பெற வேண்டிய இரங்கத் தக்க எளிய நிலையில் அல்லவா இருக்கிறது.

காவிரி சோழர் குலத்திற்கு உரிய ஆறு என்க் குல உரிமை கொண்டாடப்பட்டுள்ளது.

''கோடாச் செங்கோல் சோழர் தம் குலக்கொடி''
மணிமேகலை-பதிகம்-23,

''மன்னர் குலப் பொன்னி ஆடுதிரால்''-
விக்கிரம சோழன உலா · 500

''முழு குல நதிக்கு அரசர் முடிகொடு வகுத்தகரை''
குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ்-53

இந்த இலக்கியச் சான்றுகளால், காவிரியின் முழு உரிமை தமிழ் நாட்டிற்கு எப்போதும் இருக்கவேண்டும் என்னும் குறிப்பு புலனாகலாம்.

# 9. தமிழ்க் காவிரி

சீத்தலைச் சாத்தனார், தம் மணி மேகலை காப்பியத்தின் பதிகப் பகுதியில், காவிரியைத் 'தமிழ்ப் பாவை' எனத் தமிழ்ப் பெண்ணாகவே கூறிவிட்டார். பல முறை பாவை எனக் குறிப்பிட்டுள்ளார். சில பதிகப் பகுதிகள் வருமாறு:—

"கோள்நிலை திரிந்து கோடை நீடினும்
தான்நிலை திரியாத் தண் தமிழ்ப் பாவை"—24,25

"கரகம் கவிழ்ந்த காவிரிப் பாவை"—பதிகம் — 12

"ஓங்குநீர்ப் பாவை" — பதிகம் 6

"தவாநீர்க் காவிரிப்பாவை" மணி—3-55

சிலப்பதிகாரத்திலும் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:-

"பரப்பு நீர்க் காவிரிப் பாவை"

சிலம்பு—நாடுகாண் காதை—48

பாரதிதாசனாரின் பங்கு இதில் மிகப் பெரியதாகும்.

"காவிரி ஊற்றின் கண் தூர்ந்தாலும்
வைகை ஊற்றின் வாய் திறந்தாலும்
தமிழன் உரிமையொடு காக்க வேண்டும்"—

என அவூர் தமிழ் உரிமை கொண்டாடியுள்ளார்.

**காவிரிப் பெண்**

தமிழ் மொழியைத் தமிழ்த்தாய் எனவும் தமிழ் அணங்கு எனவும் நாம் கூறுதல் போலவே, நிலத்தையும் நீரையுங் கூடப் பெண்ணாக உருவகித்துக் கூறுதல் நமது மரபு. நிலத்தைப் பூமாதேவி, பூமகள் என்பர்.

"இலன்என் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலன்என்னும் நல்லாள் நகும்" — (குறள்—1040)

எனத் திருவள்ளுவரும் நிலத்தை 'நல்லாள்' எனப் பெண்ணாகக் கூறியுள்ளார். இன்னும், நிலமகள், மண்மகள், மண் மடந்தை முதலிய வழக்காறுகளும் உண்டு.

இதே போலத் தண்ணீரையும் பெண்ணாக உருவகித்துக் கூறுவது நமது நாட்டு மரபு. கங்கையம்மா, காவிரித்தாய் முதலிய ஆட்சிகளில் இதைக் காணலாம்.

மணிமேகலையிலும் சிலப்பதிகாரத்திலும் தண்ணீர் பாவை எனக் கூறப்பட்டுள்ளது. செயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணி-கடை திறப்புப் பகுதியில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. அதாவது:- பெண்களை நோக்கி, காவிரிபோல் வரும் மடந்தையர்களே. கதவைத் திறவுங்கள் எனப் பெண்கட்குக் காவிரி ஒப்புமையாக்கப்பட்டுள்ளது.

"பூவிரி மதுகரம் நுகரவும்
பொருகயல் இருகரை புரளவும்
காவிரி எனவரும் மடநலீர்
கனக நெடுங்கடை திறமினே"-(59)

என்பது பாடல் பகுதி.

சிலப்பதிகாரத்தில் கானல் வரிப் பகுதியில், மாதவி பாடுவதாக உள்ள இரண்டு பாடல்களில், காவிரி பெண்ணாக உருவகிக்கப் பட்டிருப்பதையும் காணலாம்! பாடல்கள்:-

'மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ ஆடை அதுபோர்த்துக்
கருங்கயற்கண் விழித் தொல்கி
நடந்தாய் வாழி காவேரி;
கருங்கயற்கண் விழித் தொல்கி
நடந்த வெல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன் வாழி காவேரி"-(25)

"பூவார் சோலை மயிலாலப்
புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர் மாலை அருகசைய
நடந்தாய் வாழி காவேரி;
காமர் மாலை அருகசைய
நடந்த வெல்லாம் நின்கணவன்
நாம வேலின் திறங்கண்டே
அறிந்தேன் வாழி காவேரி" (26)

காவிரியாறு பூக்களாகிய ஆடையைப் போர்த்துக் கயல்களாகிய கண்களை விழித்து நடக்கின்ற பெண்

ணாகக் கூறப்பட்டிருப்பது காண்க. மற்றும், "காவேரி .. நின் கணவன்" என்னும் சொல்லாட்சிகளும் காவிரியைப் பெண்ணாக்கிக் காட்டியுள்ளன.

சேக்கிழாரும் தமது பெரிய புராணத்தில்
"பொன்னியாம் கன்னி நீத்தமே'-55

எனக் காவிரியைக் கன்னியெனக் கூறியுள்ளார்.

அகநானூற்றில் அழகான-ஆனால் அழுகையான செய்தி ஒன்று கூறப்பட்டுள்ளது. ஆதிமந்தி என்பாளின் கணவனாகிய ஆட்டனத்தி என்பவன் காவிரியில் நீராடியபோது வெள்ளத்தால் அடித்துச்செல்லப்பட்டு மறைந்து போனான். அவனுடன் நீராடிக் கொண்டிருந்த ஆதிமந்தி, அழுத கண்ணுடன் அகமுடையானைத் தேடி அலைந்து கொண்டிருந்தாளாம். இங்கே, அவள் கணவனைக் காவிரி என்னும் பெண் அகப்படுத்திக் கொண்டாள் என்பதாக ஒரு கற்பனைக் குறிப்பு காட்டப்பட்டுள்ளது. பாடல் பகுதி வருக:-

"கழாஅர்ப் பெருந்துறை விழவின் ஆடும்
ஈட்டெழில் பொலிந்த ஏந்துகுவவு மொய்ம்பின்
ஆட்ட னத்தி நலநயந் துரைஇத்
தாழிருங் கதுப்பின் காவிரி வவ்வலின்
மாதிரம் துழைஇ மதிமருண் டலந்த
ஆதிமந்தி........."அகம்-222-5-10

மிகுந்த அழகால் பொலிவுற்ற-நிமிர்ந்து திரண்ட தோள்களையுடைய ஆட்டனத்தி என்பவனது அழகை விரும்பி அவனைக் காவிரி என்னும் பெண் கவர்ந்து கொண்டதால் ஆதிமந்தி மதிமயங்கித் தேடிக்கொண்டிருந்தாள்-என்னும் கருத்து இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் செய்தி அகநானூற்றில் பின்வரும் பாடல்களிலும் அறிவிக்கப்பட்டுள்ளது:-

"காதலற் கெடுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து
ஆதி மந்தி போலப் பேதுற்று"-45-13,14.

"ஆட்டன் அத்தியைக் காணீரோ என
நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
கடல்கொண் டன்றெனப் புனல்ஒளித் தன்றெனக்
கலுழ்ந்த கண்ணள் காதலற் கெடுத்த
ஆதி மந்தி போல"-236-16-20.

"கச்சினன் கழலினன் தேந்தார் மார்பினன்
வகையமைப் பொலிந்த வனப்பமை தெரியல்
சூரியலம் பொருநனைக் காண்டீரோ என
ஆதி மந்தி பேதுற்று இனையச்
சிறைபறைந் துரைஇச் செங்குணக் கொழுகும்
அந்தண் காவிரி போலக்
கொண்டு கைவலித்தல் சூழ்ந்திசின் யானே"
76-7-13.

இந்த 76 ஆம் பாடலில் கூறப்பட்டுள்ள செய்தி மிகவும் சுவையானது. கச்சும் கழலும் அழகிய மாலையும் திண்ணிய மார்பும் உடையவனும் கூத்தில் (நடனத்தில்) வல்லவனும் ஆகிய ஆட்டனத்தியை, அவன் காதலி ஆதிமந்தி வருந்தும்படி, கரையை மோதி ஓடும் காவிரி பற்றிக் கொண்டது போல, யான் தலைவனைப் பற்றிக் கொள்வேன் என்று பரத்தை யொருத்தி தலைவனின் மனைவியின் தோழியர் கேட்பக் கூறினாள் என்பது கருத்து. இது சுவையான ஒரு கருத்தன்றோ!

பாரதிதாசனாரும் இதுபற்றிக் கூறியுள்ளார். குடும்ப விளக்கு-மக்கட்பேறு என்னும் பகுதியிலுள்ள அவரது பாடல் பகுதியாவது:-

"ஆட்ட னத்தியான அருமை மணாளனையே
ஓட்டப் புனல்கன்னி உள்மறைத்துக் கொண்டுசெலப்
போதுவிரி நீர்பாயப் போய்மீட்டுக் கொண்டுவந்த
ஆதிமந்திக் கற்புக்கரசி யவள்நீ தானோ?"

இங்கே, காவிரியைப் 'புனல் கன்னி' என்னும் பெண்ணாக உருவகித்து, ஆட்டனத்தியைத் தன்னுள் மறைத்துக் கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது.

காவிரியில் நீராடியபோது இறந்து போனவர்கள் மிகப் பலராவர். திருவையாற்று அரசர் கல்லூரியில் நான்காண்டு காலம் படித்த யான் காவிரியில் ஆற்றிய ஆட்ட நிகழ்ச்சிகள் பல. காவிரியின் நீர்ச்சுழலில் அகப்பட்டு இறந்து போகக்கூடிய நிலைமை பலமுறை ஏற்பட்டது. எப்படியோ தப்பித்துக் கொண்டேன். காவிரியில் அகப்பட்டுத் தமிழர் எவரும் இறக்கக்கூடாது என்று எண்ணி இப்போது காவிரியில் நீர்விடவில்லை போலும்.

# 10. தெய்வக் காவிரி

காவிரி தெய்வத் தன்மை உடையதாக-அதாவது-புண்ணியத் தீர்த்தமாய்ப் போற்றப்படுகிறது. இதனைப் பல இலக்கியங்கள் எடுத்தியம்பியுள்ளன. சில காண்பாம் :

"தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறைப்
புண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்தி
மண்ணகம் மருள வானகம் வியப்ப
விண்ணவர் தலைவனை விழுநீ ராட்டி-
-சிலப்பதிகாரம்-5: 165-168.

காவிரியின் தெய்வத் தன்மையுடைய - புண்ணிய-நீரைப் பொன் குடத்தில் முகந்து ஏந்தி வந்து தேவ இந்திரன் சிலையை முழுக்காட்டினார்களாம்.

"தெய்வக் காவிரித் தீதுதீர் சிறப்பும்"
சிலம்பு-10-கட்டுரை-8

தெய்வக் காவிரியாம்; அது குளித்தோரின் தீவினையைத் தீர்க்குமாம்-கருத்து;

"தீது நீங்கக் கடலாடியும்
மாசு போகப் புனல் படிந்தும்"-பட்டினப் பாலை
99, 100

புகாரில் காவிரி கலக்கும் இடத்தில் கடலில் தீமை நீங்க ஆடுவர்; பின்பு மாசு போகக் காவிரி நீரில் குளிப்பர்.

"மெய்த் தன்னுறும் வினை நீர்வகை
தொழுமின் செழுமலரின்
கொத்தின்னொடு சந்து ஆர் அகில்
கொணர் காவிரிக் கரைமேல்
அத்தன் உமையாள்வான் இடம் ஆலந்துறை."
சம்பந்தர் தேவாரம்- 1-16-5.

காவிரியில் படிந்தால் தீவினை தீரும்-கருத்து.

"பாவம் தீர் புனல் பாற்றுறை" -ச.தே-1-56-4.

"ஆடுவோர் பாவம் தீர்த்து... திகழு மாகாவிரி
ச. தே-7-7-46.

படிவோரின் பாவம் போக்குமாம் காவிரி-கருத்து.

"தீர்த்த நீர்வந் திழிதரு பொன்னி" ச.தே-2-2-9-6.

"நதிப் படிய நின்று பழிதீர நல்கும் கோகரணம்".
குளிப்பவர் பழி தீருமாம்-கருத்து.
ச.தே-3-79-5-7

"காவிரி பரவிப் பணிந்து ஏத்தும்
நெய்த்தான நகரான்"- ச. தே-1-15-5.

"காவிரி, வட்ட வாசிகை கொண்டு அடி தொழுது
ஏத்து பாண்டிக் கொடு முடி நாட்டான்"
சுந்தரர் தேவாரம்-

திரு நெய்த்தானத்திலும் திருப்பாண்டிக் கொடு முடியிலும் இறைவனை(க்) காவிரி தொழுதேத்துகிறது.

"கங்கையின் புனித மாய காவிரி நடுவு பாட்டுப்
பொங்குநீர் பரந்து பாயும் பூம்பொழில் அரங்கம்-
தொண்டரடிப் பொடியாழ்வார்-திவ்வியப்பிரபந்தம்
— திருமாலை-894.

கங்கையைப் போலவே காவிரியும் தூய தெய்வத் தன்மை உடையதாகத் தொண்டரடிப் பொடியாழ்வார் கூறியுள்ளார்.

"பொன்னி நல்நதி மிக்க நீர் பாய்ந்து
புணரி தன்னையும் புனித மாக்குவது"-
பெரியபுராணம்-404.

புகார் நகரில் காவிரி பாய்ந்து கடலையும் புனித மாக்கும் தீர்த்தமாயுள்ளதாம்-கருத்து.

"வம்புலா மலர் நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார்கரை எண்ணில் சிவாலயத்து
எம்பிரானை இறைஞ்சலின் ஈர்ம் பொன்னி
உம்பர் நாயகர்க் கன்பரும் ஒக்குமால்"-பெ.பு.57.

கரையிலுள்ள சிவன் திருக்கோயில்களைக் காவிரி வணங்கிச் செல்வதால், சிவனடியார் போன்றுள்ளதாம்.

"காவிரி நீர்ப் பெருந் தீர்த்தம்" -பெ.பு-3577.

தன்பால் நீராடிய அருச்சுனன்,அரிச்சந்திரன், சுசீலை ஆகியோர்க்கும், ஒரு பன்றி-மண்டூகம்(தவளை), முதலை ஆகியவற்றிற்கும் காவிரி தீது நீக்கி நற்பேறு கிடைக்கச் செய்ததாம்.

காவிரியின் இத்தகைய சிறப்பால், தண்ணீர் எனப் படுவது காவிரியே-என்னும் பெரும் பெயர்பெற்றுள்ளது. இது சார்பான ஒரு சிறு கதை வருமாறு:

அம்பர் என்னும் ஊரில் வாழ்ந்த சிலம்பிஎன்பாள் ஒட்டக் கூத்தரை நோக்கி, தன்னைப் பற்றி ஒரு பாடல் எழுதுமாறு கேட்டாளாம். ஒட்டக்கூத்தர் எதிர்பார்த்த அளவு அவருக்கு கடமை ஆற்றாததால், அவர் ஒரு வெண்பாவின் முதல் இரண்டடிகளை மட்டும் சுவரிலோ எதிலோ எழுதிவிட்டுச் சென்று விட்டாராம். பின்னர் அங்கு ஔவையார் வந்த போது, அவர் கூழோ (உணவோ) ஏதோ பெற்றுக் கொண்டு, பின் இரண்டு, அடிகளையும் எழுதி முடித்தாராம். அந்த வெண்பா வருமாறு :-

"தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழ மண்டலமே-பெண்ணாவாள்
அம்பர் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு"-என்பது முழுப் பாடல்.

தண்ணீரில் சிறந்தது காவிரியே. மன்னருள்சிறந்தவன் சோழனே. மண்ணில் சிறந்தது சோழ நாடே. காலில் அணியும் சிலம்புக(ட்)குள் சிறந்தது, அம்பர் என்னும் ஊரில் உள்ள சிலம்பி என்பாள் தன் தாமரை போன்ற தாளில் (காலில்) அணியும் சிலம்பேயாகும்.— என்பது பாடலின் பொருள். 'அம்பர் சிலம்பி' என்பதற்குப் பதில் 'அம்பொற் சிலம்பி' என்றும் பாடம் சொல்வதுண்டு. ஒட்டக் கூத்தர் முதல் இரண்டடிகளைப் பாடினார் என்பதற்குப் பதில், பொய்யா மொழிப் புலவர் முதல் இரண்டடிகளையும் பாடினார் என்றுகதை சொல்வதும் உண்டு.

இந்தப் பாடலால், காவிரியின் மிகு பெருஞ்சிறப்பு புலனாகிறதன்றோ!

**காவிரி நீராடல் :**

காவிரியில் நீராடுதலை நற்பேறாக-நல்வினையாக-புண்ணியமாக மக்கள் கருதி நீராடுகின்றனர். ஆடித் திங்கள் பதினெட்டாம் நாளில் நீராடல் சிறப்பாக நடை பெறுகிறது. திருவையாற்றில் ஆடி அமாவாசையன்று நீராடல் பெருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. ஐப்பசியில் மயிலாடுதுறையில் காவிரிநீராடல் நல்வினை யாகக் கருதிச் செய்யப்படுகிறது. இன்னும், கரையில் திருக்கோயில் உள்ள ஊர்களிலெல்லாம் நீராடல் பெரு மிதமாக நடைபெறுகிறது. இது தொடர்பான இலக் கிய ஆட்சிகள் சில வருமாறு :-

"புதுவது வந்த காவிரிக்
கோடுதோய் மலிர்நிறை ஆடியோரே"-

அகநானூறு-165-14,15.

ஒருத்தி தலைவன் காவிரிநீர் ஆடியதைக் குறிப்பிடு கின்றாள்.

"விடியல் வந்த பெருநீர்க் காவிரி
தொடியணி முன்கை நீவெய் யோளொடு
முன்னாள் ஆடிய கவ்வை"-

அகம்-226 : 10-12

தலைவன் ஒருவன் பெண் ஒருத்தியுடன் நீராடிய தைப் பற்றியது இது.

"காவிரிப் பலராடு பெருந்துறை"-

குறுந்தொகை-258-3.

"கடல் மண்டு பெருந்துறைக் காவிரி ஆடிய
வடமொழி யாளரொடு வருவோன்"-
மணிமேகலை-5-39,40

வடக்கேயிருந்து வருபவர்கள் காவிரித் துறையில் நீராடுவர் என்பது இதனால் புலனாகிறது.

"தெள்ளுநீர்க் காவிரி ஆடினள் வரூஉம்
பார்ப்பனி மருதி"-மணி-22-40,41

மருதி என்னும் கற்பிற் சிறந்த பார்ப்பனி காவிரி நீராடியதை இது குறிக்கிறது.

"தீர்த்தநீர் வந்திழிதரு பொன்னியின் பனிமலர்
வார்த்த நீர் குடைவார் இடர்தீர்க்கும் வலஞ்சுழி"
சம். தே-2-2-9-6.

பொன்னியின் தீர்த்த நீராடியவர்களின் துன்பம் நீங்கும் என்பது கருத்து.

"காவிரிநீர்ப் பெருந்தீர்த்தம் கலந்தாடிக் கடந்தேறி
ஆவின் அருங்கன் றுறையும் ஆவடுவண் துறை"-
பெ. பு. 35 77.

வடக்கேயிருந்து தெற்கு நோக்கி வந்த முனிவர் ஒருவர் தெய்வக் காவிரியில் நீராடித் திருவாவடு துறையை அடைந்தாராம்.

"பொய்யாத பொன்னிப் புதுமஞ்சனம் ஆடி"-
விக்கிரம சோழன் உலா-81

"மன்னன் குலப் பொன்னி ஆடுதிரால்"-
வி. சொ. உ-500.

இவ்வாறு காவிரி மக்கள் நீராடுவதற்கேற்ற பெருமை உடையதாயுள்ளது.

## காவிரித் துறைகள்

நீராடுவதற்காகக் காவிரியில் உள்ள பல நீர்த்துறைகள் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. அவை:-

"கழைமாய் காவிரிக் கடல் மண்டு பெருந் துறை"
அகம்-222-5

"தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறை"-
சிலம்பு-5-165.

"காரணி பூம்பொழில் காவிரிப் பேரியாற்று
நீரணி மாடத்து நெடுந்துறை போகி"-
சிலம்பு-10:214,15.

"முதுநீர்க் காவிரி முன்றுறைப் படுத்தல்"-
சிலம்பு-25-123.

"கடல் மண்டு பெருந்துறைக் காவிரி"-மணி-539.

"காவிரி நீர்ப் பலராடு பெருந்துறை"-
முத்தொள்ளாயிரம்-258.

"காவிரி மாடே
பருமணி நீர்த்துறையாடும் பாண்டிக் கொடு முடி"-
சம்பந்தர் தேவாரம்

"பானலந் துறைப் பொன்னிநீர்"-
பெரிய புராணம்: 578

முதலியன காவிரியில் நீராடும் துறைகளாகும்.

# 11. காவிரித்தாயும் சேய்களும்

சேயைத் தாய் காப்பது போல், காவிரி தமிழக மக்களைக் காக்கிறது எனப் பல்வேறு இலக்கியங்களில் பின்வருமாறு சிறப்பிக்கப் பெற்றுள்ளது.-

"புனிறுதீர் குழவிக்கு இலிற்று முலைபோலச்
சுரந்த காவிரி மரங்கொள் மலிநீர்
மன்பதை புரக்கும் நன்னாட்டுப் பொருநன்"
புறம்-68:8-10

பிறந்த குழந்தைக்குப் பால் சுரக்கும் முலைபோலக் காவிரி மக்களுக்கு நீர் சுரந்து அளிக்கிறதாம்.

"பூவிரி புதுநீர்க் காவிரி புரக்கும்
தண்புனல் படப்பை எம்மூர்-"
புறம்-166:28,29.

"கரும்பமல் கழனிய நாடுவளம் பொழிய
வளங்கெழு சிறப்பின் உலகம் புரைஇ.
......மலிர் நிறை காவிரி"-பதிற்றுப்பத்து.50:1-7

காவிரி உலகம் காக்கும் என்று கூறப்பட்டிருப்பினும் ஈண்டு, தமிழகத்தையும் வேறு சில பகுதிகளையும் காப்பதாகக் கொள்ளலாம்.

"சுரந்து காவிரி புரந்து நீர்பரக்கவும்"-
மணி-15-48

"சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கும் நாடு கிழவோனே"-
பொருந ராற்றுப்படை: 246-48

ஒரு வேலி நிலம் ஆயிரக்கணக்கான கலம் நெல் விளையச் செய்து காவிரி நாடு காக்கிறதாம். தென்னார்க்காடு மாவட்டத்தில் வழங்கப்படும் ஒரு காணி போல் ஐந்து மடங்கு கொண்டது ஒரு வேலி எனக் கூறப் படுகிறது. கிழவோன் என்பதற்கு, தனக்கே உரித்தாம் தன்மையுடையோன் என நச்சினார்க்கினியர் பொருள் கூறியுள்ளார்.

" தாங்கா விளையுள்
காவிரி நாடும் காட்டிப் பின்னர்ப்
பூவிரி படப்பைப் புகார்மருங் கெய்தி "—
சிலம்பு—6 : 30—32.

வடக்கேயிருந்து விஞ்சையன் ஒருவன் தன்மனைவியுடன், காவிரிப் பூம்பட்டினத்தில் நடைபெற்ற இந்திர விழாவைக் காணவந்தான். வரும் வழியில் உள்ள பல இடங்களையும், மற்றும் காவிரி பாயும் சோழ நாட்டையும் மனைவிக்குக் காட்டிப் புகார் அடைந்தான். காவிரி தாங்கா விளையுளால் நாடு காக்கிறது. தாங்கா விளையுள் என்பதற்கு, நிலம் தாங்க முடியாத விளைச்சல்—நாடு தாங்க முடியாத விளைச்சல்—என்றெல்லாம் பொருள் பண்ணலாம். அப்படியென்றால், கொட்டி வைக்க இடம் இல்லாமலும், எத்தனைப்பேர் உண்டாலும் தீராமலும் மிக்குள்ள நெல் முதலியன எனக்

கொள்ளலாம். ஒரு காலத்தில், ஒன்றிய அமெரிக்க (U.S.A.) நாட்டில் அளவின்றிக் கோதுமை விளைந்து விட்டதாகவும், அதனால் ஒரு பகுதியைக் கடலில் கொட்டி விட்டதாகவும் செய்தித்தாளில் வெளியான செய்தி ஈண்டு நினைவு கூரத்தக்கது. இத்தகைய சோழ நாடு, காவிரியில் தண்ணீர் விடாமையால் இப்போது எப்படி இருக்கிறது?

"மாயிரு ஞாலத்து மன்னுயிர் காக்கும்
...... தண்ணறுங் காவிரி"—சிலம்பு—5 : 163, 165

"வாழி யவன்றன் வளநாடு
மகவாய் வளர்க்கும் தாயாகி
ஊழி உய்க்கும் பேருதவி
ஒழியாய் வாழி காவேரி"—சிலம்பு—7-27.

காவிரி சோழ நாடாகிய குழந்தையை வளர்க்கும் தாயாக உள்ளதாம். உலகம் அழியும் வரை ஒழியாது காக்குமாம்.

"பரப்பு நீர்க்காவிரிப் பாவைதன் புதல்வர்"—
சிலம்பு—10—148.

இங்கே, சோழநாட்டு மக்கள் காவிரித்தாயின் புதல்வர்கள்—பிள்ளைகள்—எனக் கூறப்பட்டுள்ளனர்.

**பெரிய புராணம்—திருநாட்டுச் சிறப்பு :**

"சைய மால்வரை பயில் தலைமை சான்றது
செய்ய பூமகட்கு நற்செவிலி போன்றது
வையகம் பல்லுயிர் வளர்த்து நாள்தொறும்
உய்யவே சுரந்தளித்து ஊட்டும் நீரது" (53)

காவிரி நிலத்தை வளர்க்கும் செவிலி போன்றதாம்! பல்லுயிர்களையும் நீர் சுரந்தளித்து வளர்க்கிறதாம்.

" சால்பினில் பல்லுயிர் தருதல் மாண்பினால்......
போலும் நான்முகனையும் பொன்னி மாநதி (54)

நான்முகன் (பிரமன்) உயிர்களைப் படைத்தல்போல் காவிரியும் உயிர்களை நீர்தந்து உளவாக்குகிறது.

" வண்ண நீள்வரை தந்த மேன்மையால்
எண்ணில் பேரறங்களும் வளர்க்கும் ஈகையால்
அண்ணல் பாகத்தை ஆளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம்
போன்றதே" (56)

பர்வத மலையில் பிறந்த பார்வதிபோல் காவிரியும் ஒரு (சைய) மலையில் பிறந்தது; பார்வதி அறங்கள் ஆற்றி உயிர்களை வளர்ப்பதுபோல் காவிரியும் நீரளித்து உயிர்களைக் காக்கிறது. அம்மை அருள் சுரப்பைப் போலவே காவிரியின் நீர் சுரந்த ஓட்டமும் உள்ளது. அதனால் அன்னை உமாதேவியை ஒத்து உயிர்களுக்குத் தாயாய் விளங்குகிறது காவிரி.

" மாவிரைத் தெழுந்தார்ப்ப வரைதரு
பூவிரித்த புதுமதுப் பொங்கிட
வாவியிற் பொலிநாடு வளந்தரக்
காவிரிப் புனல் கால்பரந் தோங்குமால்"—(59)

நாட்டிற்கு வளம் தருவதற்காகக் காவிரி ஆறு பல கிளைக் கால்வாய்களாய்ப் பிரிந்து நாடு முழுதும் பரவிப் பரந்து ஓங்கிப் பாய்கிறதாம்.

## திருப்புகழ்

" ஏழ்தலம் புகழ் காவேரியால் விளை
சோழ மண்டலம் (100)
" மனித்த ராதி சோணாடு
தழைக்க மேவும் காவிரி" (497)

சோழநாடு காவேரியால் காப்பாற்றப்படுகிறது. மாந்தர் முதலிய பல்லுயிர்களும் தழைக்கச் செய்கிறது காவிரி.

## இலங்கை மன்னன் பரராச சிங்கன் பாடியது

" கருதிச் செம்பொனின் அம்பலத்தி லோர்
கடவுள் நின்று நடிக்குமே;
காவிரித் திருநதியிலே ஒரு
கருணை மாமுகில் துயிலுமே;
வளமை யின்புறு சோழமண்டல
வாழ்க்கை காரண மாகவே"—

உயிர்களைப் பற்றிய கவலையில்லாமல், தில்லை அம்பலத்தில் நடராசர் நடித்துக் கொண்டிருப்பதும்; காவிரி நடுவில் (திருவரங்கத்தில்) அருள் முகிலாகிய திருமால் படுத்து உறங்கிக் கொண்டிருப்பதும், சோழ மண்டலத்துக் காவிரி உயிர்களைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையினாலேயே யாம்! எவ்வளவு அழகான—சுவை யான கற்பனை இது!

" கரும்பு தருஞ் சாறோ—தம்பி
காவிரியின் ஆறு" —பாரதிதாசனார்;

கருப்பஞ்சாறு போல் உயிர்கட்குக் காவிரி நீர் இனிக்கிறதாம்.

"வீட்டு மக்களை விரும்பும் தாய்போல்
நாட்டு மக்களை நலமுடன் பேணி......

இயங்கும் காவிரி"—

அம்பிகாபதி காதல் காப்பியம்—நாடு நகர் நலங்கூறு. காதை—98; 99.

வீட்டில் தாய் சேய்களைக் காப்பதுபோல, நாட்டில் காவிரி மக்களைக் காக்கிறதாம்.

காவிரி உயிர்களைக் காப்பதால்தான் 'காவிரித் தாய்' என்னும் சிறப்புப் பெயர் வழங்கப் பெற்றுள்ளது.

**கலங்கல் காவிரி**

காவிரி நீர் வளமான வண்டலுடன் கலங்கிய நிலையில் இருப்பதால்தான், வயல்களில் விளைவு பெருகுகிறது. இலக்கிய ஆட்சிகள் இதோ :—

"தெளிவிலாக் கலங்கல் நீர்சூழ்
திருவரங்கத்துள் ஓங்கும்"—

தொண்டரடிப் பொடியாழ்வார்—திவ்வியப் பிரபந்தம்—(908)

திருவரங்கத்துப் பக்கம் ஓடும் காவிரியில் தெளிவு இல்லாத கலங்கல் நீர் உள்ளதாம்.

"செங்குணக்கு ஒழுகும்
கலுழி மலிர் நிரை காவிரி" பதிற்றுப் பத்து—50-5.

கலுழி என்றால் கலங்கிய வண்டல் நீர். இதனால் கலுழி நிரை காவிரி எனப்பட்டது.

"வாச நீர்குடை மங்கையர் கொங்கையில்
பூசு குங்கமமும் புனை சாந்தமும்
வீசு தெண்திரை மீதிழிந் தோடுநீர்
தேசுடைத் தெனினும் தெளிவில்லதே"

பெரியபுராணம்—58

காவிரி நீர் பளபளப்பான தோற்றம் உடையதாயினும் தெளிவு இல்லாத தாகும். இயற்கையான வளத்தால் இந்த நிலை ஏற்பட்டது. ஆனால், ஆசிரியர் சேக்கிழார், மங்கையர் கொங்கையில் பூசிய குங்குமமும் சந்தனச் சாந்தும் குளிக்கும்போது நீரில் கரைவதால், தெளிவு இல்லாமல் உள்ளது என ஒரு கற்பனை செய்துள்ளார். உண்மை தெளிவின்மையே.

வயலெல்லாம் வளம்தரும் வண்டல் ஊண் ஊட்டி
... இயங்கும் காவிரி"—அம்பிகாபதி காதல்
காப்பியம்—நாடு நகர் நலங்கூறு காதை—97.

காவிரி வயல்கட்கு வண்டலாகிய உணவை ஊட்டுகிறதாம்; அதனால் வளம் உண்டாகிறதாம்.

காவிரி நீர் கலங்கலாகவே இருக்கும். ஒருநாள் இரவு படுக்கைக்குப் போகுமுன், யான், ஒரு செம்பு நிறையக் காவிரி நீரை முகந்து வைத்திருந்தேன். மறுநாள் காலையில் பார்த்தபோது, செம்பின் அடியில் கால்பங்கு சேறும், மேலே முக்கால் பங்கு தெளிந்த நீரும் இருந்ததைக் கண்டேன். இத்தகைய வண்டலே, காவிரி நாட்டை 'வளநாடு' என்னும் பெயருக்கு உரியதாக்கியது.

# 12. காவிரியின் வரவு செலவு

நாட்டு மக்களாகிய சேய்களைத் தாய்போல் காப்பாற்றுகின்ற காவிரியின் வரவு என்பது, காவிரியில் வந்து கலக்கும் சிற்றாறுகளைப் பற்றியது; காவிரியின் செலவு என்பது, காவிரியிலிருந்து பிரியும் ஆறுகள்-கால்வாய்கள் ஆகியவை பற்றியது. உலகில் பெரிய ஆறுகளுடன் சிற்றாறுகள் வந்து கலப்பதும், ஆறுகளிலிருந்து கிளை ஆறுகள்-கிளைக் கால்வாய்கள் பிரிவதும் இயற்கைதானே.

**வரவுக் கணக்கு:**

காவிரியில் வந்து கலக்கும் முதல் ஆறு 'கனகா' என்பது. இது தெய்வ ஆறாகப் (புண்ணிய நதியாகப்) போற்றப்படுகிறது. கருநாடக நாட்டில் பாகமண்டலம் என்னும் இடத்திற்கு அருகே இது காவிரியுடன் கலக்கிறது.

பாலூர் என்னும் இடத்திற்கு அருகே கருகண்டகி ஹோலி' என்னும் ஆறு கலக்கிறது.

அடுத்தாற்போல் 'சுசோதி' என்னும் ஆறு காவிரியில் கலக்கிறது.

கிருஷ்ண ராச சாகரம் என்னும் கண்ணம்பாடி நீர்த் தேக்கத்திற்கு அருகே காவிரியின் வட கரையில் திப்பூர் என்னும் இடத்தில் 'ஹேமாவதி' என்னும் ஆறு கலக்கிறது. நீர்த்தேக்கத்தின் இடையில் காவிரியின் தென் கரையில் பைரபூர் என்னும் இடத்தில் 'இலட்சுமண தீர்த்தம்' என்னும் சிற்றாறு கலக்கிறது.

கண்ணம்பாடி நீர்த் தேக்கத்திற்கும் சிவ சமுத்திரத்திற்கும் இடையே காவிரியின் வடகரையில் 'லோக பாவனி' 'சிம்சா' என்னும் ஆறுகள் கலக்கின்றன. தென் கரையில் சில சிற்றாறுகளுடன் கூடிய 'கபினி' என்னும் ஆறும் 'சுவர்ணாவதி' என்னும் ஆறும் கலக்கின்றன.

தமிழ் நாட்டு எல்லைக்கு அருகில், அர்க்காவதி என்னும் இடத்தில் 'அர்க்காவதி' என்னும் ஆறு காவிரியில் கலக்கிறது. காவிரி கருநாடகத்தை விட்டுத் தமிழ் நாட்டில் புகுவதற்குமுன், கருநாடக எல்லையில் கடைசியாகக் கலக்கும் ஆறு இந்த அர்ச்காவதிதான்.

பல சிற்றாறுகள் சேர்ந்த 'தொட்டஹள்ளி' என்னும் ஆறு, மேகதாட்டு என்னும் இடத்திற்கும் 'ஹொகேன்கல்' என்னும் இடத்திற்கும் இடையில் கலக்கிறது.

ஹொகெனகல் நீர் வீழ்ச்சிக்கு அருகில் 'சின்னாறு' என்னும் ஆறு கலக்கிறது. இதற்குச் 'சனத் குமார நதி' என்ற வேறு பெயரும் உண்டு.

தொப்பூரில் தோன்றும் 'தொப்பையாறு' பெரும்பாலை என்னும் ஆற்றையும் தன்னுட்கொண்டு

சோளப்பாடி அருகில் கலக்கிறது. சேலம் மாவட்டத்தில் காவேரிப்பட்டி என்னும் இடத்திற்கு அருகில் ‘பெரியாறு’ என்னும் ஆறு காவிரியில் கலக்கிறது.

மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு முன்பு ‘பாலாறு’ என்னும் ஆறு காவிரியில் கலக்கிறது.

சில சிற்றாறுகளைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டுள்ள ‘பவானி’ என்னும் ஆறு ‘பவானி’ என்னும் நகரில் காவிரியில் கலக்கிறது.

சேர்வராயன் மலைப்பகுதியில் மஞ்ச வாடிக்கரை என்னும் பகுதியில் தோன்றும் இரண்டு சிற்றாறுகள் சேர்ந்த திருமணி முத்தாறு’ சேலம் மாவட்டம்-நாமக்கல் வட்டம்-கூடுதுறை என்னும் இடத்தில் காவிரியுடன் கலக்கிறது.

‘நொய்யல்’ என்னும் ஆறு திருச்சி மாவட்டத்தில் நொய்யல் என்னும் இடத்தில் காவிரியில் கலக்கிறது.

‘அமராவதி’ என்னும் ஆறு சேரநாட்டில் தோன்றி ஓடிவந்து கருருக்குச் சிறிது தொலைவில் காவிரியுடன் கலக்கிறது.

காவிரியில் இறுதியாகக் கலக்கும் ஆறு, சீரங்கத்திற்கு அருகில் கலக்கும் ‘அய்யாறு’ என்னும் ஆறுதான்.

இவ்வாறாகப் பல சிற்றாறுகளும் பற்பல கால்வாய்களும் வந்து கலந்து காவிரியை வளப்படுத்துகின்றன. இது வரையும் காவிரியின் வரவுக் கணக்கைப் பார்த்தோம்; இனிக் காவிரியின் செலவுக் கணக்கைப் பார்க்கலாம்.

## செலவுக் கணகரு

காவிரியிலிருந்து கொள்ளிடம் பிரிவதற்கு முன்பே கால்வாய் பிரிந்து குளித்தலைப் பகுதிக்கு நீர் அளித்துப் பின் 'மாமுண்டி' என்னும் ஆற்றில் கலக்கிறது. பின் அதோடு சேர்ந்து திருச்சிராப்பள்ளிக்கு அருகே 'உய்யக் கொண்டான்' ஆற்றோடு சேர்கிறது.

## கொள்ளிடம்

காவிரியிலிருந்து பிரியும் முதல் பெரிய ஆறு கொள்ளிடம். இதன் பெயரிலிருந்தே இது மிக்க நீர் கொள்ளக் கூடியது; காவிரியின் பெரு வெள்ளத்தைப் பங்கிட்டுக் காக்கக் கூடியது என்பது விளங்கு ம் கொள்ளிடம் பிரிந்ததுமே அதன்மேல் மேலணை என்னும் அணை 1840 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இந்த இடத்திற்கு 108 கி. மீ. தொலைவுக்கு அப்பால் கொள் ளிடத்தில் கீழணை என்னும் அணை கட்டப்பட்டுள்ளது. மேலணை திருச்சி, தஞ்சை மாவட்டங்களைக் கவனித்துக் கொள்கிறது என்றால், கீழணையோ தென் னார்க்காடு மாவட்டத்தின் தென்பகுதியைக் கவனித்துக் கொள்கிறது.

பிரிந்த காவிரியையும் கொள்ளிடத்தையும் 27 கி. மீ. தொலைவிற்குப் பிறகு உள்ளாறு என்னும் ஆறு இணைக் கிறது. இந்த உள்ளாற்றின் குறுக்கே கல்லணை என்னும் அணை கட்டப்பட்டுள்ளது. இது கரிகாலன் காலத்திலேயே கட்டப்பட்ட மிகவும் பழைய அணை என்றும் சொல்லப்படுகிறது.

கல்லணைக்கு அருகே கொள்ளிடத்தின் வலப்பக்கம் தெற்கு ராச வாய்க்கால் என்னும் நீரோட்டம் பிரிந்து சீர்காழிப் பகுதியை வளப்படுத்துகிறது; இடப்பக்கம்

வடவாறு, வடக்கு ராச வாய்க்கால் என்பன பிரிந்து சிதம்பரம் பகுதியை வளப்படுத்துகிறது. வடவாற்றிலிருந்து பெரிய வீராணம் ஏரிக்குத் தண்ணீர் செல்கிறது.

இலமனூருக்கு அருகில் முக்கொம்பு என்னும் இடத்திலிருந்து பிரியும் கொள்ளிடம் திருச்சி மாவட்டத்திலிருந்து தஞ்சை மாவட்டம் வழியாகத் தென்னார்க்காடு மாவட்டத்தை அடைந்து தேவிக் கோட்டை என்னும் இடத்திற்கு அருகே கடலில் கலக்கிறது. கொள்ளிடத்தின் மொத்த நீளம் 147 கி. மீ. ஆகும்.

மேட்டூர்த் தேக்கத்திற்குத் தென்பகுதியில் மாயக் கொண்டான் என்னும் இடத்திற்கு அருகில் உய்யக் கொண்டான் கால்வாய் பிரிகிறது. வடக்குப் பக்கம் ஐயன் வாய்க்கால், பெரு வாளை வாய்க்கால் என்பன பிரிகின்றன.

கல்லணையிலிருந்து ஒரு கால்வாய் பிரிந்து (சுமார்) மூன்று நூறாயிரம் ஏகராவிற்கு மேலும் பாசன வசதி செய்கிறது. இக்கால்வாய் 1 கி. மீ. தொலைவு ஓடிய பின் இரண்டாகப் பிரிகிறது. அவற்றுள் ஒன்று சேலம்—ஓமலூர்ப் பகுதியையும், மற்றொன்று கோவை—பவானிப் பகுதியையும் வளப்படுத்துகின்றன.

கல்லணை தாண்டி ஓடுகையில் காவிரியிலிருந்து வெண்ணாறு பிரிகிறது. வெண்ணாற்றிலிருந்து போகிற போக்கில் வெட்டாறு, வடவாறு, கோரையாறு, பாமணியாறு, பாண்டவ ஆறு, வெள்ளாறு அரிசிலாறு, முடி கொண்டான் ஆறு முதலியன பிரிகின்றன. மற்றும், இவற்றிலிருந்து புத்தாறு, சோழ சிகாமணி ஆறு, பழவாறு, முள்ளி ஆறு, ஓடம் போக்கி ஆறு முதலியன பிரிகின்றன.

திருக்காட்டுப் பள்ளியருகே காவிரியிலிருந்து குடமுருட்டி ஆறு பிரிகிறது. பாபநாசம், சுந்தரப் பெருமாள் கோயில் ஆகியவற்றிற்கு இடையே திருமலை ராசனாறு பிரிகிறது.

கும்ப கோணத்திற்குக் கிழக்கே மணஞ்சேரி என்னும் இடத்தில் வீரசோழன் ஆறு காவிரியிலிருந்து பிரிகிறது.

காவிரிப் பகுதியில் உள்ள சிற்றாறுகள் எண்ணிக்கை 36 எனவும், அவை எல்லாவற்றின் மொத்த நீளம் 1600 கி, மீ, எனவும் கூறப்படுகிறது. கால்வாய்களின் எண்ணிக்கையோ (சுமார்) 29;880 என்றும்,அவை எல்லா வற்றின் மொத்த நீளம் 24,000 கி. மீ. என்றும் கூறப் படுகிறது.

குடகு—கரு நாடகம் வழியாகத் தமிழ் நாட்டிற்குள் புகும் காவிரி, தமிழ் நாட்டில் தருமபுரி, சேலம், கோவை, ஈரோடு, திருச்சி, தஞ்சை ஆகிய மாவட்டங் களில் தான் நேரில் புகுந்தோடி வளஞ்செய்கிறது, தென்னார்க்காடு மாவட்டத்தின் தென் பகுதியில் தன்னிடமிருந்து பிரியும் கொள்ளிடத்தின் வாயிலாகவும் அதிலிருந்து பிரியும் தெற்கு வடக்கு கிளைக் கால்வாய் கள் வாயிலாகவும் வளம் தருகிறது.

காவிரியின் வரவு-செலவுக் கணக்கு இங்கே ஓரளவு சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

# 13. காவிரியில் நீர் குறைதல்

இப்போது காவிரியில் போதிய நீர் விடுவதில்லை. அதனால் நீர் குறைவாயுள்ளது. நீர் நிரம்ப விடப்பட்ட காலத்திலும், கோடையில் நீர் விடுவதை நிறுத்தி விடுவார்கள், கோடையில் வயல்கட்கு ஓய்வு ஆதலின் அணையைத் திறக்காமல் மூடி விடுவார்கள். இதை, 1936 முதல் 1940 வரை காவிரிக் கரையிலே வாழ்ந்த யான் நேரில் கண்டுள்ளேன்; கோடையில் ஒரு சிறிதும் நீர் இருக்காது; மாலையில் விளையாடுவதும் அமர்ந்து படிப்பதும் செய்தேன். ஊற்றுக் குழி தோண்டியே நீர் எடுப்போம். இது அணைகள் மூடிய காலத்தது.

காவிரியின் தொடக்கத்திலிருந்து முடிவுவரை அணைகள் கட்டாதிருந்த மிகவும் தொன்றுதொட்ட பழங்காலத்தில், மழை பெய்யும் போது ஆற்றில் நிரம்ப நீர் ஓடிக் கடலில் கலந்து மறைந்து விடும். மழையில்லாத காலத்தில், காவிரி நீர் வடிந்த இடங்களில் வரி வரியாய்க் கருமணல் தெரியும். இதற்கு அறல் என்பது பெயர். இந்த அறலைப் பெண்டிரின் கரிய கூந்தலுக்கு ஒப்புமையாகப் புலவர்கள் புகல்வர். இதனைப் பின்வரும் அகநானூற்றுப் பாடல் பகுதியால் அறியலாம்.

"வலம் படு வென்றி வாய்வாள் சோழர்
இலங்கு நீர்க் காவிரி இழிபுனல் வரித்த
அறல் என நெறிந்த கூந்தல்" —
அகம் - 213: 21-23

இந்தப் பாடலைப் பாடியவர் தாயங் கண்ணனார் என்னும் புலவர். இவர் இற்றைக்கு (1988) இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவராகவும் இருக்கலாம். பாடலில், காவிரி இழிபுனல் என்பது, காவிரியின் வடிந்த நீராம். வடியும் நீர் மணலில் கரு நிறத்தை உண்டாக்கிச் செல்லும். அந்தக் கரிய அறல் போன்ற கூந்தல் எனத் தலைவியின் கூந்தல் குறிப்பிடப்பட்டுள்ளது.

காவிரியின் நீர் வடிந்த நிலைமை, பெரிய புராணத்தில் கவினுறக் கற்பனை செய்யப்பட்டுள்ளது:-

"தடநிலை மாளிகைப் புலியூர்
தன்னில் உறைந் திறைஞ்சிப்போய்
அடல் விடையின் மேல் வருவார்
அமுது செய, அஞ்சாதே
விடம் அளித்தது எனக் கருதி
மேதினிக்கு வளம் நிறைத்தே
கடல் வயிறு நிறையாத
காவிரியின் கரை அணைந்தார்" - 3576.

வடக்கேயிருந்து ஒரு முனிவர் தெற்கு நோக்கிப் புறப்பட்டார்; வழியில் உள்ள திருப்பதிகளை யெல்லாம் வணங்கித் தில்லையில் (புலியூரில்) வந்து தங்கி இறைவனை வழிபட்டுப் பின்னர்த் திருவாவடுதுறையருகே காவிரியை அடைந்தார் - என்பது புராண வரலாறு. இங்கே, பெரிய புராண ஆசிரியராகிய சேக்கிழார்

காவிரியைப் பற்றி ஒரு கற்பனை செய்துள்ளார். கடலில் தோன்றிய நஞ்சைச் சிவன் உண்டார் என்பது ஒரு புராணக்கதை. கடலானது சிவபெருமானுக்குக் கொடிய நஞ்சினை அளித்ததால், அந்தப் பொல்லாத கடலுக்கு நிறையத் தண்ணீர் கிடைக்கச் செய்யலாகாது எனக் காவிரியாறு கருதி, வழியிலேயே பல கிளையாறுகளின் வாயிலாகவும் பல கிளை வாய்க்கால்களின் வாயிலாக வும் தண்ணீரை வயல்கட்கு அளித்துச் செலவிட்டு, கடல் வயிற்றை நிறைக்காமல் சிறிதளவு நீரை மட்டும் கடலில் கலக்கச் செய்ததாம்.

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட சங்க காலத்தில் கடற்கரையை மோதிக் குத்திக் கொண்டு கடலில் காவிரி புகுந்ததாகச் சொல்லப்பட் டுள்ளது. பின்னர்ப் பல அணைகள் கட்டப்பட்டுப் பல கால்வாய்களாப்பிரிந்த நிலைமை, சேக்கிழார் கால மாகிய பன்னிரண்டாம் நூற்றாண்டு நிலைமையாகும்.

மற்றும், 'கடல் வயிறு நிறையாத காவிரி என்பதில் ஒரு கருத்துக் குறிப்பு உள்ளது. கடலில் அளவற்ற நீர் இருப்பினும் புதுத் தண்ணீர் கிடைக்காதாயின் கடலும் தன் நீர்மை குன்றிவிடும். மேலே பெய்யும் மழையின் மூலமாகவோ, பெய்யப்பட்டு ஆறுகளின் மூலம் கலக்கும் நீரின் மூலமாகவோதான் கடல் தன் நீர்மை குன்றாமல் வளமுடன் நிகழ்கிறது என்பது தான் அந்தக் கருத்துக் குறிப்பு.

"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்" (17)

என்னும் திருக்குறட்பாவாலும் அறியலாம்.

இப்போது அண்டைப் பகுதியினர் நீர் விடாததால் எப்போதுமே காவிரியில் நீர் குறைகிறது.

# 14. காவிரிக்குக் கரை கட்டினமை

ஆறுகளில் மழைக் காலத்தில் வெள்ளம் பெருகி இரு கரை மருங்கிலும் உள்ள வயல்களையும் ஊர்களையும் அழித்துக் கொண்டு ஓடுவதை, இந்தக் காலத்திலும் நேரிலும் செய்தித்தாள் வாயிலாகவும் அறிகிறோம். பண்டு இந்த நிலைமை காவிரிக்கும் இருந்தது. பார்த்தான் கரிகாலன்; எண்ணினான் கரை கட்ட; காவிரியின் இருமங்கும் கரைகட்டி முடித்தான். இது தொடர்பாக இரண்டு விதமான விவரங்கள் தரப்பட்டுள்ளன:

கரிகாலன் இலங்கையை வென்று சிறை பிடித்த பன்னிரண்டாயிரம் சிங்களர்களை இந்த வேலைக்குப் பயன்படுத்திக் கொண்டானாம். காவிரியின் இரு மருங்கும் - ஆங்காங்கிருந்த சிற்றரசர்கட்கு இடத்தைப் பங்கிட்டுத் தந்து கரையடைக்கச் செய்தானாம். மூன்று கண்களுடைய 'திரிலோசன்' என்னும் சிற்றரசன் மட்டும் தன் பங்கில் கரை கட்ட மறுத்தானாம். செய்தியறிந்த கரிகாலன் திரிலோசனனது (முக்கண்ணனது) உருவத்தைப் படமாக எழுதச் செய்து, அவனுக்கு மூன்று கண்கள் இருப்பதைக் கண்டானாம். ஓ! இதனால்தான் இவன் செருக்குற்றிருக்கிறான் என்று எண்ணிக் கால் மிதியடியால் படத்தில்-நெற்றியில் இருந்த மூன்றாவது கண்ணை மிதித்தானாம். உடனே எங்கோ இருந்த திரிலோசன

னது நெற்றிக்கண் குருடாகிவிட்டதாம். பின்னர் அவன் தன்பங்கில் கரை அடைத்தானாம், இது ஒருகதை.

மற்றொரு கதை இது போன்றதே. ஆனால் சிறு வேற்றுமை உள்ளது. மூன்று கண்கள் உடைய பிரதாப ருத்திரன் என்பவன் கரையை அடைக்க மறுத்தானாம். அவனது படத்தை எழுதித் தரச் சொல்லிக் கரிகாலன் ஒரு வேலால் படத்திலுள்ள மூன்றாவதாகிய நெற்றிக் கண்ணைக் குத்தினானாம். உடனே எங்கோ இருந்த பிரதாப ருத்திரனது மூன்றாம் கண் கெட்டு விட்டதாம். பின்னர் அவன் அஞ்சித்தன் பங்கிலும் கரை கட்டினா னாம்.

படத்தில் கண்ணைக் குத்தியதும் எங்கோ இருந்தவ னின் கண் கெட்டுவிட்டது என்பது நம்பத் தகுந்ததன்று. பிரதாப ருத்திரனும் திரிலோசனனும் ஒருவராக இருக்க லாம். அவனது படத்தைப் பார்த்துக் கரிகாலன் சினம் கொண்டு படத்திலுள்ள கண்ணைச் சிதைத்திருக்கலாம். மூன்றாம் கண் என்பது படத்தில் மட்டும் புனைந்து வரையப்பட்டதாய் இருக்கலாம். கரை கட்ட மறுத்த வனது கண்ணைக் குத்தக் கரிகாலன் முயன்றிருக்கலாம். அதற்கு அஞ்சிப் பிரதாபருத்திரன் பின்னர் கரை கட்டி யிருக்கலாம். ஆனால், கரிகாலன் கரை கட்டாதவனது கண்ணைக் குத்தியதாக நூல்கள் கூறுகின்றன. அவற்றுள் சில வருமாறு :—

''சென்னிப் புலியே றிருத்திக் கிரிதிரித்துப்
பொன்னிக் கரைகண்ட பூபதி''

—விக்கிரமசோழன் உலா - 25, 26

இமயமலையைச் செண்டால் அடித்து அதில் புலிக் கொடியை நாட்டிய கரிகாலன் காவிரிக்குக் கரை கட்டி னான்- என்பது கருத்து.

''மண்கொண்ட பொன்னி கரை கட்ட வாராதான்
கண்கொண்ட சென்னிக் கரிகாலன்''
—குலோத்துங்கசோழன் உலா - 35, 36

''முழுகுல நதிக்கு
அரசர் முடிகொடு வகுத்த கரை
முகில் தொட அமைத்த தறிவோம்''-
—கு.சோ. பிள்ளைத் தமிழ் - 3

''இகல் முகரி முக்கணிலும் ஒருகண் இழியக்
கிழியில் எழுதுகண் அழித்த தறிவோம்''-
—கு.சோ. பிள்ளைத் தமிழ்

''எழுவின் உயர்புய வலியின் ஒருதிரு
நதியின் இருகரை கட்டினான்''-
—கு.சோ.பி. தமிழ் - 48

குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழில், கரை கட்டாதவன் 'முகரி' எனக் குறிப்பிடப்பட்டுள்ளான். முகரி என்பதற்குச் செருக்கு கொண்டவன் - மாறுபடுபவன் என்பது போன்ற பொருள் கொள்ள வேண்டும். அவனுக்கு மூன்று கண்கள் இருந்ததாக இந்த நூல் கூறுகின்றது. 'கரை முகில் தொட அமைத்தது' என்பது கரையின் மிக்க உயரத்தை அறிவிக்கிறது.

''தொழுத மன்னரே கரைசெய் பொன்னியில்
தொடர வந்திலா முகரியைப் படத்து
எழுதுக என்றுகண்டு இது மிகைக் கண் என்று
இங்கழிக்கவே அங்கழிந்ததும்''.
—கலிங்கத்துப் பரணி - 197

கலிங்கத்துப் பரணி ஆசிரியர் செயங்கொண்டாரும் கரை கட்டாதானை முகரிஎன்று குறிப்பிட்டு, அவனுக்கு

மிகைக் கண் (இரண்டுக்கு மேல் உள்ள மிகுதியான கண்) இருந்ததாகக் கூறியுள்ளார். 'இரங்கேச வெண்பா' என்னும் நூலிலும்

''கண்கொண்டான் பொன்னிக் கரைகட்ட
வாரானை
எண்கொண்ட சோழன் இரங்கேசா''—55

என இந்தச் செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

காவிரி கரை கட்டிய சோழன் கரிகால்வளவன் இற்றைக்கு (1988) ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட சங்க காலத்தவன். இவன் கரை கட்டியதைக் குறிப்பிட்டவர்களுள் செயங்கொண்டார் கி.பி. 11 அல்லது 12 ஆம் நூற்றாண்டிலும், விக்கிரம சோழன் உலா-குலோத்துங்க சோழன் உலா- குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ் ஆகியவற்றை இயற்றிய ஒட்டக்கூத்தர் 12ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்தவர்கள். கரிகாலன் காலத்திற்கு ஆயிரம் ஆண்டு காலத்திற்குமேல் பிற்பட்டவர்களாகிய இப்புலவர்கள் காலத்தில், எப்படியோ கற்பனையாக மூன்று கண் கதை முளைத்துவிட்டிருக்கிறது. இப்புலவர்களின் காலத்தில் ஆரியப் புராணச் சார்பு வந்துவிட்டது என்பது ஈண்டு நினைவு கூரத் தக்கது.

அரும்பாடு பட்டுக் காவிரிக்குக் கரை கட்டிய கரிகாலன் ஆண்ட சோழ நாட்டில் இப்போது காவிரியில் உள்ள தண்ணீர் வளம் மிகவும் இரங்கத்தக்கது. இன்னும் மிக்க தண்ணிர் சோழ நாட்டிற்குக் கிடைக்க வேண்டும்.

# 15. கங்கையும் காவிரியும்

வடநாட்டில் கங்கை தெய்வத் தன்மை உடைய ஆறாகக் கருதப்படுவதுபோல், தென்னாட்டில் காவிரியும் தெய்வத் தன்மையுடைய ஆறாகக் கருதப்படுகின்றது. இதனை இந்நூலின் 'தெய்வக் காவிரி' என்னும் தலைப்பிலும் காணலாம். பல நூல்களில் 'கங்கைக்கு ஏயும் பொன்னி' என்ற மாதிரியில் கங்கையும் காவிரியும் இணைத்துக் கூறிச் சிறப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில காணலாம் :-

''திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோல் அதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி''-

சிலம்பு - கானல் வரி - 2

புகார்க் கடற்கரைச் சோயிலில் ஒருநாள் கோவலனும் மாதவியும் அமர்ந்திருந்த பொழுது, கோவலன் யாழ் மீட்டி, தான் வேறு ஒருத்தியை விரும்பினாலும் மாதவி வருத்தப்பட மாட்டாள் என்னும் குறும்புப் பொருள்பட காவிரிக்கு உரிய சோழன் கங்கையைச் சேர்ந்தாலும் காவிரி வருந்தாது என்பதாகப் பாடிய மறைபொருள் பாடல் இது.

"கங்கைப் பேரியாற்றினும் காவிரிப் புனலினும்
தங்கிய நீர்ப்படை தகவே உடைத்தென"
சிலம்பு-25: 120, 121

கண்ணகி சிலை செய்யவிருக்கும் கல்லைக் கங்கை யாற்றில் நீராட்டினாலும் தகுதியே-காவிரிப் புனலில் நீராட்டினாலும் தகுதியே- என்பது இதன் கருத்து.

"கங்கையின் நீர் கொணர்ந்தோ காவிரியின் நீர்
கொணர்ந்தோ
கொங்கையிள நீர்க்குடம் நிரைத்து"
—இராசராசசோழன் உலா - 457, 458

கங்கை நீராலோ காவிரி நீராலோ குடத்தை நிரப்பி யதாகக் கூறுகிறது இப்பாடல். இதே நூலில், கங்கை, காவிரி முதலிய ஆறுகளில் மங்கையுடன் சோழன் ஆடிய தாகக் கூறுகிறது :—

"கங்கையும் நன்மதையும் கௌதமியும் காவிரியும்
மங்கையுடன் ஆடும் மரபினோன்"— 43, 44

என்பது பாடல் பகுதி.

"பொன்னிக்கும் கோதா விரிக்கும் பொருனைக்கும்
கன்னிக்கும் கங்கைக்கும் காவலனை—சென்னியை"
இ. ரா. சோ. உலா—463, 464

ஒரு காலத்தில் சோழர் பொன்னி (காவிரி), கோதா விரி, பொருனை, கன்னி (கன்னியா குமரியாறு), கங்கை ஆகியவற்றிற்கெல்லாம் தலைமை பூண்டிருந்தமையை அறிவிக்கிறது.

"வட பகீரதி குமரி காவிரி யமுனை கௌதமை
மகரமேய்
தட மகோததி யிவை விடாதுறை தருண மாதர்
கடைதிறமினோ"—

குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ்—கடை திறப்பு—31.

பகீரதி = கங்கை. மேலுள்ள இருபாடல்களிலும் சிறந்த ஆறுகளின் வரிசையில் கங்கையும் காவிரியும் உள்ளமை காணலாம்.

"திங்கள் சூடிய முடிச் சிகரத் துச்சியில்
பொங்கு வெண்டலை நுரை யொருது தோன்றலால்
எங்கள் நாயகன் முடிமிசை நின்றேயிழி
கங்கையாம் பொன்னியாம் கன்னி நீத்தமே"
பெரிய புராணம் — 55

பொன்னியாகிய கன்னியின் வெள்ளம், திங்கள் அளவு உயர்ந்துள்ள மலை உச்சியிலிருந்து தோன்று தலால், திங்கள் சூடிய சிவனது முடியிலிருந்து இழிகின்ற கங்கை போன்றுள்ளதாம்.

"பானலந் துறைப் பொன்னிநீர் படிந்து வந்தாரோ
தூநறுஞ் சடைக் கங்கைநீர்தோய்ந்து வந்தாரோ—

பெரிபுராணர் 518—அமர்நீதி நாயனாரிடம் வந்த சிவனடியாரைப் பற்றியது இது.

"பூவிரி பொலன் கழல் பொருவில் தானையான்
காவிரி நாடு அன்ன கழனி நாடு ஒரீஇத்
தாவர சங்கமம் என்னும் தன்மைய
யாவையும் இரங்கிடக் கங்கை எய்தினான்"

(கம்பராமாயணம்-அயோத்தியா காண்டம்-கங்கை காண் படலம்,

கம்பரும், கங்கைப் புறத்து நாட்டைக் காவிரிநாடு போன்றது எனப் புகழ்ந்துள்ளார்.

மாகவி சுப்பிரமணிய பாரதியார், பாரத தேசம் என்னும் தலைப்புடைய தமது பாடலில், கங்கையையும் காவிரியையும் புதுமையான முறையில் இணைத்துக் காட்டியுள்ளார்;—

"கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்"—6

கங்கைப் பகுதியில் விளையும் கோதுமைப் பண்டத்தைக் காவிரிப் பகுதியில் விளையும் வெற்றிலைக்கு மாற்றாகக் கொடுப்போம்—அதாவது பண்டமாற்று செய்வோம் என்பது கருத்து.

பாரதிதாசனார் மட்டும் விட்டாரா என்ன!

'சங்க நாதம்' என்னும் தமது பாடலில்,

"கங்கையைப் போல் காவிரி போல் கருத்துக்கள்
ஊறும் உள்ளம் எங்கள் உள்ளம்"

எனக் கங்கையையும் காவிரியையும் இணைத்துக் காட்டியுள்ளார்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும்,

"வற்றலில் கங்கை காவேரி
வளஞ்செய் பரத நாட்டினிலே"

(மலரும் மாலையும்)

"கங்கை யமுனை காவிரி முதலிய
வற்றிலா நதிகளில் மடைகள் ஆக்கவும்"

என இரண்டையும் இணைத்துள்ளார்.

இப்போது, கங்கையைக் காவிரியோடு இணைக்க வேண்டும் என்பதாக நமது நாட்டில் வெல்லம் தடவிப் பேசப்படுகிறது. இது நடைபெறின், வடக்கே வெள்ளமும் தெற்கே வறட்சியும் இன்றி நாடு முழு நலம் பெறும். கங்கையைக் காவிரியுடன் இணைக்காவிடினும், 'தென்கங்கை' எனப் புகழப் பெறுகின்ற காவிரி நீரையாயினும் தமிழ்நாட்டிற்குப் போதிய அளவில் விட்டாலே போதுமே என்று ஏங்குகிறது தமிழகம்.

# 16. மலைத் தலைய கடல் காவிரி

"மலைத் தலைய கடல் காவிரி" என்னும் பாடல் அடி பட்டினப் பாலை (6) என்னும் நூலில் உள்ளது. மலை தொடங்கிக் கடல்வரை ஓடிக் கலக்கும் காவிரி ஆறு — என்பது இதன் பொருள். தலை என்பது தொடக்க மலை உச்சியைக் குறிக்கிறது. காவிரியின் தொடக்கப் பகுதிக்குத் 'தலைக் காவிரி' என்னும் பெயர் வழங்கப்படுவது ஈண்டு எண்ணத் தக்கது. காவிரி, தொடக்க மலைப் பகுதியிலிருந்து முடியும் கடல் பகுதி வரையும் உள்ளவர்க்கு எல்லாம் சமமான உரிமை உடையது என்பது இதனால் பெறப்படும். மேலும், காவிரியின் தோற்றத்தையும் முடிவையும் குறிக்கும் இலக்கிய ஆட்சிகள் சிலவற்றை ஈண்டு காணலாம்:—

"தேறுநீர்ப புணரியொடு ஆறு தலைமணக்கும்
மலி ஓதத்து ஒலி கூடல்." ப-பாலை-97,98

புணரி=கடல். மணத்தல்=கூடுதல். புணரியை ஆறு மணக்கும் கூடலாம். கூடல்=சங்கமம். ஈண்டு, "மண்த்தல் கூடுதல்" என்னும் சேந்தன் திவாகர நூற்பா (செயல் பற்றிய பெயர்த் தொகுதி) ஒப்பு நோக்கத் தக்கது.

"குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி
கடல்மண் டழுவத்துக் கயவாய் கடுப்ப"—
மலைபடு கடாம்-527-28

குடமலை=குடகில் உள்ள சையமலை. கயவாய்= முகத்துவாரம்.

"மழைமருள் பஃறோல் மாவண் சோழர்
கழைமாய் காவிரிக் கடல்மண்டு பெருந்துறை"
அகம்—123:10, 11

கடல் மண்டு பெருந்துறை=முகத்துவாரப்பகுதி

"மலைமிசைத் தொடுத்த மலிந்து செலல் நீத்தம்
தலைநாள் மாமலர் தண்துறை தயங்கக்
கடற்கரை மெலிக்கும் காவிரிப் பேரியாற்று"—
அகம் 126 :3-5

காவிரியாறு, கடல்கரையைக் குத்திக் கரைத்து மெலியச் செய்யுமாம்.

"குடா அது
பொன்படு நெடுவரைப் புயலேறு சிலைப்பின்
பூவிரி புதுநீர்க் காவிரி" -புறம் 166:26-28

குடா அது=மேற்கு. மேற்கு மலையிலிருந்து காவிரி தோன்றுகிறது.

"கடல் மண்டு பெருந்துறைக் காவிரி[6]"- மணி-5-39

"காவிரி வாயில்"-மணி-22-43

"தாழ்பொழில் உடுத்த பண்பதப் பெருவழிக்
காவிரி வாயில் கடைமுகங் கழிந்து"
-சிலம்பு 10-32, 33

மணிமேகலையிலும் சிலப்பதிகாரத்திலும் குறிப்பிட்டுள்ள காவிரி வாயில் என்பது முகத்துவாரமாகும்.

"சாறயர் களத்து வீறுபெறத் தோன்றிக்
கடற்கரை மெலிக்கும் காவிரிப் பேரியாற்று"
-சிலம்பு 6:162-63

"குடமலைப் பிறந்த கொழும்பல் தாரமொடு
கடல்வளன் எதிரக் கயவாய் நெரிக்கும்
காவிரிப் புதுநீர்" -சிலம்பு-10:106-108

காவிரிப் புதுநீர் கடல் முகத்துவாரத்தை நெரிக்கிறதாம்.

"கொள்ளும் குடகக் குவடு அறுத்திழியத்
தள்ளும் திரைப் பொன்னி தந்தோன்-"
வி.சோ.உலா-23,24

குடகு மலை உச்சியை அறுத்துக் கொண்டு காவிரி நீர் இழிந்து வரும்படிச் செய்தவன் ஒரு சோழ மன்னன் என்பதாக விக்கிரம சோழன் உலா கூறுகிறது.

"சைய மால்வரை பயில் தலைமை சான்றது[2]
பெ.பு,-12

தலைமை சான்றது என்பதில் "தலைக் காவிரி" என்னும் குறிப்பு உள்ளது.

"கடலொடு வாய் மடுத்து எதிரெடுப்ப
வருபுனல் காவிரி"-

முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்-சிறு பறைப் பருவம்-2. வாய் மடுத்தல் என்பது, காவிரி நீர் கடலோடு கலத்தலாகும்.

காவிரியைக் 'குடகக் காவிரி' (250) எனவும்,

''குடதிசை வாராழி போலும் படர்நதி காவிரி (904)'

எனவும் திருப்புகழ் கூறுகிறது. மேற்கிலிருந்து கடல் போல் பெருக்கெடுத்துக் காவிரி வருகிறதாம்.

''குடகில் பிறந்து குளிர்கன் னடத்தில்
அடைவே வளர்ந்துபின் அரியசோ ணாட்டில்
வாழ்க்கைப் பட்டு வளமது பெருக்கி
...இயங்கும் காவிரி''-

அம்பிகாபதி காதல் காப்பியம்—நாடு நகர் நலங்கூறு காதை-90-93

காவிரி பிறந்த இடம் குடகு நாடாம்; வளர்ந்த இடம் கன்னட நாடாம்; வாழ்க்கைப்பட்டுப் பெரு வாழ்வு வாழ்ந்த இடம் சோழ நாடாம்.

இந்த இலக்கியச் சான்றுகளால், காவிரியாறு யார் யார்க்கெல்லாம் உரியது என்பது புலப்படும்.

மிகப் பரந்த ஓரிடத்தைக் குறிப்பதற்குக் 'கடலும் காவேரியுமா யிருக்கிறது' என்று சொல்வது மரபு. முன்னொரு காலத்தில், கடல் கரையைக் குத்தி நெரித்துக் கரைத்த காவிரி, சேக்கிழார் காலத்தில் "கடல் வயிறு நிறையாத காவிரி"யாயிற்று. அதாவது, பல கிளை ஆறுகளாகவும் கிளை வாய்க்கால்களாகவும் பிரிந்து வழியிலேயே தண்ணீரை வாரி வழங்கியதால், கடற்கரைப் பக்கம் நெருங்கும்போது சிறு கால்வாய் போல் ஆடு தாண்டும் காவிரியாய் விட்டது.

''கல்லும் காவிரியும் உள்ள மட்டும் வாழ்க' என்பது ஒரு பழமொழி. இந்தப் பழமொழி பொய்க்காமல் என்றென்றும் காவிரியில் நீர் நிறைந்து வர ஆவன செய்ய வேண்டும்.

# 17. காவிரிக் கரைச் சூழல்

குடகு மலை முதல் வங்கக் கடல் வரை ஓடுகின்ற நீளக் காவிரிக் கரைச் சூழலில் உள்ள-குறிப்பிட்ட சில இடங்களைப் பற்றிய சுருக்கமான விவரங்களைக் காண்பாம்.

மெர்க்காரா: இது குடகு நாட்டின் தலை நகரம்; வளம் செறிந்த மலைப்பகுதி. இங்கே மழை மிகுதி. இதனால் காவிரிக்கு நீர்வளம் கிடைக்கின்றது. காவிரி தோன்றும் தலைக் காவிரிப் பகுதிக்கும் மெர்க்காராவிற்கும் இடையில் உள்ள தொலைவு 40 கி.மீ. ஆகும்.

தலைக் காவிரி: இதுதான் காவிரி தோன்றும் இடம். அதனால் இதற்கு இப்பெயர் இடப்பட்டது. இங்கே காவிரித் தாய்க்கும் அகத்தியருக்கும் கோயில்கள் உள்ளன.

பாகமண்டலம்: இது மிக்க சோலைகள் சூழ்ந்த சிறு நகரம். நகர் நிழல் உடையதாக இருக்கும். இங்கே சிவன், திருமால், பிள்ளையார், முருகன் ஆகியோருக்குக் கோயில்கள் உண்டு; சிவன் பெயர் பாகண்டேசுவரர். இந்த இடத்தில்தான், காவிரி, ஆறு என்ற பெயர் பெறும் அளவுக்கு உருவாகியுள்ளது.

திப்பூர் : இங்கே காவிரியில் 'ஹேமவதி' என்னும் சிறு ஆறு கலக்கிறது.

பைரபூர் : இங்கே 'இலட்சுமண தீர்த்தம்' என்னும் சிற்றாறு காவிரியில் சேர்கிறது.

பாலூர் : இங்கே சித்திரை, ஐப்பசி ஆகிய திங்கள் களில் காவிரியில் நீராடுதல் மிகவும் நல்வினையாகப் (புண்ணியமாகப்) போற்றப்படுகிறது. இப்பகுதியில் தான் 'கருகண்டகி ஹோலி' என்னும் ஆறு காவிரியில் கலக்கிறது.

மைசூர் : இது பழைய மைசூர் அரசின் தலைநக ராய் இருந்தது. நாடு விடுதலை பெற்ற பிறகும், பெங்களூர் தலைநகராவதற்கு முன்வரையும் மைசூரே தலைநகராயிருந்தது. மகிஷாசூர் என்பதே மைசூர் என மருவியதாகச் சொல்லப்படுகிறது. மகிஷம் என்றால் எருமை. பண்டைய பெயர் எருமையூர் என் றிருக்கலாம். இந்தப் பகுதி எருமை நாடு என்று அழைக்கப்பட்டதும் உண்டு. மைசூர் அரசரின் அழகு அரண்மனை ஈண்டு உள்ளது. இங்கே நடக்கும் 'தசரா' விழா மிகவும் பெயர் பெற்றது. இந்நகருக்குச் சில கல் தொலைவில் கண்ணம்பாடி அணை உள்ளது.

கண்ணம்பாடி : இங்கேதான் "கிருஷ்ண ராச சாகரம் என்னும் பெரிய அணை கட்டப்பட்டுள்ளது. இங்கே 'பிருந்தாவனம்' என்னும் அழகிய சோலைப் பகுதி அமைக்கப்பட்டுள்ளது. நாடோறும் எண்ணற்ற மக்கள் இங்கே வந்து அழகுக் காட்சியைக் கண்டு களிப்பர். இதற்கு வடிவமைப்பு தந்தவர் விசுவேசுவர ஐயா என்பவர்.

சீரங்கப்பட்டணம்: காவிரி தன் போக்கில் 'கௌதம ஆசிரமம்' என்னும் இடத்தை நெருங்கியதும் இரண்டாகப் பிரிந்து 13 கி.மீ. தொலைவு ஓடியதும் மறுபடியும் ஒன்றாக இணைகிறது. இந்த இடைப்பட்ட பகுதியில சீரங்கப் பட்டணம் என்னும் புகழ் வாய்ந்த ஊர் உள்ளது. அரங்கம் என்றால் ஆற்றிடைக்குறை. காவிரியின் இடையில் அமைந்துள்ள மூன்று அரங்கங்களுள் இது முதல் அரங்கம் ஆதலின் இதற்கு 'ஆதி அரங்கம்' என்னும் பெயர் உண்டு. இங்கே கங்காதரேசுவரம் என்னும் சிவன் கோயிலும், பள்ளி கொண்டரங்கர் கோயிலும் நரசிம்மர் கோயிலும் உள்ளன; திப்புசுல்தானின் கோட்டை உள்ளது; அவனுடைய தாய்-தந்தையர் அடக்கமும் (சமாதியும்) இருக்கிறது; இது கும்பாஸ் சமாதி எனப் பெயர் வழங்கப்படுகிறது. திப்புசுல்தான் போர் புரிந்த இடமும், அவனது அடக்கம் உள்ள இடமும் இவையாக இருக்கலாம் என எனக்கு இரண்டு இடங்கள் சிலரால் காட்டப்பட்டன. அவனுக்கும் அவன் தந்தை ஐதர்அலிக்கும் இது தலை நகராயிருந்தது.

சுஞ்சன் கட்டே : இந்த இடத்தில் காவிரி 80அடி உயரத்திலிருந்து ஒரு நீர் வீழ்ச்சியாக விழுகிறது. 'இது தனுஷ்கோடி' என்று பெயர் வழங்கப்படுகிறது. கரையில் இராமர் கோயில் உள்ளது.

தலைக்காடு : இதன் பெயரைக்கொண்டே இதன் அமைப்பைப் புரிந்து கொள்ளலாம். இங்கே நாராயணசாமி கோயில் உள்ளது. இந்த ஊரில் மணல்மேடுகள் நிரம்ப உண்டு. ஒருவர் இட்ட கெடு மொழியால் (சாபத்தால்) இந்த ஊர் மண்மேடிடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

திருமுக்கூடல் : காவிரியில் கபினி (கபிலை) என்னும் ஆறு கலக்கும் இடம் இது. இங்கே ஒரு தடாகமும் கலப்பதாகச் சொல்லப்படுகிறது. அதனால்தான் இந்த இடத்திற்குத் திருமுக்கூடல் என்ற பெயர் வழங்கப்படுகின்றது. இங்கே அகத்தியேச்சுரர் கோயில் உள்ளது. இக்கோயிலில் உள்ள சிவலிங்கம் மண்ணால் ஆனது.

சிவசமுத்திரம் : இது காவிரியின் இரண்டாவது அரங்கமாகும். இது (சுமார்) 5 கி.மீ. நீளமும் (சுமார்) ஒன்றரை கி. மீ. அகலமும் உள்ள அரங்கம் ஆகும். இங்கே சிவனுக்கும் திருமாலுக்கும் கோயில்கள் உண்டு. மொத்தம் நான்கு கோயில்கள் ஈண்டு உள்ளன. ககன சுக்கி அருவி- பருசுக்கி அருவி எனக் காவிரி இரண்டாகப் பிரிந்து மீண்டும் கூடுவதால் இந்தப் பகுதி அரங்கம் எனப்படுகிறது. முதல் அருவி 300 அடி உயரத்திலிருந்தும் இரண்டாம் அருவி 230அடி உயரத்திலிருந்தும் கீழே விழுகின்றன.

சோமநாதபுரம் : இங்கே பிரசன்ன சென்ன கேசவ ஆலயம் என்னும் கோவில் உள்ளது. மிகவும் சுவைத்து மகிழக்கூடிய சிற்பக் கலைக்குப் பெயர் பெற்றது இப்பகுதி.

இராமநாதபுரம் :— கருநாடகத்தில் உள்ள இராமநாதபுரம் இது. (தமிழ்நாட்டிலும் இந்தப் பெயரில் ஒரு நகரம் உள்ளது). குடகு நாட்டு எல்லைக்கு அப்பால் 32 கி.மீ. தொலைவில் இந்த ஊர் உள்ளது. இவ்வூரும் கோயில் பெருமை உடையதாகும்.

மேக தாட்டு: மேக என்றால் ஆடு. ஆடு தாண்டும் அளவுக்குக் காவிரி குறுகி விட்ட இடம். இந்த இடத்தை அடுத்துக் காவிரி தமிழ்நாட்டு எல்லைக்குள் புகுகிறது.

ஓசூர் (ஹோசூர்): தமிழ் நாட்டு எல்லையில் உள்ளது. இருப்பினும் கன்னட மொழி மாதிரியில் ஹோசூர் எனப்படுகிறது. இங்கே கோடைக் காலத்திலும் குளிர் மிகுதி.

பெண்ணாகரம்: இவ்வூர் வாரச் சந்தைக்குப் பெயர் பெற்ற இடமாகும்:

ஹொகெனகல் : இது தமிழ் நாட்டுப் பகுதியில் இருப்பினும் ஹொகெனகல் எனக் கன்னடப் பெயர் பெற்றுள்ளது. இந்த இடம் மேகதாட்டுக்கு 32 கி. மீ. தொலைவிலும் பெண்ணாகரத்திற்கு 15 கி. மீ. தொலைவிலும் உள்ளது. இங்கே காவிரி, கடல் மட்டத்திற்கு 780 அடி உயரத்திலிருந்து 86 அடி ஆழப் பள்ளத்தில் நீர் வீழ்ச்சியாகக் கொட்டுகிறது. ஹொகெனகல் என்றால் புகைக்கல் ஆகும். கல்லின்மேல் நீர்த்துளிகள் புகைபோல் கிளம்புகின்றன.

மேட்டூர்: இங்கே தான் தமிழ்நாட்டின் புகழ் பெற்ற பெரிய மேட்டூர் அணை கட்டப்பட்டுள்ளது. இது பற்றிய விவரம் முன்னர்த் தரப்பட்டுள்ளது.

பின்னர்க் காவிரி ஓமலூர், திருச்செங்கோடு ஆகிய வட்டங்களில் புகுந்து இடைப்பாடி, சங்கரி துர்க்கம் முதலிய இடங்களைக் கடந்து பவானிக்கு வருகிறது.

பவானி: திருநணா என்னும் வேறு பெயருடைய சைவப் பதியாகிய பவானி, கோவை மாவட்டத்தில் ஓர் உள் வட்டமாகும். இது குன்றுகள் நிறைந்த பகுதி. ஆற்று வளமும் மலைத் தொடர் வளமும் பெற்றது.

பவானி வட்டத்தின் தலைநகர் பவானி நகரம். (இப்போது பவானி ஈரோடு மாவட்டத்தில் இருக்குமோ)

ஈரோடு : இந் நகரம் முன்பு கோவை மாவட்டத்தைச் சேர்ந்திருந்தது. இப்போது இதன் பெயரால் ஈரோடு மாவட்டம் கோவை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டுள்ளது. ஈரோடு, மாவட்டத்தின் தலைநகராயும் ஈரோடு வட்டத்தின் தலைநகராயும உள்ளது.

கொடுமுடி : ஈரோடுக்குத் தென்கிழக்கில் 34 கி.மீ. தொலைவில் உள்ள ஒரு சைவத் திருப்பதி. சுந்தரரின் தேவாரப் பாடல் பெற்றது. திருப்பாண்டிக் கொடுமுடி என்றும் இதற்குப் பெயர் வழங்குவர்.

கரூர் : ஈரோடு மாவட்டத்தில் உள்ளது; கரூர் வட்டத்தின் தலைநகர். காவிரியின் தென்கரையில் உள்ளது. இது கருவூர் என்றும், கருவூர் ஆனிலை என்றும் வஞ்சி என்றும் பல விதமாகப் பெயர் வழங்கப் படுகிறது. கருவூர் ஆனிலை என்னும் பெயரில் இது ஒரு சைவத் திருப்பதியாகப் போற்றப்படுகிறது. இது சேரரின் தலைநகர்களுள் ஒன்று என்று ஒரு செய்தி கூறப்படுகிறது.

குளித்தலை : திருச்சி மாவட்டத்துக் குளித்தலை வட்டத்தின் தலைநகராகிய இது காவிரியின் தென் கரையில் உள்ளது. செழிப்பு வாய்ந்த இப்பகுதி புகையிலைக்குப் பெயர் பெற்றது.

சீரங்கம் : காவிரியின் மூன்றாம் அரங்கம் இது. கொள்ளிடம், காவிரி, உள்ளாறு ஆகியவற்றிற்கிடையே உள்ளதால் இது அரங்கம் எனப்பட்டது. இது பள்ளி கொண்ட அரங்கநாதப் பெருமாளின் திருப்பதியாகும். இது காவிரியின் வட கரையிலும் கொள்ளிடத்தின்

தென் கரையிலும் உள்ளது; மிகவும் புகழ்பெற்ற பதியாகும்.

திருவானைக்கா : சீரங்கத்தை அடுத்து உள்ள சைவத் திருப்பதியாகிய இதுவும் அரங்கத்துள் உள்ளதே.

உறையூர் : காவிரியின் தென்கரையில் உள்ளது இது. கோழி என்னும் பெயரும் இதற்கு உண்டு. ஒரு காலத்தில் சோழ மன்னர்களின் தலைநகராய் இருந்தது இது.

திருச்சிராப்பள்ளி : திருச்சி எனச் சுருக்கமாக வழங்கப் பெறும் இப் பெரிய நகரம் காவிரியின் தென் கரையில் திருவானைக்காவுக்கு நேர் எதிரில் உள்ளது. இது மாவட்டத்தின் தலைநகராகும்; தாயுமானசாமி கோயில் மலைக் கோட்டையில் உள்ளது. மலை முகட்டில் உள்ள கோயில் 'உச்சிப் பிள்ளையார் கோயில்' என வழங்கப்படுகிறது.

திருக்காட்டுப் பள்ளி : தஞ்சை மாவட்டத்தில் உள்ள இந்த ஊர் பாடல் பெற்ற ஒரு சைவத் திருப்பதியாகும். இதன் அருகேதான் காவிரியிலிருந்து குடமுருட்டி என்னும் ஆறு பிரிகிறது. சுவைக்கத் தக்க இடம் இது.

திருவையாறு :- வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி, கொள்ளிடம் என்னும் ஐந்து ஆறுகளை அருகில் கொண்டுள்ளதால் இது ஐயாறு என்னும் பெயர் பெற்றது. சைவத் திருப்பதியாகிய இவ்வூரில் காவிரிக் கரையிலும் கோயிலிலும் பல விழாக்கள் நடைபெறும். தெய்வ இசைப் பேரறிஞர் தியாக ராச ஐயரின் அடக்கம்

(சமாதி) நகரை அடுத்தாற்போல் காவிரிக் கரையில் உள்ளது. இங்கே ஆண்டுதோறும் இசை விழா நடைபெறும். (நான் நான்காண்டுகள் படித்த) அரசர் கல்லூரி என்னும் கல்லூரி ஈண்டுள்ளது.

தஞ்சாவூர் : தஞ்சை எனச் சுருக்கமாக வழங்கப் பெறும் இந்நகரம் தஞ்சை மாவட்டத்தின் தலைநகரம் ஆகும். காவிரியிலிருந்து பிரிந்த வெண்ணாற்றிற்கு அண்மையில் உள்ளது இது. (யான் பேராசிரியராகச் சிறிது காலம் பணியாற்றிய) தமிழ்ப் பல்கலைக் கழகம் இங்கே நடைபெறுகிறது. இது சோழர்களின் தலை நகரங்களுள் ஒன்று.

சுவாமி மலை : கும்ப கோணத்திற்கு மேற்கே 7 கி.மீ. தொலைவில் காவிரியின் வடகரையில் உள்ள இந்த ஊர் முருகன் திருப்பதியாகும். இதற்கு ஏரகம் என்ற பெயர் உண்டென்றும் முருகனுடைய ஆறுபடை வீடுகளுள் இஃது ஒன்று என்றும் ஒருவகைக் கருத்து கூறப்படுகிறது.

கும்பகோணம் : வட்டத் தலை நகராகிய இந் நகரம் கோயில்கட்குப் பெயர்போனது. குடந்தை, குடமூக்கு என்னும் தமிழ்ப் பெயர்களும் இதற்கு உண்டு. பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை மகாமகம் (மாமாங்கம்) என்னும் மாசிமகத் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறும்.

மயிலாடுதுறை: இது தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஒரு வட்டத் தலைநகரின் பெயராகும். மயிலாடு துறை முன்னோர்களால் வழங்கப்பட்ட இந்தப் பெயர் பின்னர் மயூரம் ஆகவும் மாயவரம் ஆகவும் மருவிற்று. மீண்டும் முயன்று மயிலாடுதுறை என்னும் பழைய

பெயர் நிலைக்கச் செய்யப்பெற்றது. ஐப்பசித் திங்களில் காவிரி நீராடுதல் இங்கு மிகவும் சிறப்பான விழாவாகக் கொண்டாடப் பெறுகிறது.

திருப்பனந்தாள்: பனை மரத்தைக் கோயில் மரமாகக் கொண்ட சைவத் திருப்பதி இது. இங்கே திருப்பனந்தாள் காசி மடம் என்னும் நிறுவனத்தைக் குமரகுருபரர் அமைத்தார். இதற்குக் காசியிலும் கிளை மடம் உண்டு. பனந்தாளில் கல்லூரி உண்டு.

திருவாவடுதுறை: இது காவிரியின் தென்கரையில் உள்ள ஒரு சைவத் திருப்பதி. திருவாவடுதுறை ஆதீனம் என்னும் பெரிய சைவ நிறுவனம் ஈண்டுள்ளது. திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை என்பவரின் வளர்ச்சி இந்நிறுவனத்தால் உண்டானது தான். திரு மூலரின் அடக்கமும் (சமாதியும்) இந்தப் பகுதியில்தான் என்று சொல்லப்படுகிறது.

தருமபுரம்: திருமயிலாடுதுறையை அடுத்துள்ள இவ்வூரில் தருமபுரம் ஆதீனம் என்னும் சைவ நிறுவனம் உள்ளது. பல ஊர்த் திருக்கோயில்கள் இதன் மேலாட்சியில் உள்ளன. சைவத் திருமடங்களுள் இது மிகவும் பெரியதாகும். கல்லூரி உண்டு.

திருவாரூர்: சோழ நாட்டின் சிறந்த சைவத் திருப்பதிகளுள் இஃதும் ஒன்று. திருவாரூர் தேர் அழகு பெயர் பெற்றிருந்தது. சோழர்களின் தலைநகர்களில் இதுவும் ஒன்றாயிருந்தது. இறந்த கன்றுக்காக மனுநீதி சோழன் தன் மகனைத் தேர்க்காலில் அகப்படச் செய்த தாகக் கூறப்படும் வரலாறு நடந்த இடம் இந்த ஊர் தான். இசையறிஞர் மூவரின் பிறப்பிடமும் இதுவே.

நாகப்பட்டினம் : இது சோழ நாட்டில் உள்ள ஒரு கடற்கரைப் பட்டினம்—துறைமுகமும் ஆகும். தஞ்சை மாவட்டத்தில் ஒரு வட்டத் தலைநகராயுள்ள இவ்வூர் சிறிது காலம் தஞ்சை மாவட்டத்தின் தலைநகராயிருந்த துண்டு: இதற்குத் திருநாகைக் காரோணம் என்னும் பெயரும் உண்டு.

காரைக்கால் : புதுச்சேரி அரசின் ஒரு மாவட்டப் பகுதியாகும். இது முன்பு பிரெஞ்சுக்காரரால் அரசாளப் பட்டது. காரைக்கால் மாவட்டத்தின் தலைநகராக வுள்ள இவ்வூரில்தான் காரைக்கால் அம்மையார் தோன் றினார். அம்மையாரின் தொடர்பான மாங்கனி விழா இங்கே மிகவும் சிறப்பாக நடைபெறும். அரிசில் ஆற்றங் கரையில் உள்ள இது ஒரு துறைமுகமும் ஆகும்.

திருநள்ளாறு : புதுச்சேரி மாநிலத்துக் காரைக்கால் மாவட்டத்தில் உள்ள ஒரு வட்டப் பெயராகும் இது. இங்கே சனியீசுவரன் கோயில் சிறப்பானது. ஒவ்வொரு சனிப்பெயர்ச்சியிலும் இங்கே மிகப்பெரிய விழா நடை பெறும். காரைக்காலுக்கு மேற்கே 5 கி.மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது.

காவிரிப் பூம்பட்டினம் :— காவிரி கடலோடு கலக் கும் துறைமுகப் பட்டினமாயிருந்த இந்நகரம், இரண்டா யிரம் ஆண்டுகட்கு முன்—சங்க காலத்தில் சோழர்களின் தலைநகராயிருந்தது. காவிரி புகும்பட்டினம் என்றும் இதனைச் சிலர் கூறுவர். புகார் என்பது இதன் வேறு பெயராகும். பட்டினம் என்பது கடற்கரை ஊரைக் குறிக்கும். பண்டைக் காலத்தில் 'பட்டினம்' என்றால் இந்த ஊரைக் குறிக்கும் அளவுக்கு இது சிறப்புப் பெற்றி ருந்தது. சங்க இலக்கியங்களில் இந்நகரம் மிகவும்

பெருமை பெற்றிருந்தது. இப்போது இது இல்லை. சங்க காலத்தை அடுத்த கால அளவிலேயே இது கடலில் மூழ்கடிக்கப்பட்டது. பண்டு இந்நகரில் நடைபெற்ற விழாக்களும் வணிகமும் மிகவும் சிறப்புற்றிருந்தன.

சீர்காழி :— தஞ்சை மாவட்டத்துள் ஒரு வட்டத்தின் பெயராக உள்ளது சீர்காழி. சிறந்த சைவத் திருப்பதி இது. தேவார ஆசிரியர்கள் மூவருள் ஒருவராகிய திருஞான சம்பந்தர் பிறந்த இடம் என்ற பெருமை இதற்கு உண்டு.

தேவி கோட்டை :— இது, தென்னார்க்காடு மாவட்டத்தின் தென் பகுதியில் கடற்கரை ஓரமாக உள்ள ஊர். காவிரியின் பெரிய வடகிளையாறாகிய கொள்ளிடம் இவ்வூருக்கு அருகில் கடலில் கலக்கிறது.

சிதம்பரம் :— சோழநாட்டைச் சேர்ந்த சிதம்பரம் நகரம் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ளது, இப்பெயரால் உள்ள வட்டத்தின் தலைநகரமுமாகும் இது. காவிரியின் கிளை ஆறுகளுள் ஒன்றான வடவாற்றின் நீர் பாயும் வீராணம் என்னும் பெரிய ஏரி இந் நகருக்கு அண்மையில் உள்ளது. காவிரியின் முதல் பெரிய கிளை ஆறாகிய கொள்ளிடம் இந்நகர்ப் பகுதியின் தென் கிழக்கில் ஓடுகிறது. இதற்குத் தில்லை என்ற வேறு—பழைய—பெயரும் உண்டு. நடராசரும் கோவிந்தராசரும் எழுந்தருளியுள்ள இவ்வூர்க் கோவில் மிகவும் புகழ் வாய்ந்தது. இதற்கு அண்மையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்னும் பெரிய கல்வி நிறுவனம் உள்ளது.

**தேவாரத் திருப்பதிகள்**

காவிரிக் கரையிலும் அதன் கிளைகளிலும் உள்ள ஊர்கட்குச் சிறப்பு உண்டு. அந்த ஊர்களுள், நாயன்

மார்களின் தேவாரப் பாடலும் ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தப் பாடலும் பெற்ற ஊர்கள் மிகவும் சிறப்பு உடையன. பாடல் பெற்ற திருப்பதிகளின் வழியாக ஓடுவதால் ஆறுகளுக்கும் சிறப்பு உண்டு.

**காவிரி வடகரை — சோழநாடு :**

இப்போது, முதலில் சோழ நாட்டில், காவிரியின் வடகரையில் உள்ளனவும் தேவாரப் பாடல் பெற்றனவு மாகிய சைவத் திருப்பதிகளைத் தொகுத்துக் காண்பாம். நேரே காவிரிக் கரையில் இல்லாவிடினும், அதன் கிளையாறுகளுடன் தொடர்புடைய திருப்பதிகளும் இந்தப் பகுதியில் இடம் பெறும். அவையாவன :—

சைவத் திருப்பதிகள்

தில்லை, திருவேட்களம், திருமுல்லைவாயில், (இனி ஒவ்வோர் ஊர்ப் பெயருக்கும் முன்னால் 'திரு' என்பதைச் சேர்த்துப் படிக்கவும்), கழிப்பாலை, நல்லூர்ப் பெருமணம், மயேந்திரப் பள்ளி, தென் திருமுல்லை வாயில், கலிக்காமூர், சாய்க்காடு, காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவ னீச்சரம், வெண்காடு, கீழைத் திருக் காட்டுப் பள்ளி, குருகாவூர் வெள்ளடை, சீர்காழி, கோலக்கா, புள்ளிருக்கு வேளூர், கண்ணார் கோயில், கடைமுடி, நின்றியூர், புன்கூர், நீடூர், அன்னியூர், துருத்தி வேள்விக் குடி, எதிர்கொள்பாடி, மணஞ்சேரி, குறுக்கை வீரட்டம், கருப்பறியலூர், குரக்குக்கா, வாழ்கொளி புத்தூர், மண்ணிப் படிக்கரை, ஓமாம் புலியூர், கானாட்டு முள்ளூர், நாரையூர், கடம்பூர், பந்தணை நல்லூர், கஞ்சனூர், கோடிகா, மங்கலக் குடி, பனந்தாள், வாய்பாடி, சேய்ஞலூர், திருந்து தேவன் குடி, திருவியலூர், கொட்டையூர், இன்னம்பர், புறம்பயம், விசய மங்கை, வைகாவூர், வடகுரங்காடு துறை, பழனம், ஐயாறு, நெய்த்தானம், பெரும் புலியூர், மழ

பாடி, பழுவூர், கானூர், அன்பிலாத் துறை, மாந்துறை, பாற்றுறை, ஆனைக்கா, பைஞ்ஞீலி, பாச்சிலாச்சிரமம், ஈங்கோய் மலை ஆகியவை மொத்தம் 63 திருப்பதிகள்.

**காவிரித் தென்கரை—சோழநாடு**

இனித் தென்கரையில் உள்ள சைவத் திருப்பதிகளைக் காண்பாம்.

வாட்போக்கி, கடம்பந்துறை, பராய்த்துறை, கற்குடி, மூக்கீச்சரம், சிராப்பள்ளி, எறும்பியூர், நெடுங்களம், மேலைத் திருக்காட்டுப் பள்ளி, ஆலம் பொழில், பூந்துருத்தி, கண்டியூர், வீரட்டம், சோற்றுத் துறை, வேதிகுடி, தென்குடித்திட்டை, புள்ளமங்கை, சக்கரப் பள்ளி, கருகாவூர், பாலைத் துறை, நல்லூர், ஆவூர்ப் பசுபதீச்சரம், சத்தி முற்றம், பட்டீச்சரம், பழையாறை வட தளி, வலஞ்சுழி, குடமூக்கு, குடந்தைக் கீழ்க் கோட்டம், குடந்தைக் காரோணம், நாகேச்சரம், இடை மருதூர், தென் குரங்காடு துறை, நீலக்குடி, வைகல் மாடக் கோயில், நல்லம், கோழம்பம், ஆவடுதுறை, துருத்தி, அழுந்தூர், மயிலாடு துறை, விள நகர், பறியலூர் வீரட்டம், செம்பொன் பள்ளி, நனி பள்ளி, வலம்புரம், தலைச்சங்காடு, ஆக்கூர்த்தான் தோன்றி மாடம், கடவூர் வீரட்டம், கடவூர் மயானம், வேட்டக் குடி, தெளிச் சேரி, தருமபுரம், நள்ளாறு-ஆலவாய், கோட்டாறு, அம்பர்ப் பெருந்திருக்கோயில், அம்பர் மாகாணம், மீயச்சூர், மீயச்சூரிளங்கோயில், திலதைப் பதி, பாம்புரம், சிறுகுடி, வீழி மிழலை, வன்னியூர், கருவிலிக் கொட்டிட்டை, பேணு பெருந்துறை, நறையூர்ச் சித்தீச்சரம்,

அரிசிற்கரைப் புத்தூர், சிவபுரம், கலய நல்லூர், கருக்குடி, வாஞ்சியம், நன்னிலத்துப் பெருங்கோயில்,

கொண்டீச்சரம், பனையூர், விற்குடி வீரட்டம், புகலூர், புகலூர் வர்த்த மானீச்சரம், இராம நதீச்சரம், பயற்றூர், செங்காட்டங்குடி, மருகல்-செங்காட்டங் குடி, சாத்த மங்கை, நாகைக் காரோணம், சிக்கல், கீழ் வேளூர், தேவூர், பள்ளியின் முக்கூடல், திருவாரூர், ஆரூரர் அரநெறி, ஆரூர்ப்பரவையுண் மண்டளி, விளமர், காவீரம், பெருவேளூர், தலையாலங்காடு, குடவாயில், சேறை, நாலூர் மயானம், கருவாய்க்கரைப் புத்தூர், இருப்பூளை, அரதைப் பெரும்பாழி, அவளிவணல்லூர், பரிதி நியமம், வெண்ணியூர், பூவனூர், பாதாளீச்சரம், களர், சிற்றேமம், உசாத்தானம், இரும்பாவனம், கடிக்குளம், தண்டலை நீணெறி, கோட்டூர்,வெண்டுறை, கொள்ளம்பூதூர், பேரெயில், கொள்ளிக்காடு, தெங்கூர், நெல்லிக்கா, நாட்டியத்தான் குடி, காறாயில், கன்றாப் பூர், வலி வலம், கைச்சினம், கோளிலி, வாய்மூர், மறைக் காடு, அகத்தியான் பள்ளி, கோடிக்குழகர் ஆகியவை மொத்தம் 127 திருப்பதிகள்.

**கொங்கு நாடு :**

தருமபுரி, சேலம், கோவை, ஈரோடு ஆகிய மாவட்டங்கள் கொங்கு நாடு எனப்படும். கொங்கு நாட்டு வழியாகத் தானே காவிரி சோழ நாட்டிற்குள் புகுகிறது. எனவே, கொங்கு நாட்டுத் திருப்பதிகளையும் இவண் காண்போம்.

திருப்புக்கொளியூரவிநாசி, முருகன் பூண்டி. நணா, கொடி மாடச் செங்குன்றூர், வெஞ்சமாக்கூடல், பாண்டிக் கொடுமுடி, கருவூரானிலை ஆகியவை. மொத்தம் 7 திருப்பதிகள்.

**வைணவத் திருப்பதிகள் :**

இனி, ஆழ்வார்களால் பாடப்பெற்ற சோழ நாட்டு வைணவத் திருப்பதிகளைக் காண்பாம்.


திருவரங்கம், (திருகூட்டுக) அரிமேய விண்ணகரம், தேரழுந்தூர் (திருவழுந்தூர்), அன்பில், ஆதனூர், ஆலி, இந்தளூர், கண்டியூர், கண்ணங்குடி, கண்ணபுரம், கண்ண மங்கை, கரம்பனூரர், கவித்தலம், காவளம் பாடி, காழிச் சீராம விண்ணகரம், குடந்தை, கூடலூர், கோழி, சித்திர கூடம், சிறு புலியூர், செம்பொன் செய் கோயில், சேறை, தஞ்சை மாமணிக் கோயில், தலைச்சங்க நாண் மதியம், தெற்றி அம்பலம், தேவனார் தொகை, நந்திபுர விண் ணகரம், நறையூர், நாகை (நாகப்பட்டினம்), பார்த்தன் பள்ளி, புள்ளம் பூதங்குடி, பேர் நகர், மணிக்கூடம், மணி மாடக் கோயில், வண்புருடோத்தமம், விண்ணகர், வெள்ளக்குளம், வெள்ளாறை, வெள்ளியங்குடி, வைகுந்த விண்ணகரம் ஆகியவை. மொத்தம் 40 திருப்பதிகள்.

காவிரியின் தோற்றம் முதல் முடிவுவரை உள்ள பகுதிக்கு இடையிடையே, ஆற்றைச் சிறிதளவாவது ஒட்டினாற்போல உள்ள ஊர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கலாம். அனைத்தையும் ஈண்டு அறிவிக்க முடியா தல்லவா?

காவிரிக் கரை ஊர்களேயன்றி, காவிரிக் கரைப் பெருமக்கள், காவிரிக் கரை இலக்கியங்கள், காவிரிக் கரை அரசுகள், காவிரிக் கரைப் பண்பாடு-நாகரிகம் முதலிய பல தலைப்புகளில் பல செய்திகள் தரலாம். ஆனால், மூளைக்கட்டிப் (Brain Tumour) பிணியாள னாகிய எனக்கு இப்போது இதற்குமேல் இயலவில்லை. என்னால் இயன்றவரை ஓரளவு செய்திகள் தரப் பெற்றுள்ளன.

# 18. குடகு நாடு

காவிரியாறு குடகு நாட்டில் தோன்றி, மைசூர் நாடு எனப்படும் கருநாடக நாட்டின் வழியாகத் தமிழ் நாட்டை அடைவதால், குடகு நாட்டைப் பற்றியும் கருநாடக நாட்டைப் பற்றியும் சில செய்திகளை விதந்து தெரிந்து கொள்வது நல்லது.




மேற்காணும் வரை ஓவியத்தில் குடகு நாடு தனியாய் இருந்த நிலையைக் காணலாம்.

குடகு மைசூர் நகருக்குத் தென்மேற்கே உள்ளது. இது ஒரு மலை நாடு; பழைய சென்னை மாநிலத்தின் ஓர் எல்லையாகவும் கூறலாம். 9-10 ஆம் நூற்றாண்டுக் காலத்தில் தமிழ்க் காட்டுக் கங்கர் குலமன்னர்களால் ஆளப்பட்டது. பின்னர், சோழர், ஒய்சளர், விசயநகர அரசர்கள், பிதனூர் அரசர்கள் முதலியோர் அடுத் தடுத்து ஆண்டனர். 1834 ஆம் ஆண்டளவில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் நாட்டைப் பிடித்துக் கொண்டனர். இந்தியா உரிமை பெற்ற பிறகு, இந்தியக் குடியரசின் 'சி' பிரிவு அரசாக இருந்த குடகு நாடு இந்தியாவில் மொழிவாரி மாநிலம் பிரிக்கப்பட்டபோது —அதாவது—1956 நவம்பர் முதல் நாள் கன்னடம் பேசும் மைசூர் நாட்டுடன் இணைக்கப்பட்டது.

இதன் பரப்பளவு 1586 சதுர மைல் ஆகும். மக்கள் தொகை ஏறக்குறைய மூன்று நூறாயிரம் எனலாம். செழிப்புள்ள காடுகளும் ஆழமான பள்ளத்தாக்குகளும் ஈங்கு உண்டு. காஃபி உற்பத்தியில் சிறந்தது. உழவே முதன்மையான தொழில். ஈண்டு மழை வளம் மிகுதி. இந்நாட்டின் தலைநகர் 'மெர்க்காரா' என்பது.

பல்வேறு பழங்குடி மக்கள் இங்கே வாழ்கின்றனர். அவர்களுள் குடகர்கள் முதன்மையானவர்கள். போர் வீரர்களாகத் திகழ்ந்த இவர்களின் தொழில் வேட்டை யும் உழவுமேயாகும். குடகுமொழி பேசும் குடகர்களே யன்றி, துளு மொழி பேசும் கவுடர்களும் இருக்கின்றனர் இங்கே.

குடகு நாட்டின் தாய்மொழியாகிய குடகுமொழி, தமிழ் மொழியோடு நெருங்கிய தொடர்பு உடைய பழங் கன்னட மொழியின் ஒரு பிரிவாகும். இம்மொழி மலையாளத்திற்கும் கன்னடத்திற்கும் இடைப்பட்ட

தாகச் சொல்லப்படுகிறது. அங்ஙனமெனில், குழு அளவில், திராவிட மொழியாகிய தமிழ்மொழியின் சார்புடையது இது என்று கூறலாம். இந்த மொழிக்குத் தனி எழுத்து இல்லையாதலின், கன்னட எழுத்துகளாலேயே இது எழுதப்படுகிறது.

நீலகிரி மலைப் பகுதியில் வாழும் தோடர் மொழி குடகு போலவே தமிழோடு ஒத்த திராவிடமொழியாகும். தோடர் மொழிக்குத் தனி எழுத்து இல்லை, அவர்கள் தம் மொழிக்குத் தனி எழுத்து உண்டாக்க வேண்டும் என்று கூறுகின்றனர். இது போலக் குடகர்களும் ஒரு காலத்தில் குடகு மொழிக்குத் தனி எழுத்துத் தேவை என்பார்களோ— என்னவோ!

# 19. கருநாடக நாடு

மைசூர் அரசு, 1956 நவம்பரில் மொழிவாரி மாநிலம் பிரிக்கப்பட்ட பிறகு, சென்னை மாநிலம் பம்பாய் மாநிலம் முதலிய மாநிலங்களைச் சேர்ந்திருந்த கன்னடம் பேசும் பகுதிகளையும் குடகு நாட்டையும் இணைத்துக் கொண்டு 'கருநாடகம்' என்னும் பெயர் பெற்றது.

கருநாடகம் என்னும் சொல் வடமொழித் திரிவு என்பர் சிலர். ஆனால் பிஷப் கால்டுவெல், டாக்டர் குண்டர்ட் ஆகியோர் இது தமிழ்ச்சொல் என்கின்றனர். கருநிற மண்ணுடைய நாடு என்பது இவர்கள் கூறும் பொருளாகும். கிழக்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கே யுள்ள சமவெளிநிலம் ஆகும் இது.

இந்நாட்டை, ஆந்திரர், கதம்பர், சேரர், பல்லவர், கங்கர், காளுக்கியர், இராட்டிரகூடர், சோழர், ஒய்சளர், விசய நகர மன்னர்கள், ஔரங்கசீபு முதலிய இசுலாமிய மன்னர்கள் முதலியோர் ஒருவர் பின் ஒருவராக ஆண்ட பின்னர், இறுதியில் ஆங்கிலேயர் கைப்பற்றினர். 1947ஆம் ஆண்டு கருநாடகம் உட்பட இந்தியா உரிமை பெற்றது.

இந்தப் பகுதி இந்தியநாடு உரிமை பெற்றபோது மைசூர் அரசு என்றே அழைக்கப்பெற்றது. மக்களின்

மொழி கன்னடம். இப்போது பெங்களூர் தலைநகரா யிருப்பினும், அப்போது மைசூரே தலைநகராயிருந்தது. மைசூர் என்னும் பெயர் வடமொழிப் பெயராகும். பண்டு மைசூர் எருமையூர் என்றும், மைசூர்ப் பகுதி எருமை நாடு என்றும் வழங்கப்பட்டது. பின்னர் இது வடமொழியாக்கப்பட்டது. வடமொழியில் மகிஷம் என்றால் எருமை என்று பொருளாம். எனவே, எருமை யூர் என்னும் தமிழ்ப்பெயர் மகிஷாசூர் என மாற்றப் பட்டதாம். பின்னர் மக்களின் வழக்கில் மசிஷாசூர் என்பது மருவி மைசூர் என்றாயிற்று. பல இடங்களில் தமிழ்ப்பெயர் வடமொழிப் பெயராக்கப்பட்ட உண்மை பலரும் அறிந்ததே. பழமலை விருத்தாசலம் எனவும், அண்ணாமலை அருணாசலம் எனவும், மன்றம் சிதம் பரம் எனவும், மயிலாடுதுறை மாயூரம் எனவும், திருக் குடமூக்கு (குடந்தை) கும்பகோணம் எனவும் மாற்றப் பட்டதும், மற்றும் பல ஊர்ப் பெயர்களும் மக்கள் பெயர்களும் வடமொழியாயிருப்பதும் ஈண்டு ஒப்பு நோக்குதற்கு உரியன.

**கருநாடகம் பண்டைய தமிழ்நாடு**

முதலில் மைசூர்அரசு என்ற பெயர் பெற்றிருந்ததும் மைசூரை அப்போது தலைநகராகக் கொண்டிருந்ததும் ஆகிய கருநாடக நாடு இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் தமிழ் நாடாகவே இருந்ததாகத் தோன்றுகிறது. மகிஷாசூர் என்பதே மைசூர் எனத் திரிந்ததாகவும், எருமையூர் என்னும் தமிழ்ப்பெயரே பின்னர் மகிஷாசூர் என மாற்றப்பட்டதாகவும் முன்பு கண்டோம். இதற்குச் சான்று வேண்டுமல்லவா?

மிகப் பழைய வரலாற்றுக்குச் சான்றாக இருப்பவை இலக்கியங்களே. அகநானூற்றில் 'எருமையூரன்' என்

னும் சிற்றரசன் ஒருவன் குறிப்பிடப்பட்டுள்ளான். இவன், மைசூராகிய எருமையூரை ஆண்டவனாகத்தான் இருக்கவேண்டும். நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னன், தலையாலங்கானம் என்னும் இடத்தில் அரசர்கள் எழுவரை வென்றதாகச் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளான். அவனால் வெல்லப்பட்ட எழுவருள் எருமையூரனும் ஒருவன் ஆவான். பாடல் பகுதி வருமாறு :-

"கொய்சுவல் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
ஆலங்கானத்து அகன்தலை சிவப்பச்
சேரல், செம்பியன், சினங்கெழு திதியன்,
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி,
நாரறி நறவின் எருமையூரன்,
தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான், இயல்தேர்ப் பொருநன்,
என்று
எழுவர் நல்வலம் அடங்க ஒருபகல்
முரசொடு வெண்குடை அகப்படுத் துரைசெலக்
கொன்று களம் வேட்ட ஞான்றை
வென்றிகொள் வீரர் ஆர்ப்பினும் பெரிதே"—
அகம்-36: 13-23

என்பது பாடல் பகுதி. இதில் எருமையூரன் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். எருமையூரன் மைசூரான் என்பதற்குச் சான்றாக, மகிஷாசூர் என்னும் வடமொழி பெயர்ப்பு ஒருபுறம் இருக்க,மற்றொன்றும் கூறப்படுகின்றது. அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் அரசனும் இந்த எருமையூரனை வென்றதாகத் தமிழ்ச் கலைக் களஞ்சியத்தில் எழுதப்பட்டுள்ளது. இதற்கு இலக்கியச் சான்றாகப் புறநானூற்றில் ஒரு குறிப்பு உள்ளது. அதியமான் அஞ்சியை ஔவையார் பாடிய "அமராப்

பேணியும்" என்று தொடங்கும் 99ஆம் புறப்பாடலில் உள்ள,

"செருவேட்டு
இமிழ்குரல் முரசின் எழுவரொடு முரணிச்
சென்றமர் கடந்துநின் ஆற்றல் தோற்றிய
அன்றும் பாடுநர்க்கு அரியை..."-8-11

என்னும் பகுதியே அது. அதியமான் வென்ற எழுவருள் எருமையூரனும் ஒருவனாக இருக்கவேண்டும்.

மற்றொரு கருத்தும் ஈண்டு எண்ணத் தக்கது. அதியமான் தலைநகராகக் கொண்டிருந்த 'தகடூர்' என்னும் நகரம், பண்டு மைசூர் அரசுப் பகுதியில் இருந்ததாகத் தமிழ்க் கலைக் களஞ்சியத்தில் கூறப்பட்டிருப்பதன்றி, உ. வே. சாமிநாத ஐயர் அவர்களும் புறநானூற்றுக் குறிப்புரையில் கூறியுள்ளார்கள். இப்போது தமிழ்நாட்டில் கருநாடக மாவட்ட எல்லையின் அண்மையிலுள்ள எருமையூரில் (மைசூர்) இருந்த் அரசனோடு போர்புரிந்து வென்றிருக்கக் கூடும். வெல்லப்பட்ட அரசன் ஊரின் பெயரால் 'எருமையூரன்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளான். நெடுஞ்செழியன் எழுவரை வென்றதாகக் கூறும் புறநானூற்றுப் பாட்டில், பெயர் கூறாமல் எருமையூரன் என ஊர்ப்பெயரால் ஒரு மன்னன் குறிப்பிடப்பட்டிருப்பது போலவே, இன்னசேரன்-இன்ன செம்பியன் (சோழன்) எனப் பெயர் குறிப்பிடப்படாமல் சேரல்-செம்பியன் எனச் சேரனும் சோழனும் குடிப்பெயரால் குறிப்பிடப்பட்டிருப்பது ஈண்டு இணைத்து எண்ணத் தக்கது.

**செல்வ மைசூர்**

மைசூர் பண்டு எருமையூர் என்னும் பெயர் உடையதாயிருந்ததெனில் அது தமிழ் வழங்கிய பகுதியாகத்

தானே இருந்திருக்கவேண்டும். எருமை மாடுகள் மிகுதியாயிருந்திருக்கலாம். அதனால் இப் பெயர் பெற்றிருக்கலாம். சங்க இலக்கியமாகிய புற நானூற்றில் எருமை வெளியனார் என்னும் புலவரின் பாடல் உள்ளது. அவர் எருமை வெளி என்னும் ஊரைச் சேர்ந்தவர் என்றும் கூறப்படுகிறது.

எருமையூர் என்பது தாழ்ந்த பெயர் அன்று; அது மிகவும் உயர்ந்த பெயராகும். எருமைகள் நிறைந்த ஊர் மிக்க செல்வச் செழிப்புள்ள ஊராக இருந்திருக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் ஓர் எருமைமாடும் ஒரு முருங்கை மரமும் இருந்தால் அந்தக் குடும்பம் வளமாக இருக்கும்—என்று உலகியலில் கூறுவதுண்டு.

அந்தக் காலத்தில் மாடு பெரிய செல்வமாகக் கருதப்பட்டது. மிகுந்த மாடுகள் உடையவர்கள் மிக்க பெருஞ் செல்வர்களாக மதிக்கப்பட்டனர். இந்த அடிப் படையில் மாடு என்னும் சொல்லுக்குச் செல்வம் என்ற பொருளும் ஏற்பட்டது. இங்கே, திருக்குறளில் உள்ள

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்றை யவை" (400)

என்னும் குறட்பாவில் உள்ள மாடு என்னும் சொல் லுக்குச் செல்வம் என்பது பொருள்.

"எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்"

என்னும் திருநாவுக்கரசரின் திருவானைக்காத் தேவாரப் பாடல் பகுதியும் ஒப்பு நோக்கத் தக்கது.

கன்னட மொழியில் 'தன' என்னும் சொல் செல்வத் தைக் குறிக்கிறது. இம்மொழியில் மெய்யீற்றுச்

சொற்களே கிடையாது. எனவே, 'தனம்' என்பது 'தன என்றே வழங்கப்படுகிறது. இச்சொல்லுக்கு மாடு என்ற பொருளும் உண்டு. இலத்தீன் மொழியில் Pecunia என்னும் சொல்லுக்குச் செல்வம், மாடு என்னும் இரு பொருளும் உண்டு. அந்தக் காலத்தில் மாடு செல்வமாகக் கருதப்பட்டதால், பண்ட மாற்றுக்குப் பயன் பட்டது. எனவே, எருமை மாடு நிறைந்திருந்த எருமையூர் என்னும் மைசூர் அந்தக் காலத்திலேயே பெரிய செல்வ நாடாகத் திகழ்ந்திருக்க வேண்டும்.

எருமையூர், எருமை நாடு என்னும் வழக்காறுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்குங்கால், பண்டைக் காலத்தில் மைசூர்ப் பகுதி (கரு நாடகம்) தமிழ் நாடாக இருந்திருக்க வேண்டும்.

இதனால் மைசூர்ப் பகுதி, இப்போதைய தமிழ் நாட்டினும் தாழ்ந்தது—தமிழ் நாட்டிற்குக் கட்டுப் பட்டது என்று பொருள் இல்லை. தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், கருநாடகம், குடகு, துளுவம் ஆகிய இடங்களில் ஏதோ ஒரு மொழியே சிறுசிறு மாறுதல்களுடன் பேசப்பட்டது. நாளடைவில் பல்வேறு சூழ்நிலை மாற்றங்கள் ஏற்பட்டதனால், தமிழ்நாட்டில் வழங்கிய பேச்சு தமிழ் என்றும், ஆந்திராவில் வழங்கிய பேச்சு தெலுங்கு என்றும், கேரளாவில் வழங்கிய பேச்சு மலையாளம் என்றும், கருநாடகத்தில் வழங்கிய பேச்சு கன்னடம் என்றும், குடகு நாட்டில் வழங்கிய பேச்சு குடகு என்றும், துளுவ நாட்டில் வழங்கிய பேச்சு துளுவம் என்றும் பெயர் பெற்றன, ஏதோ ஒரு மூல மொழியின் திரிபுகளே இத்தனை மொழிகளுமாகும்; இவை திராவிட மொழிகள் எனப்படுகின்றன,

இந்தத் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகட்கெல்லாம் பொதுவான மூல மொழியாக இருப்பது தமிழ் மொழி என்று கருதப்படுகிறது. இங்கே நமது ஆய்விற்குத் தேவையானது கன்னட மொழி அமைப்பேயாகும். தமிழினின்றும் கன்னட மொழி எவ்வாறு மாறுதல் பெற்றுள்ளதோ, அவ்வாறே, மற்ற திராவிட மொழிகளும் தமிழினின்றும் மாறுதல் பெற்றுள்ளன என்று கொள்ளலாம். எனவே, இங்கே தமிழுக்கும் கன்னடத்திற்கும் உள்ள தொடர்பைப் பற்றி மட்டும் கவனிக்கலாம். பழங்கன்னடம் தமிழோடு மிகவும் நெருங்கியது என்ற ஆய்வாளர்களின் கருத்தும் இங்கே நினைவு கூரத் தக்கது.

## உடன் பிறப்பு

தமிழிலும் கன்னடத்திலும் ஆயிரக்கணக்கில் ஒத்த சொற்கள் உள்ளன. இவ்வாறு தமிழோடு ஒலிப்பில் ஒத்த (சுமார்) ஆயிரம் கன்னடச் சொற்களை, "தொல் திராவிட மொழி கண்டு பிடிப்பு" என்னும் எனது நூலில் யான் தந்துள்ளேன். தமிழ் மொழியே கூட எழுதுவது ஒரு மாதிரியாயும் பேசுவது ஒரு மாதிரியாயும் உள்ளது. தலை, இலை, மலை, மாலை என்னும் தமிழ்ச் சொற்களை எடுத்துக் கொள்வோம். இவற்றை இவ்வாறு எழுதினாலும், மக்கள் பேசும் போது, தலெ, எலெ, மலெ, மாலெ என்று ஒலிக்கின்றனர். இந்தப் பேச்சுத் தமிழ் கொச்சைத் தமிழ் எனப்படும். ஆனால், கன்னட மொழியில், இந்தக் கொச்சைத் தமிழ்ச் சொற்கள் இலக்கணமுடைய எழுத்து வழக்குச் சொற்களாக உள்ளன. அவர்கள் தலெ, எலெ, மலெ, மாலெ என்றே எழுதுகின்றனர். எனவே இத்தகைய கன்னட வடிவத்தைப் பேச்சுத் தமிழ் (Spoken Tamil) என்று கூறலாம்.

எந்த மொழியும் முதல் முதலாக எழுதப்படும் போது மக்கள் எவ்வாறு பேசினார்களோ அவ்வாறே எழுதப்படும்-என்பது ஒரு பொதுக் கருத்து. எனவே, கன்னட மொழி, முதல் முதலில் எழுதப்பட்டபோது, கொச்சைத் தமிழ்ச் சொல்லாகிய பேச்சு வழக்குத் தமிழ்ச் சொல்லைத் தனது எழுத்து வழக்குச் சொல் லாகக் கொண்டு எழுதப்பட்டது என்பது புலனாகும்.

இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழில் பெரிய இலக்கிய[2]இலக்கண நூல்கள் எழுதப்பட்டு விட்டன. ஆனால், கன்னடத்தில் எழுதப்பட்ட முதல் நூல். கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 'கவிராஜ மார்க்கம்' என்னும் நூலாகும்-என்று சொல்லப்படுகிறது. மற்றும், இந்நூலின் ஆசிரியர் இராட்டிர கூட மன்னனான நிருப துங்க அமோக வர்ஷன் (814-877) என்று சிலர் கூறுகின்றனர்; வேறு சிலர் அம்மன்னனின் அவைக்களப் புலவர் எழுதியதாகக் கூறுகின்றனர். ஒரு வேளை, அவைக்களப் புலவர் அரசன் பெயரால் வெளியிட் டிருக்கலாமோ-என்னவோ!

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே சங்கப் பாடல் களில் தமிழ்க் காவிரி மிகப் பரவலாகப் பேசப்பட் டுள்ளது. 'கவி ராஜ மார்க்கம்' என்னும் வடமொழிப் பெயர் கொண்ட முதல் நூலே ஒன்பதாம் நூற்றாண் டில் எழுதப்பெற்ற கன்னட மொழியில், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் காவிரி எவ்வாறு குறிப்பிடப்பட் டிருக்குமோ தெரியவில்லை- காவிரியின் தொடக்க இடமே 'தலைக் காவிரி' என்னும் தமிழ்ப் பெயர் கொண்டுள்ளது.

தமிழும் கன்னடமும் தாய்-சேய் இல்லையெனினும் உடன்பிறப்பு என்பதை யாரும் மறுக்க முடியாது. சமசுகிருதத் தொடர்பு தென்னாட்டில் வேர் ஊன்று வதற்கு முன்பு தமிழும் கன்னடமும் மிகவும் நெருங்கிய வையா யிருந்தன. சமசுகிருத ஆட்சி மேலோங்கிய பின்பு கன்னடம் அம்மொழி எழுத்துகளையும் பெற்றுக் கொண்டு தமிழினின்றும் சிறிது சிறிதாக விலகத் தொடங்கி வேற்று மொழியாகி விட்டது. இங்கே 'ஹொகெனகல்' என்னும் ஒரு சொல்லை மட்டும் எடுத்துக் கொள்வோம்:

காவிரியாற்றின் இடையே 'ஹொகெனகல்' என்னும் நீர் வீழ்ச்சி ஒன்று உள்ளதன்றோ? கல் பாறையில் விழும் நீர்த் துளிகள் மேலெழுந்து புகைபோல் காணப்படுவ தால் இந்த நீர் வீழ்ச்சிக்கு இப்பெயர் ஏற்பட்டது என்பதும், 'ஹொகெ' என்னும் கன்னடச் சொல்லுக்குத் தமிழில் புகை என்பது பொருள் என்பதும் முன்னரே அறிவிக்கப்பட்டுள்ளது.

கன்னட 'ஹொகெ' என்பதும தமிழ்ப் 'புகை' என்பதும் ஒரே சொல்லே யாகும். புகை என்பது தமிழின் எழுத்து வழக்கு; ஹொகெ என்பது தமிழின் பேச்சு வழக்கை ஒட்டியதாகும். இதற்கு உரிய விளக்கம் வருமாறு:-

தலை என்னும் தமிழ்ச் சொல், பேச்சுத் தமிழில் 'தலெ' எனப்படுகிறது; இது கன்னடத்தில் 'தலெ' என எழுத்து வழக்காக உள்ளது-என்பது முன்னரே கூறப் பட்டுள்ளது. எழுத்துத் தமிழில் தலை, மலை முதலிய சொற்களின் இறுதியில் உள்ள 'ஐ' என்பது, பேச்சுத் தமிழிலும் எழுத்துக் கன்னடத்திலும் தலெ, மலெ என 'எ' வாகத் திரிகிறது. இவ்வாறே, புகை என்னும் சொல் பேச்சுத் தமிழிலும் எழுத்துக் கன்னடத்திலும்

'பொகெ' என வழங்லப்படும். சரி-'கை' என்பது 'கெ' என்றாயிற்று; 'பு' என்பது 'பொ' ஆனது எப்படி என்பதையும் காண வேண்டும்:

'உ' என்பதோ, அல்லது, மெய்களின்மேல் 'உ' ஏறிய உயிர் மெய் எழுத்துகளாகிய கு,சு,து,நு,பு,மு என்னும் மொழி முதலில் வரும் எழுத்துகளுள் ஒன்றோ ஒரு சொல்லின் முதல் எழுத்தாக இருக்க வேண்டும். அச் சொல்லின் இரண்டாவது எழுத்தாக, மெய்யெழுத்துகளின் மேல் அ,ஆ,ஐ ஏறிய உயிர்மெய் எழுத்துகளுள் ஏதாவது ஒன்றிருப்பின், மொழி முதலில் உள்ள 'உ' என்பது பேச்சு வழக்கில் 'ஒ' எனத் திரியும். இது கொச்சை உருவமாகும். எழுத்து வழக்கில் இவ்வாறு திரியாது. சில எடுத்துக்காட்டுகள் வருமாறு :-

உழவு = ஒழவு, உலாத்துதல் = ஒலாத்துதல், உடை = ஒடெ, குழவி = கொழவி, குழாய் = கொழா, குழை = கொழெ, சுடலை = சொடலெ, சுறா = சொறா சுனை = சொனெ, துடை = தொடெ, துலாம் = தொலாம், துணை = தொணெ, நுகத்தடி = நொகத்தடி, நுணா = நொணா, நுரை = நொரெ, புலம்பு = பொலம்பு, புறா = பொறா, புகை = பொகெ, முழம் = மொழம், முலாம் = மொலாம், முனை = மொனெ—இவ்வாறு இன்னும் பல காட்டலாம்.

இத்தகைய பேச்சு வழக்காற்றின்படி 'புகை' என்பது 'பொகெ' என்றாயிற்று. கன்னடத்தில் பொகெ என்று தானே இருக்க வேண்டும். ஹொகெ என்றிருக்கிறதே—என்று வினவலாம். இதிலே ஒரு திரிபு உள்ளது. தமிழில் உள்ள பகர வரிசை எழுத்துகள் கன்னடத்தில் ஹகர வரிசை எழுத்துகளாக மாறும். இதற்கு உரிய எடுத்துக்காட்டுகள் சில வருமாறு :-

அப்பளம்=ஹப்பளம், பால்=பாலு=ஹாலு, பணம்=ஹண, (கன்னடத்தில் மெய்யெழுத்து ஈற்றில் வராது). பேன்=பேனு=ஹேனு, பல்லி=ஹல்லி, பல்=பல்லு=ஹல்லு, பத்து=ஹத்து, பலகை—பலகெ—ஹலகெ, பகை-பகெ=ஹகெ, பித்தளை-பித்தளெ-ஹித்தளெ, பிட்டு=ஹிட்டு, பெண்—பெண்ணு=ஹெண்ணு, பாடு=ஹாடு.

இவ்வாறு இன்னும் பல உண்டு. இந்த் அடிப்படையில், புகை என்பது தமிழில் 'பொகெ' என்று ஆக, கன்னடத்தில் 'ஹொகெ' என்றாயிற்று-எனலாம்.

இங்கே இவ்வளவு எடுத்துக் காட்டியதற்குக் காரணம், கன்னடமும் தமிழும் நெருங்கிய தொடர்புடையவை-கன்னடியரும் தமிழரும் நெருங்கிய தொடர்புடையவர்கள்-என்பதை நிறுவுவதேயாம்.

# 20. நீர் வேட்டல்

காவிரி நீர் தொடர்பாக நாம் கூறுவது:—இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே காவிரி பொய்க்காமல் நீர் வழங்கி வருகிறது; காவிரி தமிழ்நாட்டாரின் தாய்; சோழர்களின் குல ஆறு, தெய்வப் புனலாக மதிக்கப்படுகிறது; தன் வளவிய நீரால் தமிழ்நாட்டை வளநாடாக்கியது; மிக்க ஆழத்துடனும் பெரிய பரப்புடனும் தமிழகத்தில் திகழ்ந்தது; பொன்னி என்னும் செல்லப் பெயர் உடையது: வடக்கில் கங்கையைப் போலத் தெற்கில் தென்கங்கை எனப்படுவது. 'தமிழ்ப் பாவை' என்னும் சிறப்புப் பெயர் பெற்றது; சோழர்களால் கொண்டு வரப்பட்டது-கரை கட்டப்பட்டது-அணை கட்டப்பட்டது-என்றெல்லாம் இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் நூல்களில் கூறப்பட்டு வருகிறது. இந்த நிலைமை காவிரிக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே என்றென்றைக்கும் நீடித்திருக்க வேண்டும். இப்போது காவிரியைப் பொய்க்கச் செய்யலாகாது. வழக்கம்போல் வளம் தரச் செய்ய வேண்டும். இதற்கு, உடன் பிறப்பாகிய கருநாடகக் கன்னட நாடு, பரந்த மனப்பான்மையுடன் செயல்பட வேண்டும். உடன் பிறந்தவர்களிடம் உரிமை கேட்கத் தமிழர்க்கு உரிமை உண்டு. பங்கு என்ற பெயரில் தராவிடினும், மக்கட் பிணைப்பு, (மனிதாபிமானம்) வரையாத வள்ளன்மை, உயிர் காக்கும் பேருதவி-இன்ன பெயர்களாலாவது தமிழ்நாட்டைக் காக்க வேண்டும் எனக் கருநாடகம் வேண்டப் பெறுகிறது.

# 21. பிற் சேர்க்கை

நான் இந்த நூலை எழுதி முடித்ததும், ஒரு வாரத்திற்குப் பின், 28-10-1988ஆம் நாளிட்ட "தினமணி" நாளிதழில், 'முத்தரசர்' என்பது பற்றி உயர்திரு இரா. நாகசாமியவர்கள் எழுதிய பின்வரும் செய்தியைப் படித்தேன். கன்னட நாடு பழந்தமிழ் நாடு-பழங் கன்னடமும் தமிழும் ஏறக்குறைய ஒன்றே-என்னும் என் கொள்கைக்குச் சான்று பகர்வது போல் நாகசாமியவர்கள் தந்துள்ள செய்தி அமைந்திருப்பதால், நாகசாமியவர்கட்கும் 'தினமணி' ஆசிரியர்க்கும் நன்றி செலுத்தும் உணர்வுடனே இங்கே அச்செய்தியைத் தருகிறேன். தலைப்பு "முத்தரையர்." "..... முத்தரசர் என்ற சொல் முதன் முதலில் கி.பி. ஆறாம் நூற்றாண்டில்தான் காணப்படுகிறது. அதுவும் தமிழ்நாட்டில் இல்லை. பெங்களூர், கோலார், தலைக்காடு பகுதியில் அக்காலத்தில் ஆண்ட கங்கர் என்பவர்களின் செப்பேடுகளில்தான் முதன் முதலில் காணப்படுகிறது. இவர்களுக்குக் கொங்கணி கங்கர் என்று பெயர்.

ஏறக்குறைய 550லிருந்து 600க்குள் ஆண்டவன் கங்க மன்னன் துர்விநீதன் என்பவன். மிகச்சிறந்த வீரனாகவும் அறிவாளியாகவும் திகழ்ந்தவன் இவன். கங்க துர்விநீதன் 'முத்தரையர்' என்றால் என்ன பொருள் என்று தன் செப்பேட்டில் கூறியிருக்கிறான். இவனது செப்பேடு

இரு மொழிகளில் உள்ளது. முதல் பகுதி சம்ஸ்கிருதத்திலும் இரண்டாம் பகுதி பழைய கன்னடத்திலும் உள்ளது. (பழைய கன்னடம் என்பது பெரும்பாலும் தமிழாகவே இருக்கும்). சம்ஸ்கிருதப் பகுதியில் துர்வி நீதன் தன்னை கொங்கணி விருத்தராஜன் (ஸ்ரீமத் கொங்கணி விருத்தராஜனே துர்விநீத நாமதேயன்) என்று குறிக்கிறான்.

இதே பகுதியைக் கன்னடத்தில் கூறும்போது "ஸ்ரீ கொங்கணி முத்தர சரு" என்று கூறுகிறான். இதிலிருந்து முத்தரசர் என்ற சொல்லுக்கு நேர் சம்ஸ்கிருதச் சொல்லாக விருத்தராஜன் என்ற மொழி பெயர்ப்பு உள்ளது. ஆதலின் முத்தரசர் என்ற சொல் மூத்த குடி என்பதன் பெயரே. உண்மையில், முதுஅரசர் என்பதே முத்தரசர் என்று வந்துள்ளது. முத்தரசர் என்று குறிக்கப்படும் துர்விநீதன் முதுகுடியைச் சேர்ந்த வன். இது போல கி. பி. 7-ம் நூற்றாண்டில் ஆண்ட முதலாம் சிவமாறன் என்ற கங்க மன்னனும், 8-ம் நூற்றாண்டில் ஆண்ட கங்கன் ஸ்ரீ புருஷன் என்பவனும் சம்ஸ்கிருதப் பகுதியில் "விருத்தராஜா"என்றும் கன்னட பகுதியில் முத்தரசர் என்றும் அழைக்கப்படுகின்றனர். ஒன்று அல்ல, இரண்டு அல்ல,பல கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் கங்கர்களை முத்தரசர் என்று அரசப் பட்டயங்கள் குறிக்கின்றன. இதிலிருந்து முத்தரையர் என்ற சொல் எவ்வாறு தோன்றியது என்றும், கங்க அரசர்களே முத்தரையர் என்றும் தெளிவாக்கப் பட்டுள்ளது.

## முது பெரும் வேளிர் கங்கர்

இந்தச் சங்க மன்னர்கள் தம்மை ஏன் முத்தரையர் என அழைத்துக் கொண்டனர்? கொங்கணி கங்க அரசர் களின் வரலாற்றை எழுதுபவர்கள் கி.பி.4ம் நூற்றாண்டி

லிருந்து தான் தொடங்குகிறார்கள். அவர்கள் கொங்கணம், கன்னடப் பகுதியை ஆண்டதால் கன்னட அரசர்கள் என்றும் கூறுவர். உண்மையில் கங்கர்கள் தமிழ் முதுகுடி மக்களே. முது பெரும் வேளிர்களில் ஒருவரே கங்கர் எனச் சங்கஇலக்கியங்கள் தெளிவாக கூறுகின்றன. அகநானூற்றில் உள்ள ஒரு பாடல் "நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி, துன்னருங் கடுந்திறல் கங்கன் கட்டி" (அகம்-44) என்று கங்க அரசனைக் கூறுகிறது. இவன் சோழ மன்னனோடு பொருது தோற்றுப் போயிருக்கிறான்? கொங்காணம் என்னும் பகுதியின் தலைவன் நன்னன் என்றும் அவன் தமிழ்க்குடிமகன் என்றும் சங்க இலக்கியங்களிலிருந்து அறிகிறோம். கங்கர் குடியினர் சங்க காலத்திற்குப் பிறகு கொங்காணத்தைத் தம தாக்கிக் கொண்டு படிப்படியாக, பெங்களூர், தலைக்காடு, கோலார் பகுதிகளைப் பிடித்து ஒரு பேரரசை நிறுவினார்கள். இருப்பினும் தமிழகத்துடனேயே தொடர்பு கொண்டிருந்தனர். சோழ அரசுடனும் பல்லவ அரசுடனும் இணை பிரியா நட்பு பூண்டிருந்தனர். இவர்களில் சில அரசர்களுக்கும் பல்லவ அரசர்கள் முடிசூட்டியுள்ளார்கள்.

## கன்னடமும் சம்ஸ்கிருதமும்

தமிழ்ப் பெரு மன்னர்களான சேர மன்னர்களே சங்க காலத்திற்குப் பின்னர் மேலைக் கடற்கரைப் பகுதியிலே தங்கி, அங்கு மலர்ந்த மொழியால்மலையாள அரசர்களாகி விட்டது போன்று, தமிழ் மன்னர்களான கங்கர்கள் கொங்கணப் பகுதியில் ஆட்சி புரியத் தொடங்கி, கி.பி. 5-ம் நூற்றாண்டில் அங்குத் தனித் தன்மை' வாய்ந்ததாகக் கன்னட மொழி வளர, மக்கள் மொழியான கன்னடத்தையும் சம்ஸ்கிருதத்தையும் பயன்படுத்தினர். இருப்பினும் இவர்கள் தமிழையும்

விட்டுவிடவில்லை. இவர்களது பல கல்வெட்டுகள் தமிழில் உள்ளன. கி. பி. 3, 4-ம் நூற்றாண்டுகளில் பழைய கன்னடத்திற்கும் தமிழுக்கும் அதிக வேறுபாடு இல்லை என்பது ஆராய்ச்சியாளர் அறிந்ததே.

அப்பகுதியில் பெரு மன்னர்களாக மலர்ந்த இம் மன்னர்கள், தாங்கள் புதிதாக ஆட்சிக்கு வந்தவர்கள் அல்லர்; மிகவும் தென்மையான குடியைச் சேர்ந்தவர்கள் என்பதை வலியுறுத்தும் வகையில் தம்மை முதுகுடி முத்தரையர் (விருத்த ராஜா) என்று அழைத்துக் கொள்ளத் தலைப்பட்டனர். ஆதலின் கங்கர் முத்தரையர் என்றும், தமிழ் முது பெரும் வேளிர் வழி வந்தவர் என்றும் தமிழ் வரலாற்றோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர் என்றும் அறிகிறோம்''—

இதுதான், கல்வெட்டு ஆராய்ச்சி மேதை உயர்திரு இரா. நாகசாமி யவர்கள் 'தினமணி' நாளிதழில் எழுதிய பகுதியாகும். (கட்டுரையில் இதற்கும் முன்னால் ஒரு சிறு பகுதி உள்ளது: அது தேவையில்லை என விடப் பட்டது).

கங்கனைத் தோல்வியுறச் செய்த சோழ வேந்தன் பெரும் பூட் சென்னி என்பவன். கங்கர் பற்றிச் சிலப்பதிகாரத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது :

'கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்
பங்களர் கங்கர் பல்வேல் கட்டியர்''—25-156, 157

என்பது சிலம்புப் பகுதி. அடுத்து, நன்னன் என்பவன் சங்க இலக்கியங்கள் பலவற்றில் பல பாடல்களில் குறிப் பிடப்பட்டுள்ளான். விரிப்பின் பெருகும். நன்னன் குடி

யினர் வேளிர்கள் என்பதை அகநானூற்றுப் பாடல் பகுதிகளால் அறியலாம்:

"நறவு மகிழ் இருக்கை நன்னன் வேண்மான்
வயலை வேலி வியலூர்"-அகம்-97-2, 13.

வேண்மான் என்பது வேளிர் குடியைக் குறிக்கும்.

"நன்னன் உதியன் இருங்கடிப் பாழித்
தொன்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த"-258-1,2

இது நன்னன் உதியன் என்பவனைப் பற்றியது. இவன் வேளிர் குடியினன் என்பதைப் பாடலால் அறியலாம்.

இது காறும் கூறியவற்றால், தமிழரும் கன்னடியரும் ஒரு குடும்பத்தினர் என்பது பெறப்படும். எனவே, கன்னடியர் தமிழ் நாட்டுக்குத் தண்ணீர் விடுவது, தம் குடும்பத்திற்குச் செய்யும்ஆக்கம் போன்றதேயாகும் அல்லவா? தமிழர் — கன்னடியர் இடையே உதவி ஒத்துழைப்பு - ஒற்றுமை மேன்மேலும் ஓங்கி வளர்க-வாழ்க.

# கருத்து வழங்கிய கருவூல நூல்கள்

(குறிப்பு : முதலில் இந்நூலின் பக்க எண்ணும், அடுத்து மேற்கோள் நூலின் பெயரும் உட்பிரிவும், மூன்றாவதாக ஆசிரியர் பெயரும் அமைந்திருக்கும்.)

9. கவுதமப் புத்தர் காப்பியம்— 26: 180-89 — சுந்தர சண்முகனார்.

11. நல்வழி - 24 -ஔவையார்

15. காவிரித் தல புராணம்

15. கந்த புராணம் -கச்சியப்ப சிவாச்சாரியார்

15. கந்த புராண வெண்பா - தி. சு. வேலுசாமிபிள்ளை

15. பிரபுலிங்க லீலை - காப்பு - சிவப்பிரகாசர் (நல்லாற்றூர்)

16. பெரிய புராணம் - திருநாட்டுச் சிறப்பு - 2 - சேக்கிழார்

16. மணிமேகலை பதிகம் - 10,11,12 -சீத்தலைச் சாத்தனார்

16. மணிமேகலை — சிறை செய் காதை-27,28

16. திருப்புகழ்-296 -அருணகிரிநாதர்

17. மணிமேகலை - 3 — 55, 56 -சீ. த. சாத்தனார்

17. மணிமேகலை - 9- 52,53

17. ஆக்கினேய புராணம்-

18. அபிதான சிந்தாமணி-ஆ. சிங்காரவேலு முதலியார்

19. கலிங்கத்துப் பரணி- 192,298 -செயங்கொண்டார்

25. அகநானூறு-76—11,12 -பரணர்

25. பதிற்றுப் பத்து-50 -5 -பரணர்

27. பாரதிதாசனார் கவிதைகள்

27. பட்டினப்பாலை- 7,8 -கடியலூர் உருத்திரங் கண்ணனார்

28. பாரதிதாசனார் கவிதைகள்

28. சேந்தன் திவாகரம்-இடப் பெயர்த் தொகுதி-50 -திவாகரர்

28. பெருமாள் திருமொழி-1-1 -குலசேகர ஆழ்வார்

28. திவ்வியப் பிரபந்தம் - 981 -தொண்டரடிப்பொடி ஆழ்வார்

28. சம்பந்தர் தேவாரம்

9. பெரிய புராணம் 54, 57, 502, 1022, 12, 11, 1571 -சேக்கிழார்

9. விக்கிரம சோழன் உலா- 25, 26, 81, 500, 520 -ஒட்டக்கூத்தர்

0. குலோத்துங்க சோழன் உலா- 35 -ஒட்டக்கூத்தர்

9. இராசராசசோழன் உலா—29, 493-94 -ஒ. கூத்தர்

0. குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ் - 15 ஒ. கூத்தர்

0. பாரதிதாசனார் கவிதைகள்

2. புறநானூறு 35 -வெள்ளைக்குடி நாகனார்

3. புறநானூறு 386-22,27 -கோவூர் கிழார்

3. புறநானூறு 393-22,23 -நல்லிறையனார்

34. பட்டினப்பாலை 1 - 8 -கடியலூர் உருத்திரங் கண்ணனார்
35. சிலப்பதிகாரம் 10:102-109 - இளங்கோவடிகள்
35. மணிமேகலை-பதிகம்—24,25 -சாத்தனார்
36. பட்டினப்பாலை : 105-116 -க. உ. கண்ணனார்
37. சிலப்பதிகாரம்- 7-27; 10 கட்டுரை-8,9; 27:170,171
37. மணிமேகலை 3-55 -சாத்தனார்
37. முத்தொள்ளாயிரம் -80
38. திவாகரம் -திவாகரர்
38. பெரிய புராணம் (சண்டேசுவரர்) 1251
38. தக்கயாகப் பரணி-வாழ்த்து- 812 -ஒட்டக்கூத்தர்
38. குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ்- 15- ஒ. கூத்தர்
38. விக்கிரமசோழன் உலா 81, 520—ஒ. கூத்தர்
38. வில்லி பாரதம் - அருச்சுனன் தவநிலைச் சருக்கம் -24 -வில்லிபுத்தூரார்
39. பாரதிதாசனார் கவிதைகள்
39. மலரும் மாலையும் -கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
40. கீட்ஸ் ஆங்கிலப் பாடல் பகுதி
41. அகநானூறு 6-6, 7 -பரணர்
42. அகநானூறு 10,-11 -அம்மூவனார்
42. அகநானூறு 341,4,5 -ஆலூர் மூலங்கிழார்
42. அகநானூறு 126- 3,5 -நக்கீரர்
42. ஐங்குறு நூறு, 7-42 -ஓரம் போகியார்
42. புறநானூறு 43-22 மாறோக்கத்துநப்பசலையார் 174-8,9 தாமப்பல் கண்ணனார்
43. பாரதிதாசனார்-குடும்ப விளக்கு- திருமணம்-11
43. சம்பந்தர் தேவாரம் -திருப்பழனப்பதிகம்
45. புறம் - 174 - 8
45. முத்தொள்ளாயிரம் -86
45. பெரிய புராணம் 62, 1211 -சேக்கிழார்
46. சுந்தரர் தேவாரம் - திருவையாற்றுப் பதிகம்

46. கம்பராமாயணம்-கங்கை காண் படலம் -கம்பர்
47. அகம்- 123-10; 177-16; 186-15,16; 213-21, 23; 226-8;
326-9, 11
48. புறம்- 58-1 காரிக்கண்ணனார்
48. புறம்-385 — 8, 9 -கல்லாடனார்
48. புறம்-399- 11, 12 -ஐயூர் முடவனார்
48. களவழி நாற்பது- 7,24,35,36 -பொய்கையார்
49. பொருநராற்றுப்படை - 246-48 -முடத்தாமக் கண்ணியார்
49. பொருநராற்றுப்படை வெண்பா-1,3
49. சிலம்பு- 29-15; 1-5, 6 -இளங்கோவடிகள்
49. முத்தொள்ளாயிரம்- 63,64,68,78,79, 89, 96, 99, 101
50. குலோத்துங்க சோழன் உலா- 29, 30 -ஒ. கூத்தர்
50. கலிங்கத்துப் பரணி- 528 -செயங்கொண்டார்
51. திருமுருகாற்றுப்படை- 317 -நக்கீரர்
51. புறம்- 163 -பெருஞ்சித்திரனார்
52. மணிமேகலை - பதிகம்- 23 -சாத்தனார்
52. வி. சோ. உலோ- 500 -ஒ கூத்தர்
52. கு. சோ. பிள்ளைத் தமிழ்- 53 ஒட்டக்கூத்தர்
53. மணிமேகலை-பதிகம்- 24, 25, 12, 6; 3-55
53. சிலம்பு - நாடு காண் காதை- 48 -இளங்கோவடிகள்
54. பாரதிதாசனார் கவிதைகள்
54. திருக்குறள் 1040 -திருவள்ளுவர்
54. கலிங்கத்துப் பரணி- 59 - செயங்கொண்டார்
55. சிலம்பு- 7-கானல் வரி- 25, 26 -இளங்கோ
56. பெரிய புராணம்- 55 -சேக்கிழார்
56. அகம்- 222: 5-10; 45-13, 14; 236: 16-20, 76:7-13
58. பாரதிதாசனார்-குடும்ப விளக்கு-மக்கட்பேறு
59. சிலம்பு-5: 165-168; 10 கட்டுரை-8
59. பட்டினப் பாலை- 99, 100 -க. உ. கண்ணனார்
60. சம்பந்தர் தேவாரம்- 1-16-5; 7-7-46; 2-2-9-6;
3-79-5-7; 1-15-5;

60. சுந்தரர் தேவாரம்-பாண்டிக் கொடுமுடி பதிகம்
61. திவ்வியப் பிரபந்தம்- திருமாலை (894)-தொண்ட ரடிப்பொடி ஆழ்வார்
61. பெரியபுராணம்- 404, 57, 3577 -சேக்கிழார்
62. தனிப்பாடல் -ஔவையார்
63. அகம்- 166-14, 15; 226: 10-12 -இடையன் நெடுங்கீரனார்-பரணர்
63. குறுந்தொகை- 258-3 -பரணர்
63. மணிமேகலை- 5-39, 40; 22-40, 41
64. சம்பந்தர் தேவாரம்- 2-2-9-6
64. பெரிய புராணம்- 3577 -சேக்கிழார்
64. வி. சோ. உலா- 500 -ஒ. கூத்தர்
65. அகம்-123 ; 226-8; 222-5
65. சிலம்பு- 5-165 ; 10: 214, 15; 25-123
65. மணிமேகலை- 5-39 -சாத்தனார்
65. முத்தொள்ளாயிரம்- 258
65. சம்பந்தர் தேவாரம்-பாண்டிக் கொடுமுடிப்பதிகம்
65. பெரிய புராணம்-518 -சேக்கிழார்
66. புறம்- 68: 8-10 : கோவூர் கிழார். ஆவூர் மூலங்கிழார் 166-28, 29
66. பதிற்றுப்பத்து- 50: 1-7 பரணர்
67. மணிமேகலை- 15-48 -சாத்தனார்
67. பொருநராற்றுப்படை- 246: 47, 48 -முடத்தாமக் கண்ணியார்
67. சிலம்பு- 6: 30-32; 5: 163, 165; 7-27; 10-148
68. பெரியபுராணம்- 53, 54, 56, 59 -சேக்கிழார்
70. திருப்புகழ்- 100, 497 -அருணகிரிநாதர்
70. தனிப்பாடல் -பரராச சிங்கன்
70. பாரதிதாசனார் கவிதைகள்
71. அம்பிகாபதி காதல் காப்பியம்- நாடு நகர் நலங் கூறுகாதை- 98, 99 -சுந்தர சண்முகனார்

71. திவ்வியப் பிரபந்தம் 908 -தொண்டரடிப்பொடி ஆழ்வார்
71. பதிற்றுப்பத்து- 50-5 -பரணர்
72. பெரிய புராணம் 58 -சேக்கிழார்
72. அம்பிகாபதி காதல் காப்பியம்-நாடு நகர் நலங் கூறு காதை 97 -சு. ச.
80. அகம்- 213: 21-23 -தாயங்கண்ணனார்
80. பெரியபுராணம்- 3576 -சேக்கிழார்
81. திருக்குறள்- 17 -திருவள்ளுவர்
83. வி. சோ. உலா- 25, 26 -ஒ. கூத்தர்
84. கு. சோ. உலா- 35, 35 -ஒ. கூத்தர்
8. கு. சோ. பிள்ளைத்தமிழ்- 3, 48 -ஒ. கூத்தர்
84. கலிங்கத்துப் பரணி- 167 -செயங்கொண்டார்
85. இரங்கேச வெண்பா- 55
86. சிலம்பு- 7- கானல் வரி- 2; 25-120, 121
87. இராசராசசோழன் உலா- 457, 458; 43, 44; 46 , 64 -ஒ. கூத்தர்
88. கு. சோ. பிள்ளைத் தமிழ்-கடை திறப்பு- 31 ஒ. கூத்தர்
88. பெரிய புராணம்-55, 518 -சேக்கிழார்
88. கம்பராமாயணம்-கங்கை காண் படலம் -கம்பர்
89. பாரதியார் கவிதைகள் -பாரத தேசம் -6
89. பாரதிதாசனார் கவிதைகள்
89. மலரும் மாலையும் -கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
91. பட்டினப்பாலை- 97, 98 -க. உ. கண்ணனார்
91. மலைபடுகடாம்- 527-28 -பெருங்கௌசிகனார்
92. அகம்- 123 : 10, 11; 126 : 3-5 -காரிக்கண்ணனார் -நக்கீரர்
92. புறம்- 166: 26-28 -ஆவூர் மூலங்கிழார்
92. மணிமேகலை- 5-39 ; 22-43 -சாத்தனார்
92. சிலம்பு- 10-32, 33; 6: 162-63; 10: 106-108

93. வி. சோ. உலா- 23-24 -ஒ. கூத்தர்
93. பெரிய புராணம்- 12 -சேக்கிழார்
93. முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் - சிறு பறை றப் பருவம்-2 -குமரகுருபரர்
94. திருப்புகழ் 250, 904 -அருணகிரிநாதர்
115. அகம்- 36: 13-23 -மதுரை நக்கீரர்
116. புறம்- 99: 8-11 -ஔவையார்
117. திருக்குறள்- 400 -திருவள்ளுவர்
117. திருநாவுக்கரசர் தேவாரம்- திருவானைக்காப் பதிகம்
127. அகம்- 44-7, 8 -குடவாயிற் கீரத்தனார்
128. சிலம்பு- 25- 156, 157 -இளங்கோவடிகள்
129. அகம்-97-12, 13; மாமூலனார்
129. அகம்- 258-1, 2 -பரணர்
நடந்தாய் வாழி காவேரி -தி. ஜானகிராமன்
தமிழ்க் கலைக் களஞ்சியம் -தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை.

★